தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

தொகுதி - XXXII

செங்கல்பட்டு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - II

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2025 திருவள்ளுவர் ஆண்டு 2056

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண்: 71

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

தொகுதி – XXXII

செங்கல்பட்டு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி –II

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண்: 71

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்
தொகுதி – XXXII

செங்கல்பட்டு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி – II

முனைவர் இரா. சிவானந்தம்
கி. பாக்கியலட்சுமி

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை – 600 008
2025- திருவள்ளுவர் ஆண்டு 2056

BIBLIOGRAPHICAL DATA

Title	:	TAMILNADU INSCRIPTIONS – VOL. XXXII (Chengalpattu District Inscriptions - Vol. II)
Editor's	:	Dr. R. Sivanantham
	:	K. Bakialakshmi
Copy right	:	Tamil Nadu State Dept. of Archaeology
Subject	:	Epigraphy
Language	:	Tamil & English
Edition	:	First
Publication No	:	374
Year	:	2025
Type point	:	12
No. of pages	:	268
No. of copies	:	1000
Paper used	:	80 Gsm. Maplitho paper
Publisher	:	State Department of Archaeology, Tamil Valarchi Valaagam, Thamizh Salai, Egmore, Chennai - 600 008.
Printed by	:	The Chennai Printing and Stationery worker's Industrial Co-operative Society Ltd., New No. 19. (Old No. 10) Saravana st, Kondithope, Chennai-600 079
Price	:	Rs. 185/-

பொருளடக்கம்

	பதிப்புரை	...	i
	முன்னுரை	...	iii
1.	திருக்கச்சூர்	...	1
2.	செங்கல்பட்டு	...	189
	நிழற்படங்கள்	...	197
	சொல்லடைவு	...	239

இ. க. ஆண்டறிக்கை - இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கை

தெ. க. தொ. - தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி

ARE. - Annual Reports on (South) Indian Epigrapy

EI. - Epigraphia Indica

SII. - South Indian Inscriptions

த. உதயச்சந்திரன், இ.ஆ.ப.,

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (ம)
ஆணையர் (மு.கூ.பொ)

தொல்லியல் துறை
தமிழ்வளர்ச்சி வளாகம்,
தமிழ்ச்சாலை,
சென்னை-600 008

பதிப்புரை

வரலாற்றினை எழுதுவதற்கு துணைபுரியும் சான்றுகளாகத் திகழ்பவை கல்வெட்டுகள், காசுகள், செப்பேடுகள், அகழாய்வுத் தொல்பொருட்கள், வரலாற்றுச் சின்னங்கள், இலக்கியங்கள் போன்றவையாகும். வரலாற்றினை அறிய உதவும் கல்வெட்டுகளைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையானது தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து, படித்து, பதிப்பித்து, நூலாக வெளியிடும் பணியினைத் தனது முதன்மைப் பணிகளில் ஒன்றாக செய்து வருகிறது.

இத்துறைக் கல்வெட்டுப்பிரிவு வாயிலாக இதுவரை 10,763 கல்வெட்டுகள் 70 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 2025-ஆம் ஆண்டில் இந்நூல் கல்வெட்டு வரிசை எண் 71- ஆவது நூலாக வெளியிடப்படுகின்றது. செங்கல்பட்டு மற்றும் பிற ஊர்களிலிருந்தும் படியெடுக்கப்பட்ட 130 கல்வெட்டுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியில் திருக்கச்சூர் ஆகிய ஊர்களின் கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி XXXII (செங்கல்பட்டு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி -II) என்னும் தலைப்பில் வெளிவருகின்றது.

இக்கல்வெட்டுகளைப் படித்து பதிப்பித்து நூலாக வெளிவரும் பணியினை மேற்கொண்ட இத்துறையின் இணை இயக்குநர் முனைவர் இரா. சிவானந்தம் அவர்களுக்கும், உதவி இயக்குநர் (தொழில்நுட்பம்) திருமதி கி. பாக்கியலட்சுமி அவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை தட்டச்சு, D.T.P. மற்றும் நிழற்படங்கள், அட்டைப்படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திரு. மு. சக்திவேல் அவர்களுக்கும், எனது பாராட்டுகள்.

துறை அலுவலர்களின் உழைப்பாலும், பெரும் முயற்சியாலும் இது போன்ற நூல்களை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். முதன்மை தரவுகளாக உள்ள இக்கல்வெட்டு வாசகங்களை ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள் பயன்படுத்தி இப்பகுதியின் வரலாற்றினை எழுதுவதற்கு உதவும் என்ற நோக்கில் இந்நூலினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (ம)
ஆணையர் (மு.கூ.பொ)

முன்னுரை

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருக்கச்சூர், செங்கல்பட்டு ஆகிய ஊர்க் கல்வெட்டுகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. திருக்கச்சூர் கச்சபேசுவரர் கோயிலில் மட்டும் 130 கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை சோழர், பாண்டியர், தெலுங்குச்சோழர், காடவராயர், சம்புவராயர், விஜயநகரர் அரசுகளின் கல்வெட்டுகளாகும். இவற்றில் சோழர் காலக் கல்வெட்டுகளே அதிகம் உள்ளன. பாண்டியர் காலக் கல்வெட்டுகள் 32 கல்வெட்டுகள் கிடைக்கப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். திருக்கச்சூர் கச்சபேசுவரர் கோயிலில் கிடைக்கப்பெற்றுள்ள கல்வெட்டுகளில் காலத்தால் முந்தையது சோழ மன்னன் வீர ராஜேந்திரனின் 4 மற்றும் 6-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளே ஆகும். எனவே, இக்கோயில் வீர ராஜேந்திரனின் காலத்திற்கு முற்பட்டது எனலாம்.

வீர ராஜேந்திரனின் கல்வெட்டுகள் இரண்டும் திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் மாகணூர் நாட்டு பெரும்பேடு ஊர்த் தலைவன் கங்கைகொண்டான் என்பவனும், அயண்டம்பாக்கத்து ஊர்த் தலைவன் திருவாண்டான் காமன் என்பவனும் சந்தி விளக்கு வைப்பதற்கு காசுகள் கொடையளித்த செய்தியைத் தெரிவிக்கின்றன.

பொ.ஆ. 1140-ஆம்ஆண்டு நித்தவிநோத நல்லூர் ஊர் நிர்வாகிகள் ஏலத்தில்விட்ட 100 குழி நிலத்தை நடுநாட்டு திருக்கோவிலூர் ஊரைச்சார்ந்த சத்ருகாலன் மருந்தன் என்பவர் அந்நிலத்தை வாங்கி இக்கோயிலில் நந்தா விளக்கு வைப்பதற்கு வழங்கியுள்ளார்.

இரண்டாம் இராஜாதிராஜன் காலத்தில் (பொ.ஆ.1171) திருக்கச்சூர் கோயிலில் விளக்குகள், வழிபாடு மற்றும் உலாவிற்கு தேவையான எண்ணெய்க்காக, செக்கு ஒன்றுக்கு ஒரு பழங்காசு வழங்குவதாக காஞ்சி நகர வாணியரும் 'இருபத்து நான்கு நகரம்' என்கிற வணிகக் குழுவினரும் உறுதியளித்துள்ளனர். பொ.ஆ.1178-ஆம் ஆண்டு வாணியன் செந்தாமரைக்கண்ணன் என்பவர் திருக்கச்சூர் கோயிலில் ஒரு சந்தி விளக்கு எரிப்பதற்காக, 184 குழி நிலம்வழங்கியுள்ளார். வெண்கலத் தளிகையும் பித்தளைப் பொருட்களையும் குப்பை சோறுடையான் என்பவர் கொடையாக வழங்கியுள்ளார். மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து புவனமுழுதுப் பெருந்தெருவில் வசிக்கும் வியாபாரி காடுவெட்டி நாறப்பத்தெண்ணாயிர சிலை [செட்டி] வெண்வாயிலுடையான் என்பவர் இக்கோயிலில் ஒரு சந்தி விளக்க எரிப்பதற்கு மூன்றுப் பசுக்களை அளித்துள்ளார்.

அதேபோன்று, மூன்றாம் இராஜராஜனின் 12-ஆம் ஆட்சியாண்டில் (பொ.ஆ.1228) திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் வழிபடும் சிவனடியார்அம்பருடையான்இரகொடு வந்தான் திருநட்டப்பெருமாள் என்பவர் இக்கோயிலுக்கு இரண்டு பரிகலன்களைக்

கொடையாக வழங்கியுள்ளார். இம்மன்னனின் 18-ஆம் ஆண்டில் குலோத்துங்கசோழ கண்ணப்பன் தூசி நீலகங்கரையன் ஆதிநாதன் உள்ளாரில் நல்லான் என்பவர் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலுக்கு 270 பலம் எடை கொண்ட வெண்கலத்தினாலான திருப்பரிகலம், பித்தளையில் ஆன வட்டணைக்கால், வெண்கலத்தினாலான வட்டில், வெள்ளி வட்டில் ஆகியவை தானமளித்துள்ளார். மேலும், பெரும்பற்றப்புலியூர் (சிதம்பரம்) மேற்கு வாயிலிலும், காஞ்சிபுரம் கங்கைகொண்டான் மண்டபத்திலும் இவரது வருகையை அறிவிக்க வெள்ளிக் காளம் ஒன்றினையும் வழங்கியுள்ளார் என்ற செய்தி காணப்படுகிறது.

மூன்றாம் குலோத்துங்கசோழனின் 10-ஆம் ஆட்சிக்காலத்தில் (பொ.ஆ. 1215) இவ்வூர் நிலங்கள் பயிர் விளைச்சல் இன்றி இருந்தமையால் இக்கோயில் இறைவனுக்கு நான்கு வகை கறிஅமுது, நெய், தயிர், அடைக்காய், அரிசி ஆகியவைப் படைக்கவும் பதினொன்று சந்தி விளக்கு வைப்பதற்கும் ஆயலூர் ஊர்த்தலைவனும் ஓய்மா நாட்டு வேளானுமாகிய குப்பை சோறுடையான் என்பவரிடம் பதினைந்து காசுகள் பெற்றுக்கொண்டு நிலம் ஒன்றினை பொ.ஆ 1215-ஆம் ஆண்டில் இவ்வூரார் விற்றுக்கொடுத்துள்ளனர். இக்கல்வெட்டின் மற்றொரு நகலும் இக்கோயிலில் வெட்டப்பட்டுள்ளது. மூன்றாம் குலோத்துங்கசோழனின் காலத்தில் பயிர் விளைச்சல் இன்றி இருந்தது என்ற குறிப்பு மட்டும் காணப்படுகிறது. ஆனால், இக்கல்வெட்டில் 10-ஆம்ஆண்டு பற்றியக் குறிப்பு காணப்படவில்லை.

பொ.ஆ. 1213-இல் திருக்கச்சூர்திருவாலக்கோயிலுக்குரிய தேவதான நிலங்கள் குறைந்ததால் கோயிலில் நடைபெறும் பூசை, கோயில் திருப்பணிகள் ஆகியவை நடைபெறவில்லை என கோயில் நிர்வாகிகள் (தானத்தார்கள்) முறையிட்டதின் அடிப்படையில் மடையார் புன்னியம் என்கிற ஊரில் உள்ள தேவதான நிலம் மற்றும் பள்ளிச்சந்தம் நிலம் ஆகியவற்றை நீக்கி மீதமுள்ள 67 வேலி நிலமும் கொல்லை நிலமும் திருவாலக்கோயில் வழிபாட்டுத் தேவைகளுக்கு நந்திபன்மன் என்ற அதிகாரியால் வழங்கப்பட்டுள்ளது.

களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டு முல்லைப்பாடி ஊரைச் சார்ந்த திருச்சுரக்கண்ணப்பன் ஆதிநாயகன் பஞ்சநதிவாணன் ராஜராஜ நீலகங்கரையன் என்பவர் திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் ஒரு நந்தாவிளக்கு எரிப்பதற்கு 32 பசுக்களும் ஒரு காளையும் வழங்கிய செய்தியை மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டு வாயிலாக அறிகிறோம்.

சேதிராயன் என்ற அதிகாரி வைத்த கோரிக்கையின் அடிப்படையில் செங்குன்றம் என்கிற அருமொழிதேவ நல்லூரில் 47 வேலி நிலமும் வல்ல நாட்டில் வெள்ளாள மடையர் புன்னியம் நிலம் 67 வேலி நிலமும் திருக்கச்சூர் திருவாலக்கோயில் வழிபாட்டுத் தேவைகளுக்காக இந்நிலத்தின் மீதான வரிகளை நீக்கி மூன்றாம் குலோத்துங்கசோழன் நேரடி ஆணை வழங்கியுள்ளான்.

சோழர் காலத்தில் இக்கோயிலில் நெய் அளப்பதற்கு இராசகேசரி' என்னும் அளவை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை தொ.எண். 160, 164 முதலான கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம். பாண்டியர் ஆட்சிக் காலத்திலும் இராசகேசரி என்ற அளவையை பயன்படுத்தியுள்ளனர் என்பதை சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலக் (பொ.ஆ. 1258) கல்வெட்டால் அறிகிறோம்.

மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சியில் இவ்வூர் மன்றாடி மாடத்தான் மகன் சாமிகோன் என்பவர் இக்கோயில் சிவபிராமணர்களிடம் இருபத்து நான்கு ஆடுகளைப் பெற்றுக்கொண்டு இராசகேசரி என்னும் அளவையால் இரண்டு சந்தி விளக்குகளுக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு நாழி நெய் அளப்பதாகஉறுதியளித்துள்ளார். மேலும், இவரே இதற்கு முன்னர் இக்கோயில் பண்டாரத்தில் இருந்து பன்னிரெண்டு ஆடுகளைப் பெற்றுக்கொண்டு மூன்று சந்தி விளக்கு எரிப்பதற்கு மாதம் ஒன்றுக்கு நாழி அளவு நெய் அளப்பதாகவும் தெரிவித்து உடன்படிக்கை செய்து கொடுத்துள்ளார். 12 ஆடுகள் மூலம் மாதம் ஒன்றிற்கு நாழி அளவு நெய் அளக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

சோழர் ஆட்சி நிருவாகத்தில் அரசாணை தயார் செய்து எங்ஙனம் வழங்கப்படுகிறது என்பதை மூன்றாம் குலோத்துங்கனின் 21-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறிகிறோம். மாங்காட்டு நாட்டுப் பாரிபாக்கம் ஊரில் 25 வேலி நிலமும், அரும்பாக்கம் ஊரில் 40 வேலி நிலமும், மாத்தூர் ஊரில் 10 வேலி நிலமும் ஆக மொத்தம் 75 வேலி நிலம் இக்கோயிலில் தினசரி வழிபாட்டுத்தேவைகளுக்குத் தேவதான இறையிலியாக மன்னனால் வழங்கப்பட்டுள்ளது. மன்னனின் நேரடி ஆணையான 'திருமந்திர ஓலை' மூவேந்த வேளான் என்னும் அதிகாரியால் தயார் செய்யப்பட்டு வரிக்கூறு செய்வார்கள் வழியாக தானமாக வழங்கப்பட்ட ஊரான மாங்காட்டு நாட்டு கூத்தன்பாக்கம் ஊரின் திருவையார் கோயில் தேவகன்மி, மாகேசுவரர் கண்காணி, கோயில் காரியம் செய்வார்கள் ஆகியோருக்கு மன்னனின் ஆணை முறையாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் இக்கோயிலைச் சார்ந்த தேவரடியார் அரியபிள்ளை மகள் பொருதபிள்ளை என்கிற அபிமான பூஷண மாணிக்கம் என்பவர் இக்கோயிலில் விளக்கு ஒன்று எரிப்பதற்குத் தானம் அளித்துள்ளார். பாண்டிய மன்னன் சடையவர்மன் சுந்தர பாண்டியன் ஆட்சிக் காலத்தில் (பொ.ஆ.1258) தேவரடியார் போகமாத்தாள் மகள் உற்றாநாச்சி என்பவர் பெண் உருவிலான பித்தளை விளக்கின் மீது நந்தா விளக்கு எரிப்பதற்கு 30 பசுக்களைத் தானமாக வழங்கியுள்ளார்.

பொ.ஆ. 1222-ஆம் ஆண்டில் செங்குன்றம் ஊரின் புற ஊரான ஆம்பர்பாக்கம் எனும் இரந்திடு தியாகிநல்லூர் ஊரில் நீர்ப்பாசனத்திற்கு ஏரி இல்லை என்பதால் வெண்சின்றியம்பாக்கத்தில் பெரியதேவப் புத்தேரியில் தூம்பு செய்து இரந்திடு தியாகிநல்லூரில் 240 குழி நிலத்திற்குப் பாசன வசதி செய்துக் கொடுத்துள்ளனர். இவ்விரு ஊரிலுள்ள நிலங்களின் விழுக்காடுகள் அடிப்படையில் நீர்ப்பாசனம் அமைய வேண்டும் என்றும் உடன்படிக்கைச் செய்துக் கொடுத்துள்ளனர்.

திருக்கச்சூர் கச்சபேசுவரர் கோயிலில் பணியாற்றிய சிவபிராமணர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் பூசை உரிமை வழங்கப்பட்டுள்ளது. மூன்றாம் இராஜராஜன் காலத்தில் இக்கோயிலைச் சார்ந்த ஸ்ரீகாஞ்சிக்குறி ஸ்ரீகண்டபட்டன் உடைய பிள்ளை என்கிற நித்தியகல்யாண பட்டன் என்பவருக்கு நான்கில் ஒரு பங்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் இக்கோயிலில் பணியாற்றும் சிவபிராமணர்களுக்கு 44 வட்டக் காணியாக பூசை உரிமை வழங்கப்பட்டுள்ளதை காண்கிறோம். காஞ்சிபுரம் திருவேகம்பமுடையார் கோயிலில் பூசை செய்யும் நம்பிமாரில் காஞ்சை அநவரத சுந்தரபட்டன் நல்லனாயன் மற்றும் காஞ்சிக்குறி ஸ்ரீகண்டன் பெருமாள்க்கள திருச்சிற்றம்பலமுடையார் ஆகிய இருவருக்கும் திருக்கச்சூர் ஊருக்கு வடக்கில் இரண்டாயிர வேலிப்பற்றில் குறும்பன் மேட்டில் 2 வேலி நிலத்தினை 'பட்டவிருத்தி அகரமாக' சடையவர்மன் சுந்தரபாண்டிய மன்னனால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விருவருக்கும் வீட்டு மனை ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

பாண்டிய மன்னன் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் (பொ.ஆ.1289) இவ்வூர் வியாபாரிகள், கைக்கோளர், சாலியர், வணிகர் ஆகியோரிடம் ஆண்டொன்றுக்கு ஆறு பணம் வரியாக வசூலித்துள்ளனர். இத்தொகையில் பாதியினை இக்கோயில் பண்டாரத்துக்கு வழங்கிட பொத்தப்பிராயன் என்கிற அதிகாரி உத்திரவிட்டுள்ளார்.

செங்காட்டுக் கோட்டத்து கோனாதி நாட்டுக் காவனூர் ஆன பொய்யாமொழி மங்கலம் என்ற ஊரில் அமைந்திருந்த கடிகையின் உறுப்பினரான (கற்றோர்களின் சபை) முத்தமிழ் ஆசாரியர் ஆன தமிழ்கரைகண்ட சாத்தனாருடைய பரம்பரையில் வந்த பெருநம்பிகள் என்பவர் பொய்யாமொழி மங்கலத்தை தனக்கு உரிமையாக பெற்றிருந்தார் என்று பொ.ஆ.13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்றுப் பகர்கிறது.

இரண்டாயிரவேலிப் பற்று என்கிற நிருவாகப் பிரிவில் வசித்த கால்நடைகளை மேய்க்கும் மன்றாடிகளிடம் மேய்ச்சல் நிலத்தில் கால்நடைகளை மேய்ப்பதற்கு ஆட்டிறைப்பாட்டம் என்கிற வரியினை வசூலித்துள்ளனர். ஆண்டொன்றுக்கு 10 மாடுகளுக்கு ஒரு பணமும், 5 எருமைகளுக்கு ஒரு பணமும், 50 ஆடுகளுக்கு ஒரு பணமும் மேய்ச்சல் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு எருமையானது இரண்டு மாடுகளுக்கும் 10 ஆடுகளுக்கும் சமமானது எனத்தெரியவருகிறது. அத்தொகை மாதந்தோறும் தவறாமல் வசூலிக்கவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த வரியை செலுத்த ஒப்புக்கொண்டு குடியேறும் புதிய மன்றாடிக் குடும்பங்களை சேர்த்துக்கொள்ளவும் தீர்மானித்துள்ள செய்தியை மாறவர்மன் வீரபாண்டியன் கல்வெட்டால் (பொ.ஆ.1344) அறிகிறோம். பின்னர், விஜயநகர அரசர் விருப்பண்ண உடையார் ஆட்சிக் காலத்தில் (பொ.ஆ 1442) திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலுக்கு இரண்டாயிரவேலிப் பற்றைச் சார்ந்த மன்றாடிகள் 'திருநுந்தாவிளக்குச் சாவாமூவாக்குடி' ஆக

நியமிக்கப்பட்டிருந்தனர். அழகன் ஆன நாற்பத்தெண்ணாயிரக்கோன் மற்றும் இவரது தம்பி கண்ணாளன் ஆகிய இவ்விரும் திருநுந்தாவிளக்கு குடி ஆக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உணவும் கோயிலிலிருந்து மன்றாடிகள் பெறும் வரிகளையும் பெற்றுக்கொள்ள இரண்டாயிரப்பற்று மன்றாடிகளும் சமைய கணக்கன் வண்டுவராபதி ஆகியோரும் அனுமதி வழங்கியுள்ளனர். மூன்றாண்டுகளுக்குப் பிறகு இக்கோயிலில் திருநுந்தாவிளக்கு வைப்பதற்கும் சீபாதம் தாங்கவும் கோபத்தராயன் மகன் கம்பன் மற்றும் ஆளப்பிறந்தான் கோன் மகன் பெரிய முதலி ஆகிய இருவரையும் 'திருநந்தாவிளக்கு சாவாமூவாக்குடி' ஆக இரண்டாயிரப்பற்று மன்றாடிகள் நாட்டுச் சார்பாக நியமித்துள்ளனர். முன்னர் சொன்னது போல இவர்களுக்கும் உணவும் மன்றாடிகள் பெறும் வரிகளையும் பெற்றுக்கொள்ள உரிமை வழங்கியுள்ளனர்.

முந்தைய அரசர்களின் ஆட்சிக்காலங்களில் வழங்கப்பட்ட கொடைகளைச் சுட்டிக்காட்டி விளக்கு எரிப்பதற்கு செய்து கொண்ட உடன்படிக்கை பற்றி விரிவாக தெரிவிக்கும் கல்வெட்டொன்று இடம்பெற்றுள்ளது.

சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கசோழ தேவரின் -20-ஆம் ஆட்சியாண்டில் (பொ.ஆ. 1178) கிரந்தை அமர்கணாயகன் காக்குநாயகன் மற்றும் அவருடைய தம்பி திருவாலக்கோயிலுடையான் ஆகிய இவ்விருவரும் 525 குழி நிலமும் கிணறு ஒன்றையும் தானமாக இக்கோயிலில் சந்தி விளக்கெரிக்க வழிவகை செய்துள்ளனர். பின்னர், இந்த நிலமும் கிணறும் அந்தத் தானம் செய்தவரின் மகன்களில் ஒருவரான கிரந்தை அறுமணிநாயகர் என்பவரிடம் பல்வேறு காலங்களில் வழங்கிய 12 பழங்காசு, 1260 நற்காசு மற்றும் 32 பணம் ஆகிய மொத்த தொகைக்குக் சிவபிராமணர்களால் விற்கப்பட்டது. இம்மன்னனின் 38ஆம் ஆட்சியாண்டில் (பொ.ஆ.1196) இக்கோயிலைச்சார்ந்த தில்லைக்கூத்த பட்டன் என்பவர் கால் விளக்கு எரிப்பதற்கு 5 பழங்காசுகள் பெற்றுக்கொண்டுள்ளார். மூன்றாம் இராசராசனின் 15-ஆம் ஆட்சியாண்டில் (பொ.ஆ. 1233) ஸ்ரீகண்ட பட்டன் முதலியோர் இக்கோயிலில் கால் விளக்கு எரிப்பதற்கு 7 பழங்காசுகள் பெற்றுக்கொண்டுள்ளனர். இதே மன்னனின் 27-ஆவது ஆட்சியாண்டில் (பொ.ஆ. 1245) ஆன நாற்பத்தெண்ணாயிர பட்டன்என்பவர் இக்கோயிலில் கால் விளக்கு எரிக்க 1260 நற்காசுகள் பெற்றுக்கொண்டுள்ளார்.

[சடையவர்மன்] பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியனின் 7-ஆம் ஆட்சியாண்டில்(பொ.ஆ.1258) சுந்தர பட்டன், மாதேவ பட்டன் உள்ளிட்டோர் 15 பணம் பெற்றுக்கொண்டுள்ளனர். மேலும், திருச்சிற்றம்பல பட்டன் பீமன் ஆன பன்மாகேசுர பட்டன் என்பவர் 11 பணம் பெற்றுக்கொண்டு ஓர் அரையே அரைக்காணி முந்திரிகை விளக்கு எரிக்க சம்மதித்துள்ளார். திருவகத்தி பட்டன் அரை விளக்கு எரிப்பதற்கு 3 பணம் பெற்றுக்கொண்டுள்ளார். நாற்பத்தெண்ணாயிர பட்டன் முதலியோர் காணி அரைக்காணி முந்திரிகை விளக்குக்காக 3 பணம் பெற்றுள்ளனர். சதாசிவ பட்டன் உள்ளிட்டோர் காணி அரைக்காணி விளக்கு எரிப்பதற்கு 3 பணம் பெற்றுக்கொண்டுள்ளனர்.

மேற்கூறப்பட்டுள்ள பல்வேறு காலக்கட்டங்களில் இக்கோயில் சிவபிராமணர்கள் பெற்றுக்கொண்ட 12 பழங்காசு, 1260 நற்காசுகள், 32 பணம் ஆகியவற்றின் மூலம் கிரந்தை அறுமணிநாயகருக்கு இந்நிலத்தை விற்றுக்கொடுத்துள்ளனர். மேலும், அனைத்து சிவபிராமணர்களும் நந்தா விளக்கை தொடர்ந்து ஏற்றுவதற்கும் ஒப்புக்கொண்டனர் என்று இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் (பொ.ஆ. 1178) வழங்கப்பட்ட நிலதானம் 88 ஆண்டுகளுக்குப் பிறகு பாண்டிய மன்னன் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் (பொ.ஆ.1266) தானமளித்தவரின் மகனுக்கு மீண்டும் அந்நிலத்தை விற்றுக்கொடுத்துள்னர் என்ற செய்தியை அறிகிறோம்.

செங்குன்ற நாட்டு முல்லைப்பாடி ஊரைச் சார்ந்த திருச்சுரக்கண்ணப்பன் ஆதி நாயகன் பஞ்சநதிவாணன் எனும் இராஜராஜ நீலகங்கரையன் என்பவர் திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் இத்திருநடைமாளிகையை கட்டியுள்ளார். சுந்தர பாண்டியன் ஆட்சிக்காலத்தில் திருக்கச்சூர் கச்சபேசுவரர் கோயில் கிழக்குப் புறத்தில் சுந்தர பாண்டியன் மண்டபம் எடுக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தினை விக்கிரமசோழ தேவனான இருங்கோளன் என்பவர் எடுத்துள்ளார். இவர் பாண்டிய மன்னன் சுந்தர பாண்டியனின் படைத்தளபதியாக செயல்பட்டுள்ளார் என்பதை சுந்தர பாண்டிய தேவர் முதலிகளில் விக்கிரமசோழ தேவன் என்ற குறிப்பின் வாயிலாக அறியமுடிகிறது. மற்றொரு துண்டுக் கல்வெட்டில் ஸ்ரீவிக்கிரமசோழ தேவன் இருங்கோளன் என்ற குறிப்பு மட்டும் காணப்படுகிறது.

திருக்கச்சூர் மருந்தீசுவரர் கோயிலின் படிக்கட்டுகளை (சோபானம்) களத்தூர் கோட்டத்து ஐஞ்சுர முல்லைப்பாடித் திருச்சுரக் கண்ணப்பன் பஞ்சநதிவாணன் நல்லநாயகன் ஆன குருகுலத்தரையன் எனபவர் செய்து கொடுத்துள்ளார். பஞ்சநதிவாணன் நல்லநாயகன் பற்றிய குறிப்புகள் இவ்வூரிலுள்ள பல்வேறுக் கல்வெட்டுகளில் காண முடிகிறது. இப்பகுதியில் அதிகாரியாக செயல்பட்டுள்ளார் என்பதைக் காண்கிறோம்.

பாண்டிய மன்னன் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 13-ஆம் ஆட்சியாண்டில்(கி.பி. 1263) ஆமூர் கோட்டத்து இரண்டாயிரவேலிப் பற்று தாமுழான் நாட்டிலுள்ள உத்திப்பக்கம் என்கிற ஆதிநாயக்கச் சதுர்வேதிமங்கலத்தைச் சேர்ந்த ஆவணச்சேட்டு ஐயன் என்பவரின் மகன்களான ஆட்கொண்டவில்லி, பாம்பணையான், சகஸ்ரகிரன், வரதன், செல்வன் ஆகிய பிராமணர்கள், பிரமணர்களைவெட்டியும், செவிகளை அறுத்தும், பிராமணப் பெண்களைத் துன்புறுத்தியும், களவு செய்தும், போன்ற அநியாயங்களை செய்த அக்குற்றவாளிகளுக்கு அந்த நாட்டினைச் சேர்ந்த அகர பிரம்மதேசம், வேளான் ஊர்கள் மற்றும் நகர் மக்கள் வேண்டுகோளின் பேரில் விதிக்கப்பட்ட தண்டனைகளைப் பற்றி விவரிக்கிறது. முன்பு நாட்டு நிர்வாகம் செய்த அதிகாரி விக்கிரமசோழதேவர் இருங்கோளான், தனியன் வாணராயர் திருமலைதந்தார்ஆன முனையதரையர் உள்ளிட்ட அதிகாரிகளால் இக்குற்றவாளிகளை

அடக்கமுடியவில்லை. பின்னர், பிள்ளை பொத்தப்பிராயர் என்ற அதிகாரி, குற்றவாளிகளைப் பிடித்து சிறையில் அடைத்தார். மேலும், இவர்களுக்கு கீழின மக்களைத்தண்டிக்கும் முறையிலே தண்டனைகளை வழங்கி, அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்து, அவற்றைக் கோயில்களுக்கு விற்பனை செய்ய உத்தரவிட்டார். உத்திப்பக்கத்தில் இருந்த அவர்களது சொத்துக்கள், திருவகத்தீஸ்வரமுடைய நாயனார் மற்றும் ஸ்ரீகயிலாமூடைய நாயனார் கோயில்களுக்கு 200 பணம் மதிப்பில் விற்பனை செய்யப்பட்டது. அந்தப் பணம் திருக்கச்சியூரில் உள்ள கோயிலில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளது. இது அன்றைய நிதி நிருவாக முறையை எடுத்துரைக்கிறது.

புலிப்பாக்கம் ஊரில் பயிர் செய்து கொண்டிருந்த உழுகுடிகள் தங்களது காணி உரிமையைத் துறந்தனர். புலிப்பாக்கம் ஊர்ச் சபையிடமிருந்து திருநாமத்துக்காணியாக முன்பு வாங்கப்பட்ட புன்னியம் என்ற கிராமத்தின் காணி உரிமையை, திருக்கச்சூர் ஊரின் கைக்கோளர் மற்றும் கைக்கோள முதலிகளுக்கு கோயில் நிர்வாகம் 600 பணம் பெற்றுக்கொண்டு விற்றுக் கொடுத்துள்ளனர்.

செங்காட்டுக் கோட்டத்து கோனாதி நாட்டுக் கடிகையார் திருநாமத்துக்காணியாக நிலதானம் வழங்கியச் செய்தியை பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. கடிகை என்பது கல்விச்சாலை ஆகும். இந்த கடிகையின் உறுப்பினராக முத்தமிழ் ஆசாரியர் ஆன தமிழ்கரைக் கண்ட சாத்தானாரின் பரம்பரையில் வந்த பெருநம்பிகள் என்பவருக்கு பொய்யாமொழி மங்கலம் என்கிற ஊர் அவருக்கு உரிமையாக வழங்கப்பட்டுள்ளது என்று மற்றொருக் கல்வெட்டுத் (தொடர் எண் 183) தெரிவிக்கிறது.

மூன்றாம் குலோத்துங்கன் 17-ஆம் ஆட்சியாண்டில் (பொ.ஆ.1195) இராஜராஜ நீலகங்கரையன் நந்தவனம் அமைக்க 157½ குழி நிலம் தானமாக வழங்கியுள்ளார். மூன்றாம் இராஜராஜன் ஆட்சிக்காலத்தில் மருந்தன் திருநந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது. தெலுங்குச்சோழர் விஜையகண்டகோபாலன் ஆட்சிக்காலத்தில் இப்பகுதி அதிகாரி நீலகங்கரையன் என்னும் அதிகாரி தனது பெயரில் 'நீலகங்கரையன் நந்தவனம்' என்ற நந்தவனத்தினை ஏற்படுத்தி, அதனைப் பராமரிப்பதற்கு தாளிமங்கலம் ஊரின் வரிகளைப் பயன்படுத்திக் கொள்ள ஆணையிட்டுள்ளார். திருக்கச்சூர் எனும் நித்தவினோத நல்லூர் ஊரைச் சார்ந்த செம்பங்குடையான் சோறன் அவையாண்டை என்பவர் திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் ‘திருஞானசம்பந்தன் திருநந்தவனம்’ என்ற பெயரில் நந்தவனம் அமைப்பதற்கு 382 குழி நிலம் தானமளித்துள்ளார்.

திருக்கச்சூர் திருவாலக்கோயில் திருமடை விளாகத்தில் தியாகவிநோதன் என்கிற மடம் செயல்பட்டுள்ளது. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் இந்த மடத்தைச் சார்ந்த புஷ்பகிரி மாணிக்க கூத்தன் என்பவர் இக்கோயிலில் நந்தா விளக்கு எரிப்பதற்கு அன்றாடு நற்காசுகள் வழங்கியுள்ளார். மேலும், தெலுங்குச் சோழர் விசையகண்டகோபாலன் ஆட்சிக்காலத்தில் (பொ.ஆ. 1275) தியாகவிநோதன் மடத்தை நிருவகிக்கும் நிருவாகி

திருப்பாதிரிப்புலியூர் ஊரைச் சார்ந்த விஸ்வேஸ்வர தேவன் என்பவர் சந்தி விளக்கு வைப்பதற்கு 40 வாசிபடா நற்பணம் அளித்துள்ளார். சடையவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் அணுக்கவன் தொண்டன் என்கிற பெயரில் மடம் ஒன்று செயல்பட்டுள்ளது. இவ்வூரில் மருத்துவம் பார்த்தவருக்கு வைத்திய விருத்தியாக நிலம் அளித்துள்ள செய்தி சடையவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு வாயிலாக அறிகிறோம். சம்புவராயர் காலத்தில் துணி நெய்யும் சாலியர்களுக்கு இக்கோயிலில் பரிவட்டம், ஒடுக்கு ஆகிய சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளது.

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள கல்வெட்டுகள் சோழர், பாண்டியர், சம்புவராயர், காடவராயர், தெலுங்குச் சோழர், விஜயநகர ஆகிய அரசுகளின் ஆட்சிக்கால அரசியல், சமூகப்பொருளாதார வரலாற்றினை அறிந்துகொள்ள உதவியாக அமையும்.

தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் பதிப்பித்து நூலாக்கம் செய்வதற்கு நிதியுதவி அளிக்கும் தமிழ்நாடு அரசிற்கு நெஞ்சார்ந்த நன்றிகள். இக்கல்வெட்டுகளை நூல் வடிவம் ஆக்குவதற்கு ஊக்கமளித்துவரும் தொல்லியல் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (ம) ஆணையர் தொல்லியல் துறை திரு. த. உதயச்சந்திரன், இஆப, அவர்களுக்கும் எங்களது உளங்கனிந்த நன்றிகள்.

இரா.சிவானந்தம்
கி.பாக்கியலட்சுமி
பதிப்பாசிரியர்கள்

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 140/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 8
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1171
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 261/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1 (22)
அரசு	: சோழர்		
அரசன்	: இரண்டாம் இராஜாதிராஜன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறைத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடையார் திருமடைவிளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த செக்குகளின் வாயிலாக இரண்டு திருநந்தாவிளக்கு எரிக்க உரி அளவு எண்ணையும், பத்து சந்தி விளக்கு எரிக்க உழக்கு எண்ணையும், அமாவசை நாளன்று வழிபாட்டிற்கு உணவுக்கும், திருவீதி உலா வரும்போது பிடி விளக்கிற்கு எண்ணையும் ஆக இவற்றிற்குத் தேவைப்படும் எண்ணெய்க்காக செக்கு ஒன்றிற்கு வரியாக பழங்காசு ஒன்று வழங்குவதாக காஞ்சி மாநகரத்து அடிக்கீழ்தலத்து மாநகர் வாணியரும், காஞ்சி மண்டலத்தைச் சார்ந்த 'இருபத்து நான்கு நகரம்' என்ற வணிக அமைப்பினரும் உறுதியளித்துள்ளனர்.

Summary : On the south wall of the central shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōl̲a -Rājadhirāja-II. r.y. 8 (1171 C.E.). Records a gift of the tax paid in oil as well as one *pal̲aṅkāśu* per oil-press from the oil-presses established on the premises of the temple of Tiruvālakkōyil-uḍaiyār of Tirukkachchūr to provide for the expenses of the temple connected with the burning of two perpetual lamps and ten twilight lamps, for food-offerings on every *amāvāsya* day and for the torches used on the occasion of taking out (the images) in procession by the assembly consisting of the oil-mongers, who went by the name of Mānagar, of Śri-Kāñchimān̲agar and the people of the 24 Nagaras of the Kāñchī-maṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கேழ்வி முன்பாகத்-
2. திரிபுவநச்சக்கரவத்திகள் ஸ்ரீஇராஜாதிராஜ தே-
3. வற்கு யாண்டு எட்டாவது தைம்மாஸத்து ஸ்ரீக-
4. ாஞ்சி மாநகரத்து அடிக்கீழ்த்தலத்து மானகரான வா-

5. ணியரோமும் இம்மண்டலத்து இருபத்து நாலு
6. நகரத்தோமும் ஸ்ரீகாஞ்சி மானகரத்துத் திருக்-
7. காட்டு பள்ளிஉடைய நாயனார் கோயிலில் குறை-
8. றவறக்கூடி நிறைவற நிறைந்து இருந்து திருக்கச்சூ-
9. ர் ஆளுடையார் திருவாலக்கோயிலுடையா-
10. ர் திருமடைவிளாகத்து இட்டு ஆடுகிற செக்கு இ-
11. ந் நாயனார்க்கு நாள் ஒன்றுக்கு எரியுந் திருநுந்தா விளக்கு இர-
12. ண்டுக்கு எண்ணை உரியும் சந்திவிளக்கு பத்துக்கு எண்ணை உழக்கும்
13. அமாவாசி ஒன்றுக்கு திருவமுது அரிசி பதக்கும் கறியமுது நிறை-
14. ற னாற்பதின் பலமும் நெய்யமுது ஆழாக்கும் மிளகமுது ஒரு செவி-
15. டும் அடைக்காயமுது பாக்கு பத்தும் இலையமுது பற்றுக்காலு-
16. ம் அப்பம் அமுதுக்கு பச்சை அரிசி குறுணியும் நெய் நாழியும்
17. சற்கரை னாழியும் திருவீதியில் எழுந்தருள பிடிவிளக்கு -
18. க்கு எண்ணை னாழியும் ஆக இப்படியால் வந்த நிமந்தத்-
19. துக்கு செக்கால் வந்த கடமை எண்ணையும் செக்-
20. குக்கு இறுக்கும் பழங்காசு ஒந்றும் இத்தனையும் நித்த நிமந்த-
21. ம் சந்திராதித்தவரை செல்வதாக ஜாதிதந்மமாக விட்டுக் கல்வெ-
22. ட்டுவித்துக் குடுத்தோம் இவ்வனைவோம் இப்படிக்கு இவை
23. நகரம் பணிக்க சமைய னாராயணத் தமிழ்வேளாந் எழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 141/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 15
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1161
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 262/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 2 (24 I, II)
அரசு	: சோழர்		
அரசன்	: இரண்டாம் இராஜராஜன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறைத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலில் ஒரு சந்தி விளக்கெரிப்பதற்கு இவ்வூர் வாணியன் செந்தாமரைக்கண்ணன் என்பவர் இக்கோயிலில் வழிபாடு செய்வதற்கு உரிமை பெற்றிருந்த காஞ்சிக்குறி ஸ்ரீகண்டபட்டன் ஏகாம்பரதேவன் மற்றும் நான்கு சிவபிராமணர்களிடம் 184 குழி நிலம் வழங்கியுள்ளார்.

Summary : On the south wall of the central shrine in the Kachchabēśvara temple. Tami̱l - Chōḻa -Rājarāja-II. r.y. 15 (1161 C.E.). Records a gift of 184 *kuḷi* land for a twilight lamp to the temple of Tiruvālakkōyiluḍaiyā-nāyaṉār of Tirukkachchūr in Seṅguṉṟa-nāḍu in Kaḷattūr kōṭṭam, in Jayaṅkoṇḍachōḻa-maṇḍalam, by Sendāmaraikkaṇṇaṉ Tiruvālakkōyiluḍaiyāṉ, an oil-monger of the same village. The land is stated to have been received by the *sivabrāhmanā* Kāñchikkuṟi Srikaṇṭa-bhaṭṭaṉ Ekaṁbiradēvaṉ and four more Sivabrāhmanās who had right (of worship) in the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ
2. தேவற்கு யாண்டு ௰ரு ஆவது ஜயங்கொண்டசோழ-
3. மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத்-
4. திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடைய நாயனார்க்கு இ-
5. வூர் வாணியன் செந்தாமரைக்கண்ணன் திருவால-
6. க்கோயிலுடையான் வைத்த சந்தி விளக்கு க க்கு இக்கோ-
7. யிலில் காணியுடைய சிவப்ராஹ்மணன் ஹாரஹூஜ காஞ்சிக்கு-
8. றி ஸ்ரீகண்ட஭ட்டன் ஏகாம்பிரதேவன் உடைய பிள்ளைகளில்

9. திருவேகம்பமுடையாரும் ஏகாம்பிரதேவரும் உடைய பிள்-
10. ளையும் திருவாலக்கோயிலுடையாரும் கைக்கொண்ட நிலம் ப-
11. மியன் கழனித் திருவாலபெருஞ்செறுவில் மேற்கடைய குழி ௱௩௰-
12. ம் ஐஞ்சு பட்டியில் மேற்கடைய குழி ௫௰௪ ஆக பதிநறு சாண் கே-
13. காலால் குழி ௱௮௰௪ இந்நிலத்தால் வந்த கடமையும் . . . . . இ-
14. றுத்து இறையிலா பத்துக்கு இவ்விளக்கு சந்திரா-
15. தித்தவரை எரிக்கக்கடவோமாகவும் இந்நிலத்தா-
16. ல் வந்த ஆள்சோறு சில்வரி வாணிகனே போக்கறு-
17. க்கடவராகவும் சிலாலேகை பண்ணிக்குடு-
18. த்தோம் இவ்வனைவோம் இது பந்மாஹே-
19. ப்வர ரெெக்ஷ உ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 142/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: -
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: 12- ஆம் நூற்.
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 263/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 3 (28)
அரசு	: சோழர்		
அரசன்	: -		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறைத் தெற்கு குமுதம்.		

குறிப்புரை : ஓய்மா நாட்டு மூவேந்த வேளானும் ஆயநல்லூர் ஊர்த்தலைவனுமாகிய குப்பை சோறுடையான் என்பவர் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடையார் கோயிலுக்கு வெண்கலத் தளிகை, பித்தளை அட்டனைக்கால், பித்தளை வடம் ஆகியவை கொடையாக அளித்துள்ளார்.

Summary : The south wall of the central shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōl̲a - 12th Century C.E. This inscription seems to be incomplete. Records a gift of some bronze and brass vessels to the temple of Tiruvālakkōyil uḍaiyār at Tirukkachchūr by Kuppai Sōr̲uḍaiyān̲, the headman of Āyanallūr and the Mūvēnda vēl̲ān̲ of Ōyṃā nāḍu in Jayaṅkoṇḍaśōl̲a-maṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஆயநல்லூர் கிழவன் குப்பை சோறுடையான் ஆன ஜயங்கொண்ட சோழ ஓய்மா நாட்டு மூவேஞ வேளான் திருக்கச்சூர் திருவாலக் கோயிலுடையார்க்கு இட்ட வெண்கலத் த-
2. ளிகை ஆயிரவநால் நிறை எண்பத்தைய்ம் பலம் தரா அட்டனைக்கால் எண்பத்தைய்ம் பலம் தண்ணீர் அமுது செய்கிற வேட்குலாஞகன் வெட்டின கால் தராவடம் பலம் படிமக்கலம் ஆயிர-
3. த்தால் இருபத்தொருபலம் தராக் குத்துவிளக்கு தொண்ணூற்று ஐம்பலம்

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 143/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 14
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1230
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 264/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 4 (23)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராஜராஜன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறைத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் என்கிற நித்தவிநோத நல்லூர் திருவாலக்கோயிலுடையார் கோயிலில் ஒரு சந்தி விளக்கு வைப்பதற்கு இவ்வூரைச் சார்ந்த கிரந்தை மாலைப்பாகம் வைத்தான் சேரிக்கூத்தன் என்பவர் இக்கோயில் சிவப்பிராமணர் உமையோடுங்கூட நின்றான் உய்யக்கொண்டான் என்கிற திருச்சிற்றம்பல பட்டன் என்பவரிடம் மூன்று நற்பழங்காசுகளை அளித்துள்ளார். இந்த மூன்று காசுகளைப் பெற்றுக்கொண்டு சந்தி விளக்கெரிப்பதாக உறுதியளித்துள்ளச் செய்தி.

Summary : On the south wall of the central shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōl̲a -Rājarāja-III. r.y. 14 (1230 C.E.). Records that a certain Kirandai Mālaippāgam vaittān̲ Sērikkūttan̲ gifted a twilight lamp to the temples of Tiruvālakkōyiluḍaiyā-nāyan̲ār of Tirukkachchūr alias Nittavinōdanallūr in Seṅgun̲r̲a-nāḍu in Kaḷattūr kōṭṭam, in Jayaṅkoṇḍachōl̲a-maṇḍalam. He endowed three *narpal̲aṅkāśu* which was received by the *sivabrāhmanā* Umaiyōḍuṅkūḍan̲in̲r̲ān̲ Uyyakkoṇḍān̲ alias Tiruchchir̲r̲ambala-bhaṭṭan̲ who had right to worship in the temple and who had undertaken to burn the twilight lamp.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவற்கு யாண்டு ௰௪ ஆவது ௰௩ நாய-
2. ற்றுப் பூவ்வபக்ஷத்து வ்யமையும் உத்திராடமும் பெற்ற நாள் ஜயங்கொண்டசோழ ம-
3. ண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூராந நித்தவிநோத ந-

4. ல்லூர் உடையார் திருவாலக்கோயிலுடையார்க்கு இவ்வூர் கிரந்தை மாலைப்பாகம் வைத்த
5. ான் சேரிக்கூத்தன் வைத்த சந்திவிளக்கு ௧ ஒன்றுக்கு இக்கோயிலில் காணி உடைய சிவவ்ர-
6. ஹ்மணன் ஹாரஹூஜி உமையோடுங்கூடனின்றான் உய்யங்கொண்டானான திருச்சிற்றம்பல பட்டனே-
7. ன் கைக்கொண்ட நற்பழங்காசு ௩ இப்பழங்காசு மூன்றுக்கும் சந்திராதித்த-வரை நாள் ஒன்றுக்கு
8. ஒரு சந்தியிலே ஒரு சந்திவிளக்கு எரிக்கக் கடவதாகச் சிலாலேகை பண்ணி-க்குடுத்தேன் உய்யக்கெ-
9. காண்டானான திருச்சிற்றம்பலபட்டனேன் இது பந்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 144/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 3
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1136
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 265/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 5 (20)
அரசு	: சோழர்		
அரசன்	: இரண்டாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறை மேற்குச் சுவர்.		

குறிப்புரை : திருக்கச்சூர் என்கிற நித்தவிநோத நல்லூர் ஊர் நிர்வாகிகள் செல்வன் சூரியதேவன் என்பவரிடமிருந்து ஐந்து நற்காசுகளைப் பெற்றுக் கொண்டு 500 குழி நிலத்திற்கு இறைநீக்கி திருவாலக்கோயிலில் ஒரு நந்தாவிளக்கு எரிப்பதற்கு அந்நிலத்தினை விற்றுக் கொடுத்துள்ளனர்.

Summary : On the west wall of the central shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōl̲a -Kulōttuṅga-II. r.y. 3 (1136 C.E.). Registers sale of 500 *kul̲i* of land made tax free after purchase for five *naṟkāśu*, which is received from Selvan̲ Sūriyadēvan̲ by the *ūravar* of Tirukkachchūr alias Nithavinōdha nallūr for burning a perpetual lamp to the temple of Tiruvālakkōil.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமேவுவளர் திருப்பொந் மார்வு புணர நா-
2. மேவு கலைமகள் நலம் பெரிது சிறப்ப விஜைய மாமகள் வெல்-
3. புயத்திருப்ப இசையின் செல்வி எண்டிசை விளங்க நிருபர்வஞ்சிறை-
4. ஞ்ச நீணிலமடந்தையைத் திருமணம் புணர்ஞ சீர்வளர்தரும் அணி
5. முடி கவித்தந மணி முடிசூடி மல்லை ஞாலத்துப்பல்லுயிர்க்கெ-
6. ல்லாமெல்லையிலிந்பமியல் பினிலெய்த வெண்குடை நிழற்ற
7. செங்கோலோச்சி வாழி பல்லூழி ஆழிநடப்ப செம்பொன் வீர-
8. ஸிංஹாஸநத்து புவநமுழுதுடையாளோடு விற்றிந்தருளிய கோவிரா-
9. ஜகேசரிபந்ரான த்ரிபுவனசக்ரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழ-
10. ஷேவர்க்கு யாண்டு மூன்றாவது ஜயங்கொண்டசோழ மண்ட-
11. லத்துக் களத்தூர் கோட்டத்து செங்குன்றநாட்டுத் திருக்கச்சூராந நித்தவிநோத நல்லூ-

12. ர் ஊரோம் வுடையார் திருவாலக்கோயிலுடையார்க்கு இவ்வூர் கிரந்தை ெ -
13. சல்வந் சூரியதேவன் வைத்த திருநந்தா விளக்கு ஒந்றுக்கு இக்கோயிலில்
14. ஆஷிஷாஹ சண்டேஸ்வர விலையாக எங்களூர் வடகழநியில் மேல்பார்க்கெல்-
15. லை செங்கழுநீர்க் குட்டத்துக்கு கிழக்கும் தெந்பார்கெல்லை பிராட்டி செறுவுக்கு
16. வடக்கும் கீழ்பார்க்கெல்லை ஏரிகீழ் செறுவில் மேற்கடைய குழி ஐம்பது
17. . . . ஏரிக்கரையில் உற்றுவரம்புக்கு மேற்க்கு வடபார்கெல்லை ஏரிக்க-
18. ழநி . . . க்கு தெற்க்கும் இந்நாந்கெல்லைக்கு நடுவுபட்ட நிலம் பதிநறு
19. சாண்கோலால் உத்தமநங்கை குழி ஐய்நூறும் உள்நிலமொழிவிந்றி
20. விற்றுக்குடுத்து கொள்வதாக எம்மிலிசைஞ விலைப்பொருளந்றாடு நற்-
21. காசு ஐஞ்சும் கைக்கொண்டு விற்றுக்குடுத்தோம் இந்நிலத்தால் வஞ்ந.
22. விலை அஞ்ராயம் சில்லிறை பெருவரி வெட்டி முட்டையாள்கள் இ-
23. றையிழிச்சி நாங்களே இறுக்க கடவோமாகவும் இத்திருநுஞா-
24. விளக்கு சந்திராதித்தவரை செல்வதாக சிலாலேகை பண்ணி

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 145/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 46
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1116
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 266/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 6 (2)
அரசு	: சோழர்		
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறை மேற்கு மற்றும் தெற்கு குமுதம்.		

குறிப்புரை : களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் ஒரு நந்தா விளக்கு எரிக்க எயினங்குடி ஊர்த்தலைவன் 90 ஆடுகளைத் தானமளித்துள்ளார்.

Summary : The west and south wall of the central shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōl̲a -Kulōttuṅga-I. r.y. 46 (1116 C.E.). It records the gift of 90 sheep for a perpetual Tiruvālakkōil at Tirukkachchūr in Cheṅgun̲dr̲anāḍu of Kaḷattūr kōṭṭam, by the village headman of Eyinaṅguḍi.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்கசோழதேவற்கு யாண்டு நாற்பத்தாறாவது ஜயங் கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து வெளிமா நாட்டு கள்ளி பாடி வெந்பாக்கத்து எயிநங்குடி கிழவன் நம்பி கணவதி திரு
2. களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர்த் திருவாலக் கோயில் உடையார் ஊூாதேவர்க்கு திருநந்தா விளக்கு ஒன்றுக்கு விட்ட ஆடு தொண்ணூறு இவாடு தொண்ணுறும் செம்பூ(ற்) கோட் டத்து நெடுங்குன்ற நாட்டு
3. . . . . மணிமங்கலத்திலிருக்கும்

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 146/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 7
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1140
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 267/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 7 (16)
அரசு	: சோழர்		
அரசன்	: இரண்டாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.		

குறிப்புரை : கச்சூர் என்கிற நித்தவிநோத நல்லூர் ஊர் நிர்வாகிகள் இவ்வூரிலிருந்த 100 குழி நிலத்தினை ஏலத்தில் விட்டனர். நடுவில்நாட்டு திருக்கோவலூர் ஊரைச் சார்ந்த சத்ருகாலன் மருந்தன் என்பவர் அன்றாடு நற்காசு 10 பொன் கொடுத்து வாங்கி இவ்வூர் திருவாலக்கோயிலில் ஒரு நந்தா விளக்கெரிக்க அந்நிலத்தினை வழங்கியுள்ளார்.

Summary : The north wall of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Kulōttuṅga-II. r.y. 7 (1140 C.E.). It records the sale of 100 *kuḻi* land in the same Tirukkachchūr by the *ūr* of the place for a sum of 10 gold *anṟāḍu-naṟkāśu* to a certain Satturu-kālaṉ Marundaṉ of Tirukōvalūr in Naḍuvi[l]-nāḍu; who endowed the money with the same *ūr* who had agreed to burn a perpetual lamp in the temple of Tiruvālakkōyiluḍaiyār.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமேவுவளர் திருப்பொன்மார்பு புணர நாமேவு கலைமகள் நலம் பெரிது சிறப்ப விஜெ-
2. யமாமகள் வெல்புயத்திருப்ப இசையுஞ் செல்வி மெண்டிசை விளங்க நிருபர் வஜிறஞ்சநீ நிலம-
3. டஜயை திருமணம் புணர்ஜ சீர்வளர் தரும் அணிமுடி கவித்தெந மணிமுடி சூடி மல்லை ஞாலத்துப் ப-
4. ல்லுயிர்க்கெல்லாம் எல்லையுளிந்பமியல்பினிலெய்த வெண்குடை நிழற்றச் செங்கோலோச்சி வாழிப-
5. ல்லூழி ஆழி நடப்ப செம்பொன் வீரஸிஂஹாஸநத்துப் புவனமுழுதுடையாளோடு வீற்றிருஜருளிய

6. கோராஜகேஸரிவந்மராந த்ரிபுவநச்சக்ரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவர்க்கு யா-
7. ண்டு ஏழாவது ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்-
8. ற நாட்டுத் திருக்கச்சூராந நித்தவிநோதநல்லூர் ஊரோமாஷிஷாவ ஸஜெூஸ்லுர நிலவி-
9. லை எங்களூர் வடகழநியில் கீழ்கடயில் ராஜநாராயணந் திருநந்தவநத்தில் சேற-
10. ல் வதிக்கு தெற்க்கும் கீழ்பார்க்கெல்லை நீரோடு கண்ணிக்காலுக்கு மேற்கும் தெந்பார்-
11. க்கெல்லை அரசூர் கிழவன் குண்டிலுக்கு வடவரம்பிற் பாதிக்கு வடக்கும் மேல்பா-
12. ர்க்கெல்லை சிவபக்தஷாஸந் ஜீவநத்துக்கு கிழக்கும் இநா[ற்]ப்பாலெல்லைக்கு நடு-
13. வுபட்ட நிலம் பதிநறு சாண்கோலால் குழி நூறும் இனிலத்தில் மேநோக்கிந ம-
14. ரமுங் கீழ்நோக்கிய கிணறும் உள்நிலமொழிவின்றி இக்கமுகடி நிலத்தில் கடுகால் வ-
15. ஞ இறையும் சில்லிறை அஞராயமும் நாங்களே இறுக்கக்கடவோமாக இறையிழிச்சி வி-
16. லை விற்றுதர கொள்வீர்களோ வெந்று கூற இம்மொழி கெட்டு எதிர்மொழி குடுத்தோற் நடுவிநாட்-
17. டு திருகோவலூரிலிருந்துஞ் சத்துருகாலந் மருந்தநேந் யாநு . . . ங்கள் முற் சொல்லப்படி-
18. த்தடி நிலம் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடையார்க்கு திருநுஞாவிளக்கு ஒந்றுக்கு ஆஷிஷாவ-
19. ஸஜெூஸ்லுர விலையாக விற்றுத்தரிசிகொள்வேநேந் முற்சொல்லப்பட்ட கச்சூராந நித்தவி-
20. நோதநல்லூர்ரோம் பிற்கூறிய சத்துருகாலந் மருஞநுக்கு எம்மிலிசைஞ விலைப்பொனந்றாடு நற்க-
21. ாசு பத்துஞ் ஸஜெூஸ்லுர விலையாக கைக்கொண்டு இத்தேவர்க்கு திருநந்தா விளக்கொன்றும் சந்திரா-
22. தித்தவற் செல்வதாக சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் கச்சூராந ஊரோம் இது கச்சூருடையா-
23. ந் எழுத்து வநூாஷேஸ்லுர ஶெக்ஷ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 147/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 13
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1350
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 268/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 8 (17)
அரசு	: சம்புவராயர்		
அரசன்	: இராஜநாராயணன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.		

குறிப்புரை : புஷ்பகிரி ஜீயர் சங்கரசிவ என்பவரின் சமய முதலி காசிவன் என்பவரின் தோட்டத்தில் 170 குழி நிலத்தின் புன்னை மரத் தோட்டத்தினை திருக்கைச்சூர் திருவாலக்கோயிலுக்குக் கொடையாக வழங்கியுள்ளச் செய்தியை இக்கல்வெட்டுப் பதிவு செய்கிறது.

Summary : The north wall of the central shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Sambuvarāya -Rajanārāyaṇaṉ. r.y. 13 (1350 C.E.). This inscription records a gift of a garden of *Puṉṉai* trees, 170 *kuḻi* in extent, belonging to the estate of a certain Kāśivan (Kāśyapan) a *samayamudali* of the Jīyar of Pushpagiri, to the temple of Tiruvālakkōyil-uḍaiyār of Tirukkaichchūr (Tirukkachchūr), probably by Saṅkaraśiva, the Jīyar.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இராஜநாராயணன் சம்புவராயற்கு யாண்டு
2. ௰௩ துலாரவி சுபரபக்ஷத்து துதியையும் நா-
3. யற்றுகிழமையும் பெற்ற காத்திகை னாள் திருக்கை-
4. ச்சி ஊர் உடையார் திருவாலக்கோயிலுடை-
5. ய நாயனாற்கு புஷ்பகிரி ஜீயர் சமைய முதலி காசிவ-
6. ந் காணியில் புன்னைத்தோட்டம் பழம்படி
7. குழி ௱௭௰ இக்குழி நூற்றெழுபதும் இதில்
8. உட்பட்ட மரமுங் கிணறும் உட்பட திரு-
9. னாமத்து காணியாக இன்நில-
10. ம் சந்த்ராதித்தவரையாக செல்வதா-
11. க குடுத்தோம் புஷ்பகிரி ஜீயரேன்
12. ஶங்கரஶிவஸ்ய ஐதி ஸ்ரீ ஶாஹேஶ்வர
13. ரக்ஷை உ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 148/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 5
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1075
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 269/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 9 (19 -I)
அரசு	: சோழர்		
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறை வடக்கு குமுதம்.		

குறிப்புரை : களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுக் கச்சூர் திருவாலக்கோயிலாண்டார் கோயிலில் நந்தாவிளக்கு ஒன்றினுக்கு இருப்பாகளக்குடிப்பள்ளி ஊரைச் சார்ந்த திருவரங்க தேவன் ஆன விருதராஜபுயங்கரச்சோழ வாணியன் 90 ஆடுகளைக் கொடையாக அளித்துள்ளார்.

Summary : The north wall of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōḻa -Kulōttuṅga-I. r.y. 5 (1075 C.E.). It records the gift of 90 sheep to provide ghee for perpetual lamp in the temple of Tiruvālakkōyilāṇḍār of Tirukkachchūr, by Tiruvaraṅgadēvan̲ alias Virudarāja bhuyaṅkarach chōḻa-vāṇiyan̲ of Iruppākaḷakkuḍi in Veṇkun̲r̲ak-kōṭṭam in Jayaṅkoṇḍaśōḻa-maṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது விளங்க சயமாது விரும்ப நிலமகள் வளர மலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடித் தென்னவர் நிலைகெட மீனவர் குலைதர விக்கலர் சிங்கணர் மேல்கடல் பாயத் திக்கனைத்திலுஞ் சக்கரநடாத்தி வீரசிங்காசனத்து புவனமுழுதுடையாளோடும் விற்றிருஂ -
2. ருளிய கோவிராஜகேஸரிபன்மரான உடையார் ஸ்ரீகுலோத்துங்க சோழஷேவற்க்கு யாண்டு அஞ்சு ஜயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்துச் செங்குன்றக் கோட்டத்து இருப்பாகளக் குடிப்பள்ளி . . . . . ன திருவர -
3. ங்கதேவனான விருதராஜபுயங்கரச்சோழ வாணியநேன் களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுக் கச்சூர் திருவாலக்கோயிலாண்டார்க்கு வைத்த திருநொஙூாவிளக்கொன்றினுக்கு வைத்த சாவா(மூவா)

4. மூவாப்பேராடு தொண்ணூறு இவ்வாடு தொண்ணூறுங் கைக்கொண்டு நின்றானான . . . நிசதமுழக்கு நெய் நிவஞமாக முட்டாமை அட்டுவோமாக ஸம்மதித்து கைக்கொண்டோம் ம . .
5. கொங்கரையன் திருமாகாளி விளக்கு காலுக்கு கைக்கொண்ட ஆடு உ௰உ அய்யன் பெருமான் சிவகனுமய்யன் பெருமான் கம்பனும் காலுக்கு கைக்கொண்ட ஆடு உ௰உ இயும் த-
6. ரும் கேசவனும் விளக்கரைக்காலுக்கு கைக்கொண்ட ஆடு ௰கல் முவல் நீங்கி பெருங்காடன் வி-
7. . . . லமாக இவ்வாடு தொண்ணூறும் இவ்வெழுவோங் கை . . . . . .
8. . . . . .நெய்யுங் கோயிலிலே திருவுண்ணாழிகையுடையார்கள் வசமே-
9. ன்று . . . . முட்டாமை யளஞ தரவுகொள்ளக் கடவோமானோ மிவ்வனைவோம்
10. இஞ யஃூழ வநூாஹேஸ்ஹு ரூெக்ஷ ஒ

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 149/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 3
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1219
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 270/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 10 (31)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராஜராஜன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டு திருக்கச்சூர் ஊரைச் சார்ந்த காலைமாலை பாகம் வைத்தான் வில்லவாழ்வான் என்பவரும் களரியக் குளத்தூழான் ஒற்றிக்கொண்டான் இராசராச தேவன் என்பவரும் திருவாலக்கோயிலில் இரண்டு சந்தி விளக்கு வைத்துள்ளனர். இக்கோயிலில் காணியுடைய சிவபிராமணரில் பாரத்துவாசி ஆழ்வான் தேவகன் சுத்தன் என்கிற நாற்பத்தொண்ணாயிர பட்டன் என்பவர் ஒரு சந்திவிளக்குக்கு மூன்று காசுகளும், கவுசிக கோத்திரத்தைச் சார்ந்த ஆளும் பிரான் உடைய பிள்ளையான் அலைதாநி பட்டனும் இவன் தம்பி மசகை புக்கான் ஆகிய இவ்விருவரும் ஒரு சந்தி விளக்குக்கு மூன்று காசுகளும் பெற்றுக்கொண்டு மேற்படி இரண்டு சந்தி விளக்குகளை எரிக்க சம்மதித்து உடன்படிக்கை செய்துக் கொடுத்துள்ளனர்.

Summary : The south wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̠ - Chōl̤a -Rājarāja-III. r.y. 3 (1219 C.E.). It records the gift of two twilight lamps to the temple of the god Tiruvālakkōyiluḍaiyār of Tirukkachchūr by Kālaimālai-pāgamvaittān̠ Villavāl̤vān̠ and another by Kal̤ariyak-kul̤attul̤ān̠ Or̠r̠ikoṇḍān̠ Irāśarāśadēvan̠ of the same village. A sum of 3 *pal̤aṅkāśu* to provide for burning of a lamp is stated to have been received by an owner of right of worship in the temple, the *sivabrāhmanā* Āl̤vān-dēvagal̤ Suttan̠ alias Nārpatteṇṇayira-bhaṭṭan̠ of Bhāradvāja-gōtra and another a sum of 3 *pal̤aṅkāśu* for a similar purpose was received by Āl̤umpirān Uḍaiyapil̤l̤ai alias Alaitāni-bhaṭṭan̠ and his younger brother Maśakaipukkān̠ of Kavuśika (Kauśika)-gōtra who had agreed to carry out the object of the gift.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்கரவற்திகள் ஸ்ரீஇராஜராஜதேவர்க்கு ந ன்றாவது மகர நாயற்-
2. றுப் பூர்வபக்ஷத்து ஸதுர்த்தியும் மூலமும் பெற்ற நாயற்றுக்கிழமை நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் கள-
3. த்தூர்க் கோட்டத்து செங்குன்ற நாட்டு திருக்கச்சூற் காலைமாலைபாகம் வைத்தான் வில்லவாழ்வானும் களரியக்-
4. குளத்தூழான் ஒற்றிக்கொண்டான் இராசராசதேவனும் உடையார் திருவாலக்கோயிலுடையார்க்கு வைத்த ச-
5. ந்திவிளக்கு உ விளக்கு இரண்டும் இக்கோயிற் காணியுடைய சிவசூாமணரில் ஹாரத்துவாசி யாழ்வாந் தே-
6. வகள் சுத்தன்நான நாற்பத்தெண்ணாயிர பட்டந் கைக்கொண்ட விளக்கு க க்கு கைக்கொண்ட பழங்காசு ரும் கவுசிக கோத்திர-
7. த்து ஆளும்பிராந் உடைய பிள்ளையாநலைதாநி பட்டனுமிவந் தம்பி மசகைபுக்கானும் கைக்கொண்ட சந்திவிளக்கு க-
8. க்குப் பழங்காசு மூன்றும் ஆக நற்பழங்காசு கூ ஆறும் கைக்கொண்டு இவ்விளக்கு இரண்டுமே சந்த்ராஆதித்தவரை எரிக்கக்-
9. கடவதாகச் சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் இவ்வனைவோம் இது ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 150/2024**

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 20
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1198
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 271/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 11 (32)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் பஞ்சநதிவாணன் என்கிற இராசராச நீலகங்கரையன் தேவன் என்பவர் ஒரு சந்தி விளக்கு வைப்பதற்கு இக்கோயிலில் காணியுடைய சிவபிராமணர்களில் உடைய பிள்ளை எனும் அனந்த கல்யாண பட்டன் என்பவரிடம் இரண்டு பழங்காசுகள் வழங்கியுள்ளார்.

Summary : The south wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̠ - Chōl̠a -Kulōttuṅga- III. r.y. 20 (1198 C.E.). It records the gift of a twilight lamp to the temple of the Tiruvālakkōil nāyanār by Pañchanadivāṇan̠ alias Irāśarāśa Nīlagaṅgaraiyan̠ Dēvan̠. A sum of two *pal̠aṅkāśu* to provide for this, is stated to have been entrusted to Uḍaiyapiḷḷai alias Ānanda[k]kalliyāṇa-bhaṭṭan̠, who had right of worship in the temple, and who had agreed to burn a twilight lamp.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனச்சக்ரவத்திகள் மதுரையும் பாண்டியனை முடித்தலையுங் கொண்டருளின குலோத்துங்கசோழ ஷேவர்க்கு யா-
2. ண்டு உயவது திருக்கச்சூர் திருவாலக்கோயில் னாயனாற்க்கு பஞ்சநதிவானனான இராசராச நீலகங்கரையன் தேவன் . . . .
3. ன் வைத்த சந்திவிளக்கொன்றுக்கு இக்கோயிலில் சிவபிராமணரில் . . . . காணியுடைய காஞ்சிக்குறி . . . .ஹட்டன் உடைய பிள்ளை-
4. யானந்த கல்லியாண ஹட்டனேந் இவன் பக்கல் இச்சந்தி விளக்குச் சந்திராதித்தவரை செலுத்தக்கடவோம் கைக்கொண்ட பழங்காசு உ இப்பழங்-
5. காசு இரண்டும் கைக்கொண்டு சிலாலேகை பண்ணிக்குடுத்தேன் . . . . . கல்யாண ஹட்டன் இது பன்மாஹேஶ்வர இரக்ஷை உ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 151/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 14
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1230
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 272/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 12 (33)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராஜராஜன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்த மண்டபத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டு திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் ஒரு சந்தி விளக்கு வைப்பதற்கு ஜெயங்கொண்டசோழ மண்டலத்து செங்காட்டுக் கோட்டத்து மாகனூர் நாட்டு பிள்ளைப்பாக்கம் என்கிற கைய்தவகைய்தவநல்லூர் ஊரைச் சார்ந்த கொற்றன் திருவேகம்பமுடையான் செல்வப்பிள்ளை என்பவரிடமிருந்து இக்கோயில் காணியுடைய சிவபிராமணன் ஆளும்பிரான் உடைய பிள்ளை ஆன சதாசிவபட்டன் மூன்று பழங்காசுகள் பெற்றுக்கொண்டு சந்தி விளக்கு எரிப்பதாக சம்மதித்துள்ளச் செய்தி.

Summary : The south wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Rājarāja-III. r.y. 14 (1230 C.E.). It records a gift of a twilight lamp to the Tiruvālakkōil-uḍaiya nāyanār at Tirukkachūr in Seṅguṅdra nāḍu a sub division of Kaḻattūr kōṭṭam of Jayaṅkoṇḍa chōḻamaṇḍalam by Koṟṟaṉ Koṟṟaṉ Thiruvēgambam-ūḍaiyāṉ Selvappiḻḻai of Piḻḻaippākkam alias Kaiytavakaitava-nallūr in Māgaṉūr-nāḍu in Seṅgāṭṭuk-kōṭṭam in Jayaṅkoṇḍaśōḻa-maṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீஇராஜராஜதேவற்க்கு யாண்டு ௰௪ ஜயங்கொண்ட சோழமண்டலத்து கள -
2. த்தூர்க்க கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடைய நாயநார்க்கு இம்மண்டலத்துச் செங்காட்டுக் கோட்ட -
3. த்து மாகனூர் நாட்டுப் பிள்ளைப்பாக்கமான கைய்தவகைய் தவநல்லூர் கொற்றன் கொற்றன் திருவேகம்பமுடையான் செல்வப்-

4. பிள்ளை வைத்த சந்திவிளக்கு க இவ்விளக்கு ஒன்றுக்கு இக்கோயிற் காணியுடைய சிவஸ்ராஹ்மணன் கவுசிகன் ஆளும்பிரான் உ-
5. டைய பிள்ளையான சதாசிவபட்டன் கைக்கொண்ட பழங்காசு ந இப்பழங்காசு மூன்றுங் கைக்கொண்டு இவ்விளக்கு ஒன்றும் சந்தி-
6. ராதித்தவரை எரிப்பேனாகச் சிலாலேகை பண்ணிக்குடுத்தேன் உடைய பிள்ளையான சதாசிவபட்டனேன் இது பன்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 152/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 12
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1228
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 273/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 13 (25)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராஜராஜன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறைத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் வழிபடும் சிவனடியார் அம்பருடையான் இரகொடுவந்தான் திருநட்டப்பெருமாள் என்பவர் இக்கோயிலுக்கு இரண்டு பரிகலன்களைக் கொடையாக வழங்கியுள்ளார்.

Summary : The south wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōl̲a -Rājarāja-III. r.y. 12 (1228 C.E.). It records the gift of two utensils *(parikalam)* by certain worshipper Ān̲ḍār Ambaruḍaiyān̲ yirakoḍuvantān̲ to the Tiruvūlakkōil-uḍaiya Nāyanār of Tirukkachchūr.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீஇராசராச ஷேவற்கு யாண்டு யஉ
2. வது திருக்கச்சூரில் கும்பிட்டிருக்கும் ஆண்டார் அம்பருடையாந் யிரகொடுவந்-
3. தாந் திருநட்டப்பெருமாள் திருவாலக்கோயில் உடைய நாயனாற்கு இட்ட
4. திருபரிகலம் ஒன்றினால் எடை நூற்றுமுப்பத்திரண்டும் பரிகலம் ஒந்றினால்
5. எடை எழுபத்தொன்றரை பலமும் ஆக உரு உ னால் எடை இருநூற்றுமூ-
6. ன்றரைப்பலமும் இட்டார் இது ஸ்ரீமாஹேசுர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 153/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 37
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1215
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 274/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 14 (27 - I, II)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறைத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கசோழனின் 10-ஆம் ஆட்சியாண்டில் (பொ.ஆ. 1215) பயிர் விளைச்சல் இன்றி இருந்தமையால் திருவாலக்கோயிலுடைய கோயில் இறைவனுக்கு நான்கு வகை கறிஅமுது, நெய், தயிர், அடைக்காய், அரிசி ஆகியவைப் படைக்கவும் பதினொன்று சந்தி விளக்குகள் வைப்பதற்கும் ஆயலூர் ஊர்த்தலைவனும் ஓய்மா நாட்டு வேளானுமாகிய குப்பை சோறுடையான் என்பவரிடம் பதினைந்து காசுகள் பெற்றுக்கொண்டு நிலம் ஒன்றினை விற்றுக்கொடுத்துள்ளனர். இந்தப் பதினைந்துக் காசுகளைப் பெற்றுக்கொண்டு இறைவனுக்குத் தேவையான சேவைகளையும் 11 சந்தி விளக்குகளையும் எரிப்பதாக உறுதியளித்துள்ளனர். இந்த நிலத்திற்கு எல்லைகளாக திருக்கச்சூர் ஊரின் பிடாகை கிராமங்களான கீழ்க்காரனை, கூடலூர், சிறுமணூர், மேல் விளம்பு, பெராமணூர் ஆகிய ஊர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

Summary : The south wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tami̱l - Chō̱la -Kulōttuṅga-III. r.y. 37 (1215 C.E.). This inscription refers to the failure of crops in Tirukkachchūr in the 10th year in the reign of the king and the consequent troubles of the people. It records the grant of 15 *kāśu* in lieu of the land given by the *ūr* in the Kī̱lakkārāṇai of the *piḍāgai* of Tirukkachchūr Nithavinōdha nallūr in Seṅgu̱ṉ̱ra nāḍu of Kaḷattūr kōṭṭam, made by a certain Kuppai śō̱ruḍaiyā̱ṉ alias Oymānāṭṭu-vēḷā̱ṉ, the *ki̱lava̱ṉ* of Āyalūr, for food offerings to the deity Tiruvālakkōyil-uḍaiyār and for the eleven twilight lamps gifted by the *ūr* itself. The *ūr*, receiving the amount from the donor, had agreed to perform the services accordingly. The villages of Kūḍalūr, Si̱rumaṇūr, Mēlviḷambu and Pērāmaṇūr are stated to from the boundary of the said land.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு முப்பத்தேழாவது களத்தூர்க் கோட்டத்து செங்குன்ற நாட்டு திருக்கச்சூரான நித்தவிநோத நல்லூர் ஊரோம் யாண்-
2. டு ய எங்களூரிற் செய்த பயிற் சாலிபொய் இறை விலைநமிகுகையில் ஆயலூர் கிழவன் குப்பை சோறுடையாநான ஓய்மா நாட்டு வேளான் திருவாலக்கோயிலுடைய நாய-
3. னாற்கு கறி அமுர்து நாலுக்கும் நெய் அமுர்துக்கும் தயிர் அமுதுக்கும் அடைக்கா அமுதுக்கும் அரிசி குறுணிக்கும் ஊரில் எங்களால் விட்டுவருகிர
4. ஸந்திவிளக்கு பதிநொந்றுக்கும் உடலாக எங்களூர் பிடாகை கீழ்க்காரணை கூடலூர் எல்லைக்கு மேற்கும் தெந்பாற் சிறுமணூர் எல்லைக்கு வடக்கு
5. மேல் விளம்புக்குக் கிழக்கும் பெராமணூர் எல்லைக்கு தெற்க்கும் இன்னான்கு எல்லைக்கும் நடுவுபட்ட நிலம் காடு வெட்டிக்கொ-
6. ளக்கடவநாந இவன் பக்கல் நாங்கள் கொண்ட காசு பதிநைஞ்சு இக்காசு பதிநைஞ்சுக்கும் பொலி ஊட்டாக குடுத்தோம் இந்நிலத்துக்கு இ . . . .
7. தித்தவரை நாங்கள்ளே இறுத்து இந்நிமஜம் செலுத்தக்கடவோமாக கல்வெட்டிக் கொள்க ஸாஸநம் பண்ணி குடுத்தோம் திருக்கச்சூர் ஊரோம் இதந்ஜத் . . . . .
8. குமரி இடைச்செய்தாந் பாவெத்தே படுவான் ஸ்ரீமாயேமு ரக்ஷெ உ கீழ்க்காரணை ஆந ஸ்ரீகரணவிளாகம் உ

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 154/2024**

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 13
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1191
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 275/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 15 (29)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அாத்தமண்டபம் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூர் கோட்டத்து குலோத்துங்கசோழ வளநாட்டுத் திருச்சுரம் ஊரைச் சார்ந்த குலோத்துங்கசோழக் கண்ணப்பன் ஆதிநாயன் பஞ்சநதிவாணன் என்கிற ராஜராஜ நீலகங்கரையன் என்பவர் திருவாலக்கோயில் உடையார் கோயிலில் ஒரு நந்தா விளக்கு வைப்பதற்கு 32 பசுக்களும், ஒரு காளையும் கொடையாக வழங்கியுள்ளார். மேலும், இக்கல்வெட்டின் இறுதியில் இம்மன்னனின் 18 ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1195) இந்த நந்தாவிளக்கு எரிக்க 132 பலம் கொண்ட பித்தளையால் ஆன குத்துவிளக்கு ஒன்றினையும் வழங்கியுள்ளச் செய்தியும் இடம்பெற்றுள்ளது.

Summary : The south wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōl̲a -Kulōttuṅga-III. r.y. 13 (1191 C.E.). It records a gift of 32 cows and a bull to provide daily one *ul̲akku* of ghee for burning a perpetual lamp in the temple of Tiruvālakkōyiluḍaiyār at Tirukkachchūr by Kulōttuṅgaśōl̲ak kaṇṇappan̲-Ādināyan̲ Pañchanadivāṇan̲ alias Rājarāja Nīlgaṅgaraiyan̲ of Tiruchchuram in Kulōttuṅgaśōl̲a-Vaḷanāḍu in Puliyūr-koṭṭam in Jayaṅkoṇḍasōl̲a-maṇḍalam.

At the end of the inscription states that in the 18th a standing lamp weighing 132 *palam* was given to enable the burning of the perpetual lamp mentioned above.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கேழ்வி முன்பாக மதுரையுமீழமும் பாண்டியனை முடித்தலையுங் கொண்டருளின த்ரிபுவநச்சக்ரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு
2. ௰௩ ஆவது ஜயங்கொண்டசோழ மண்டலத்து களத்தூற் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் ஆளுடையார் திருவாலக்கோயிலுடையாற்கு இம்மண்டல-

3. த்துப் புலியூற் கோட்டத்து குலோத்துங்கசோழ வளநாட்டு திருச்சுரத்து குலோத்துங்கசோழக் கண்ணப்பனாதிநாயன் பஞ்சநதிவாணனான ராஜராஜ நீலகங்கரையன் திரு-
4. வாலக்கோயிலுடையாற்கு வைத்த திருநுந்தா விளக்கொன்றுக்கு நாளொன்றுக்கு நெய்யுழக்குக்குப் பொலியூட்டு சந்த்ராதித்யவரை செலுத்தக் கடவோமாக இக்கோயிலிற்காணி-
5. யுடைய ஶிவப்ராஹ்மணரில் பாரத்வாஜி காஞ்சிக்குறி ஸ்ரீ கண்ட பட்டனும் நாற்பத்தெண்ணாயிர பட்டனும் திருவுடையான் பட்டனும் ஆழ்வான் பட்டனும் காஸ்யபந் உடைய பிள்ளையான காக்குநாயக பட்டனும் தி-
6. ருக்காளத்தி உடையானான உருத்திரசிவ பட்டநும் இவ்வனைவோம் இவர் பக்கல் கைக்கொண்ட பசு முப்பத்திரண்டும் ரிஷபமொன்றும் கைக்கொண்டு இத்திருநந்தா விளக்கு ஒன்றும் சந்த்ராதித்யவரை
7. எரிக்கக் கடவோம் இவ்வனைவோம் இது பன்மாஹேஶ்வர ரக்ஷை ௨ இத்தேவர்க்கு பதினெட்டாவது இத்திருநந்தாவிளக்கு எரிக்க இட்ட இத்திருக்குத்துவிளக்கு ஒன்றினால் தரா
8. எடை நூற்று முப்பத்திரு பலம் பன்மாஹேஶ்வர ரக்ஷை ௨

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 155/2024**

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 20
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1198
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 276/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 16 (26)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.		

குறிப்புரை : ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் திருநந்தா விளக்கு ஒன்று வைப்பதற்கு இவ்வூரைச் சார்ந்த கிராந்தை அமரர்கணாயகர் காக்கு நாயகனும் இவன் தம்பி திருவாலக்கோயில் உடையான் ஆகிய இவ்விருவரும் இக்கோயில் சிவபிராமணர்களிடம் 525 குழி நிலத்தினை விலைக்கு வாங்கி கொடையாக அளித்துள்ளனர்.

Summary : The south wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tami̲l - Chōl̲a -Kulōttuṅga-III. r.y. 20 (1198 C.E.). It records a gift of 525 *kul̲i* land for burning a perpetual lamp in the temple Tirukkachchūr by Kirāndai Amararkaṇāyakar Kākkunāyakan̲ and his younger brother Tiruvālakkōyiluḍaiyān̲ of Tirukkachchūr.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமுகவனவுசுடிவதிகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு உ௰ஆவது ஜயங்கொண்டசோழ-
2. மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனாற்கு இவ்வூர்க் கிராந்தை அமரர்கணாயகர் காக்கு நாயகனும் இவன் தம்பி
3. திருவாலக்கோயிலுடையானும் இவ்விருவோம் இன்னாயனாற்குச் சந்திராதித்தவரை செல்வதாக வைத்த திருநுஞாவிளக்கு ஒன்றுக்கு எங்கள் காணியில் விட்டபடி நிலந் தடி உ னால் ருௗ நாருமஉம

4. இன்னிலத்துக்குக் கீழ்தலையிற் கிணறொன்றும் வண்ணக்கன் குண்டில் ருீாஉயம் வடகழனியிற் செட்டிக்குன்றக் குண்டில் ருீருயநம் ஆகப் பதினாறு சாண்கோலால் ருீ ருாஉயரும்
5. கிணறொன்றும் இன்னிலத்தால் வந்த இறையுஞ் சில்லிறை சோறு மட்டும் வெட்டிமுட்டைஆளுள்ளிட்ட சில்லிறைகளிறை இழிச்சிக் குடுக்கக் கடவோமாகச் சிலாலேகை பண்ணிக் குடு-
6. த்தோம் இவ்விருவோம் இது பன்மாஹேசுவர ரக்ஷை இக்கல்வெட்டி இப்படி குழி ஐஞ்ஞூந்று இருபத்தைஞ்சும் கிணறு இக்கோயிற் காணி உடைய சி-
7. ப்பிராமணர் பலரும் இவ்வூர் கிரந்தை ஆருமணி நாயகர்க்கு காணியாக விற்றுக் குடுத்து பொருளறக் கைக்கொண்டு சந்திராதித்தவரை
8. இந்திருநுந்தா விளக்கு ஒன்றும் திருநடைமாளிகை வடபாரி அத்திலே பெருமாள் சுந்தரபாண்டி தேவர்க்கு யரு வது

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 156/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 18
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1234
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 277/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 17 (30)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராஜராஜன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்த மண்டபம் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டு திருக்கச்சூர் என்கிற நித்த விநோத நல்லூரில் உள்ள திருவாலக்கோயிலில் காணி உடைய சிவபிராமணன் ஆழ்வான் தேவர்கள் சுந்தரன் ஆன நாற்பத்தெண்ணாயிர பட்டன் என்பவர் செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டுப் பிள்ளைப்பாக்கம் என்கிற கைதவகைய்தவ நல்லூர் ஊரைச் சார்ந்த கொற்றன் திருவேகம்பமுடையான் துலையாத செல்வன் எனும் அனந்தபன்மன் என்பவரிடம் மேற்படி கோயிலில் சந்திவிளக்கு ஒன்று எரிப்பதற்கு மூன்று பழங்காசுகளைப் பெற்றுக்கொண்டு விளக்கெரிப்பதாக சம்மதித்துள்ள உடன்படிக்கை.

Summary : The south wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̠ - Chōl̠a -Rājarāja-III. r.y. 18 (1234 C.E.). It records a gift of a twilight lamp and three *pal̠aṅkāśu* for it by Kor̠r̠aṅ Kor̠r̠an̠ Thiruvēgambamūḍaiyān̠ Tulaiyādaśelvan̠ alias Anantapan̠man̠ of Piḷḷaippākkam alias Kaitavagaitavanallūr in Māgan̠ūr-nāḍu in Seṅgāṭṭuk-kōṭṭam, in Jayaṅkoṇḍasōl̠a-maṇḍalam, to the Tiruvālakkōyil-uḍaiyār temple. The money of three *kāśu* was accepted by the *sivabrāhmanās* who had the right of worship in the temple, named Āl̠vān̠ Dēvargaḷ Sundaran̠ alias Nār̠patteṇṇāyira-bhaṭṭan̠.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்ரவத்திகள் ஸ்ரீஇராஜஇராஜதேவற்கு யா
2. ண்டு ௰அ வது ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து-
3. ச்செங்குன்ற நாட்டு திருக்கச்சூரான நித்தவிநோதநல்லூர் உடையார் திருவா-
4. லக்கோயிலுடையாற்கு இம்மண்டலத்துச் செங்காட்டுக் கோட்டத்து மாகணூர்

5. நாட்டுப் பிள்ளைப்பாக்கமான கைய்தவகைய்தவநல்லூர் கொற்றங் கொற்றன் தி-
6. ருவேகம்பமுடையான் துலையாத செல்வனான அனந்தபன்மன் வைத்த சந்திவிளக்-
7. கு க ஒன்றுக்கும் இக்கோயில் காணி உடைய சிவஸ்ராஹ்மணன் ஸாரஸ்வாஜ ஆழ்வான் தேவர்-
8. கள் சுந்தரநாந நாற்பத்தெண்ணாயிர பட்டன் கைக்கொண்ட பழங்காசு ந இக்காசு மூன்று
9. . . . . எரிக்கக் கடவோனாகவு
10. . . . . . . னக் குடுத்தேன் தேவகள் சுந்தரநாந நாற்பத்தெண்ணாயிரபட்டனேன் இது பந்மாஹேஷ்வர
11. ரக்ஷை உ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 157/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 4[.]
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 278/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 18 (15)
அரசு	: -		
அரசன்	: -		

இடம் : கச்சபேசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டின் முன்பகுதி கட்டடப்பகுதியில் மறைந்துள்ளதால் அரசு, மன்னர் ஆட்சியாண்டு போன்ற செய்திகள் அறிய இயலவில்லை. ஒரு சந்தி விளக்கு வைக்கப்பட்டுள்ளது.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - r.y. 4 [?]. The inscription is built in at the beginning. So, the name of the king, the date and some other important details are lost. It records a gift of a twilight lamp.

கல்வெட்டு :

1. . . . . ஷேவற்கு யாண்டு நாற்-
2. . . . . .டி குன்றன்பங்கி திருக்கச்சூர்
3. . . . . வைத்த ஸந்தி விளக்கு ஒன்றுக்கு விட்-
4. . . . . க்கோட்டத்து நெடுங்குன்ற நாட்டு சூ-
5. . . . . னும் இவந் தம்பி இளங்காளியெனும்
6. . . . . க்கோனும் இந்நால்வோமும் இவ்-
7. . . . . விளக்கு ஒன்றும் சந்திராதித்தவரை செ-
8. . . . . வாம் ஸ்வஸ்திஸ்ரீ குலோத்து-
9. . . . . ஜயங்கொண்டசோழ ம-
10. . . . . ட்டு பெரமனூர் காக்கண்ட பா-
11. . . . . .டைய ஊஹாஷேவர்க்கு வைத்த ஸந்தி-

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 158/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 37
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1215
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 279/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 19 (13)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.		

குறிப்புரை : இக்கல்வெட்டு தொடர்எண் 153 இல் உள்ள கல்வெட்டின் நகலாக உள்ளது. ஆனால் இக்கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்கசோழனின் 10-ஆம் ஆட்சியாண்டில் பயிர் விளைச்சல் இன்றி இருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இக்கல்வெட்டில் 10-ஆம்ஆண்டு குறிப்பிடவில்லை.

எங்களூரில் பயிர் விளைச்சல் இன்றி இருந்தமையால் திருவாலக்கோயிலுடைய கோயில் இறைவனுக்கு நான்கு வகை கறிஅமுது, நெய், தயிர், அடைக்காய், அரிசி ஆகியவை படைக்கவும் பதினொன்று சந்தி விளக்கு வைப்பதற்கும் ஆயலூர் ஊர்த்தலைவனும் ஓய்மா நாட்டு வேளானுமாகிய குப்பை சோறுடையான் என்பவரிடம் பதினைந்து காசுகள் பெற்றுக்கொண்டு நிலம் ஒன்றினை ஊரார் விற்றுக்கொடுத்துள்ளனர். இந்த பதினைந்து காசுகளைப் பெற்றுக்கொண்டு இறைவனுக்குத் தேவையான சேவைகளையும் 11 சந்தி விளக்குகளையும் எரிப்பதாக உறுதியளித்துள்ளனர். இந்த நிலத்திற்கு எல்லைகளாக திருக்கச்சூர் ஊரின் பிடாகை கிராமமான கீழ்க்காரனை, கூடலூர், சிறுமணூர், மேல் விளம்பு, பெரமணூர் ஆகிய ஊர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Kulōttuṅga-III. r.y. 37 (1215 C.E.). This inscription is incomplete at the end. It seems to be a copy of S.no. 153 above. However the 10th year in which the failure of crops is stated in No. 153 to have occurred is not clear in the present record.

This inscription refers to the failure of crops in Tirukkachchūr and the consequent troubles of the people. It records the grant of 15 *kāśu* in lieu of the land given by the *ūr* in the Kīḻakkārāṇai of the *piḍāgai* of Tirukkachchūr Nithavinōdha nallūr in Seṅguṉṟa nāḍu of Kaḷattūr

kōṭṭam, made by a certain Kuppai śōṟuḍaiyān alias Oymānāṭṭu-vēḷāṉ, the *kiḻavaṉ* of Āyalūr, for food offerings to the deity Tiruvālakkōyil-uḍaiyār and for the eleven twilight lamps gifted by the *ūr* itself. The *ūr*, receiving the amount from the donor, had agreed to perform the services accordingly. The villages of Kūḍalūr, Siṟumaṇūr, Mēlviḷiambu and Pēramaṇūr are stated to from the boundary of the said land.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு முப்பத்தேழாவ-
2. து களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூராந நித்தவிநோ-
3. தநல்லூரோம் யாண்டு முப்பத்தேழாவது வருஷமிந்றியே எங்களூரி-
4. ல் செய்த பயிர் சாவிபொய் இறைவிஸநமிகுகையில் ஆயநல்லூர் கிழ-
5. வன் குப்பை சோறுடையநாந ஓய்மா நாட்டு வேளான் திருவாலக்-
6. கோயிலுடைய உடையார்க்கு மஹிரபோநகத்துக்கும் கறிஅ-
7. முர்து நாலுக்கும் நெய்யமுர்துக்கும் தயிரமுர்துக்கும் அடைக்கா-
8. யமுர்துக்கும் அரிசி குறுணிக்கும் ஊரி எங்களால் விட்டு வருகிற
9. நெல்லுத் தூணிக்கும் வைத்து வருகிற ஸந்திவிளக்குப் பதிநொன்-
10. றுக்கும் உடலாக எங்களூர்ப்பிடாகை கீழ்க்காரணை கூட-
11. [லூரான] எல்லைக்கு மேற்கும் தென்பாற் சிற்றமணூர் [எ]
12. ல்லைக்கு வடக்கும் மேல்பாற் பாழிக்கிணற்றுக்கு மேல் வி-
13. ளம்புக்குக் கிழக்கும் பெரமணூர் எல்லைக்கு தெற்கும் இன்நான்கு எ-
14. ல்லைக்கு நடுவுபட்ட நிலம் காடுவெட்டித் தான் வேண்டின-
15. பயிர் செய்வித்துக் கொள்ளக்கடவதாக இவந் பக்கல் நாங்கள் கொ-
16. ண்ட காசு பதினைஞ்சு இக்காசு பதினைஞ்சுக்கும் பொலியூட்டாக-
17. க் குடுத்தோம் இன்நிலத்துக்கு இறை இவனறுவது எப்பேர்-
18. ப்பட்டது . . . . .இறுத்து இன் நிமந்

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 159/2024**

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 45
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1115
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 280/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 20 (14)
அரசு	: சோழர்		
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.		

குறிப்புரை : திருக்கச்சூர் ஆன நித்தவிநோத நல்லூர் ஊரைச் சார்ந்த கிராந்தை வேளான் அமரகள நாயகன் என்பவர் திருவாலக்கோயிலில் ஒரு சந்திவிளக்கு வைப்பதற்கு இக்கோயிலைச் சார்ந்த நான்கு பிராமணர்களிடம் மூன்று பசுக்களைத் தானமாக வழங்கியுள்ளார்.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḷa -Kulōttuṅga-I. r.y. 45 (1115 C.E.). It records a gift of three cows for a twilight lamp to the temple of the god Tiruvālakkōyiluḍaiya Mahādēvar of Tirukkachchūr alias Nittavinōdanallūr, by Amarakaḷa-nāyakaṉ, a *vēḷāṉ*.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்கசோழதேவற்கு யாண்டு நாற்பத்தஞ்சாவது
2. திருக்கச்சூரான நித்தவிநோத நல்லூர் [கிராந்தை] வேளாந் அமரகளநாயகநே-
3. ன் எங்களூர்த் திருவாலக்கோயிலுடைய ஊஹாதேவற்கு நித்தற்படி ஸந்-
4. திவிளக்கு ஒந்றுக்கு இந்த ஸ்ரீகோயிலில் நாலோபாதி காணி உடைய ஹாரஹா-
5. ஜி வெண்காடன் நக்கப்பட்டநெநும் வெண்காடன் திருச்சிற்றம்பலமுடையா-
6. னெநும் வெண்காடன் சதிரநெநும் வெண்காடன் திருவாலக் கோயிலுடையா நெநு-
7. ம் இந்நால்வொமும் ஸந்திவிளக்கொந்றுக்கும் நாங்கள் இவநிடையிற் கைக்-
8. கொண்ட பசு மூன்றும் கைக்கொண்டு சந்திராதித்தவரை செலுத்தக் கட-

9. விதாக ஸம்மதித்தோம் எங்களிற் பின்பு எங்கள் வம் நாலோபாதி செய்-
10. வாநே செலுத்தக்கடவான் இச்சஙிவிளக்கொன்றும் ஸ்ரீமாஹேஸ்வர ர-
11. க்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 160/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 22
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1200
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 281/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 21 (7)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் வடக்குச் சுவர்.		

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டு முல்லைப்பாடி ஊரைச் சார்ந்த திருச்சுரக்கண்ணப்பன் ஆதிநாயகன் பஞ்சநதிவாணன் ராஜராஜ நீலகங்கரையன் என்பவர் திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் ஒரு நந்தாவிளக்கு எரிப்பதற்கு 32 பசுக்களும் ஒரு காளையும் வழங்கியுள்ளார். செங்குன்றத்தில் இருக்கும் மன்றாடி இனத்தைச் சார்ந்த ஆட்கொண்டகோனும் இவரது மகன்கள் ஆடவல்லான் மற்றும் சிற்றி ஆகிய இம்மூவரும் 32 பசுக்களும், ஒரு காளையும் பெற்றுக்கொண்டு இக்கோயிலில் நந்தாவிளக்கு எரிப்பதற்காக ' இராசகேசரி' என்னும் அளவையால் தினமும் ஓர் உழக்கு நெய் வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōl̲a -Kulōttuṅga-III. r.y. 22 (1200 C.E.). It records a gift of perpetual lamp to the Tiruvālakkōyil-uḍaiya nāyanār of Tirukkchchūr to belong to Mullaipāḍi, in the same nāḍu, kōṭṭam and maṇḍalam. It is stated that 32 cows and one bull which he donated for the purpose of burning the lamp, were entrusted to *man̲rāḍi* Āṭkoṇḍak-kōn̲, his son Āḍavallān̲ and the latter's younger brother Sir̲r̲i of Seṅgun̲r̲am who had agreed to measure out daily one *ul̲akku* of ghee by the measure called *Irāśakēsari*.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்கரவத்திகள் மதுரையும் பாண்டியனை முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீகு-
2. லோத்துங்கசோழ தேவற்கு யாண்டு உ௰உ ஆவது ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் கள-
3. த்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் ஆளுடையார் திருவாலக்கோயிலுடைய நாயநாற்கு

4. இந்நாட்டுச் செங்குன்றத்திலிருக்கும் மன்றாடி ஆட்கொண்டக்கோனும் இவன் மகன் ஆடவல்லானும் இவ-
5. ன் தம்பி சிற்றியும் இவ்வனைவோம் இந்நாயநாற்கு எரிப்பதாக திருநுந்தாவிளக்கு ௧ விளக்கு ஒன்றுக்கு
6. நாள்ஒன்றுக்குஇராசகேசரியால்அளப்பதாநநெய்உழக்குக்குபொலியூட்டாக இந்நாயநார்க்கு இமண்டலத்து இக்கோட்டத்து இ-
7. ந்நாட்டு முல்லைப்பாடித் திருச்சுரக்கண்ணப்பன் ஆதிநாயகன் பஞ்சநதிவாணன் *ராஜராஜ* நீலகங்கரையன் விட்ட சுரபியாய் நாங்கள் ளை-
8. கக்கொண்ட நற்பசு ௯௰௨ ம் இஷபம் ௧ ம் பசு முப்பத்திரண்டும் இஷபம் ஒன்றும் கைக்கொண்டு *சந்த்ராதித்த*வ-
9. ற் செலுத்தக்கடவோமாகச் சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் இவ்வனைவோம் இது *பந்மாஹேஸ்வர ர*–
10. *க்ஷை* உ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 161/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 40
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1218
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 282/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 22
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முன்மண்டபத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : கல்வெட்டு முழுமையாகயில்லை. நந்திபன்மன் அளித்த ஆணை என்ற குறிப்பு மட்டுமே காணப்படுகிறது.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Kulōttuṅga-III. r.y. 40 (1217-18 C.E.). This inscription is incomplete.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்ரவத்திகள் மதுரையுமீழமுங் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங் கொ-
2. ண்டருளி வீரா அபிஷேகமும் விசையா அபிஷேகமும் பண்ணி அருளன ஸ்ரீகுலோத்துங்க சோழதேவரா-
3. ன திரிபுவனவீரதேவர்க்கு யாண்டு சய. . . . நந்திபன்மன் ஓலை ஜயங்கொண்ட சோழமண்டலத்து

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 162/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 36
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1214
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 283/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 23 (6)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் வடக்குச் சுவர்.		

குறிப்புரை : சேதிராயன் என்ற அதிகாரி வைத்த கோரிக்கையின் அடிப்படையில் மூன்றாம் குலோத்துங்கசோழனின் நேரடி ஆணையாகும். செங்குன்றம் என்கிற அருமொழிதேவ நல்லூரில் 47 வேலி நிலமும் வல்ல நாட்டில் வெள்ளாள மடையர் புள்ளியம் நிலம் 67 வேலி நிலமும் திருக்கச்சூர் திருவாலக்கோயில் வழிபாட்டுத் தேவைகளுக்காக இந்நிலத்தின் மீதான வரிகளை நீக்கி ஆணையிடப்பட்டுள்ள செய்தி.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōl̲a -Kulōttuṅga-III (?). r.y. 36 (1213-14 C.E.). This inscription records the gift made by the king of 48 *vēli* of land in Seṅgun̲r̲am Arumol̲idēva nallūr in Seṅgun̲r̲a-nāḍu in Kaḷattūr kōṭṭam, in Jayaṅkoṇḍaśōl̲a-maṇḍalam, and 67 *vēli* of land in *veḷḷāḷa* Maḍaiyār Pun̲n̲iyam in Valla-nāḍu as *dēvadāna ir̲aiyili* to the temple of Tirukkchchūr to provide for offerings to the deity therein. The gift was made on the request of Chēdiyarāyan̲.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவநசக்ரவர்த்தி கோநேரின்மை கொண்டான் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து களத்தூர் கோ-
2. ட்டத்து செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடையாற் கோயிலிற் தேவகன்மிகளுக்கு ஸ்ரீமாசே-
3. ஹஸ்வர கண்காணி செ[ய்]வார்களுக்கு ஸ்ரீகாரியஞ்செய்வானுக்கும் இத்தேவர்க்கு வேண்டும் நிலந் தங்களுக்கு இறுப்பதா-
4. க இன்னாட்டுச் செங்குன்றமான அருமொழிதேவ நல்லூரிலே நாற்பத்தெண் வேலி நிலமும் வல்லநாட்டு வெ-

5. ள்ளாள மடையார் புன்னியம் நிலம் அருபத்து ஏழுவேலியும் முப்பத்து ஆறாவது பசான முதல்அந்தராயம்
6. பாட்டம் உட்பட தேவதான இறையிலி ஆக விடக்கடவதாக பெற வேணுமென்று சேதிராயன் நமக்கு சொன்னமை-
7. யில் இப்படி செய்யக்கடவதாகச் சொல்லி கணக்கிலும் இட்டுக் கொள்ளக்கடவர்களாக வரிக்கு கூறு செய்வார்களுக்கும் சொன்ே-
8. னாம் இநிலம் முப்பத்து ஆறாவது பசான முதல் அந்தராயம் பாட்டம் உட்பட இத்தேவர்க்குத் தேவதான இறையிலி ஆகக் கொ-
9. ண்டு நிவன்தஞ் செலுத்த ப[ண்]ணுக எழுதின திருமந்திரஓலை இராசநாராயண மூவேந்த வோளன் இவை பல்லவராயன் எழுத்து இவை விழி-
10. (ண)[ஞ]த்தரையனெழுத்து இவை தொண்டைமானெழுத்து இவை சித்தராயனெழுத்து இவை சேதிகுலராயனெழுத்து இவை சிங்கரா-
11. யனெழுத்து இவை காடவராயனெழுத்து இவை அங்கராயனெழுத்து இவை விசைய ராயனெழுத்து இவை நீலகங்க-
12. ரையன் எழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 163/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 37
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1215
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 284/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 24 (8)

அரசு : சோழர்

அரசன் : திரிபுவனவீரதேவர் (மூன்றாம் குலோத்துங்கன்)

இடம் : கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் வடக்குச் சுவர்.

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துக் குன்றநாட்டு இரையூர் ஊரைச் சார்ந்த பலகண்ணன் வீதிவிடங்கன் வடுகநாதன் என்பவரிமிருந்து இக்கோயிலில் காணியுடைய சிவபிராமணன் தமன் கூத்தபட்டன் மகன் விநாயக பட்டன் என்பவர் மூன்று பழங்காசுகள் பெற்றுக்கொண்டு திருவாலக்கோயிலில் ஒரு சந்திவிளக்கு எரிப்பதாக உறுதியளித்துள்ளார்.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Kulōttuṅga-III. r.y. 37 (1215 C.E.). This inscription is incomplete. It records a gift of a twilight lamp and a sum of 3 *paḻaṅkāśu* to provide for that, to the Tiruvālakkōyil temple by Palakaṉṉaṉ Vīdiviṭaṅkaṉ Vaḍuganāthaṉ of Iraiyūr in Kuṉṟa-nāḍu in Uṟṟkkāṭṭuk-kōṭṭam in Jayaṅkoṇḍaśōḻa-maṇḍalam. The money was accepted by the *sivabrāhmanā* who had right of worship in the temple, named Vināyaka-bhaṭṭaṉ, son of Kūtta-bhaṭṭaṉ who must have agreed to burn the twilight lamp.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்கரவத்திகள் ஸ்ரீதிரிபுவனவீரதேவற்கு யாண்டு முப்பத்தேழாவது
2. ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூற் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் உடையார்
3. திருவாலக்கோயிலுடைய நாயனாற்கு இம்மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துக் குன்றனாட்டு இரையூர் பல-
4. கண்ணந் வீதிவிடங்கன் வடுகநாதநேன் வைத்த சந்திவிளக்கு ஒன்றுக்கு இக்கோயிற் காணி உடைய சிவப்ர[ா*]மணந் தமன் கூ-
5. த்தபட்டன் மகன் வினாயகபட்டநேன் கைக்கொண்ட பழங்காசு ௩ இப்பழங்காசு மூன்றுங் கைக்கொண்டு சந்திவிளக்கு ஒன்-

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 164/2024**

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 28
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1206
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 285/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 25 (3)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் வடக்குச் சுவர்.		

குறிப்புரை : செங்காட்டுக் கோட்டத்து கோனாதி நாட்டு உறத்தூர் ஊரைச் சார்ந்த ஆயிலுழான் ஆளுடையான் காக்கு நாயக்கன் என்பவர் திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் இரண்டு சந்தி விளக்குகள் வைப்பதற்கு இக்கோயில் சிவபிராமணர் வசம் விட்ட இருபத்து நான்கு ஆடுகளைப் பெற்றுக்கொண்டு இராசகேசரி என்னும் அளவையால் மாதம் ஒன்றுக்கு இரண்டு நாழி நெய் அளப்பதாக திருக்கச்சூர் மன்றாடி மாடத்தான் மகன் சாமிகோன் என்பவர் உறுதியளித்துள்ளார். மேலும், இவர் இதற்கு முன்னர் இக்கோயில் பண்டாரத்தில் இருந்து பன்னிரெண்டு ஆடுகளைப் பெற்றுக்கொண்டு மூன்று சந்தி விளக்குகள் எரிக்க மாதம் ஒன்றுக்கு நாழி அளவு நெய் அளப்பதாகவும் தெரிவித்து உடன்படிக்கை செய்துக் கொடுத்துள்ளார்.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̤ - Chōl̤a -Kulōttuṅga-III. r.y. 28 (1206 C.E.). It records a gift of two twilight lamps to the Tiruvālakkōyil-uḍaiya nāyanār temple at Tirukkachchūr, made by Āyilul̤ān̲ Āl̤uḍaiyān̲ Kākkunāyakkan̲ of Ur̲attūr in Kōn̲ādi-nāḍu in Seṅkāṭṭuk-kōṭṭam in Jayaṅkoṇḍaśōl̤a-maṇḍalam. It is stated that the he gave 24 sheep to provide ghee for the lamps to the *sivabrāhmanā* of the temple and that these sheep were received by Sāmik-kōn̲ān̲ Kākkunāyakka-kōn̲ān̲ son of *man̲rāḍi* Māḍattān̲ of Tirukkachchūr itself, who had agreed to measure out two *nāl̤i* of ghee monthly.

The inscription also records that the same Sāmik-kōn̲ān̲ Kākkunāyakka-kōn̲ān̲ had perviously received 12 sheep from the temple treasury to provide ghee for a *sandhi* lamp, and that he had agreed to measure out one *nāl̤i* of ghee monthly in this connection. The measure used to measure out the ghee is called *Irāśakēsari*.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்கரவத்திகள் மதுரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீ குலோத்-
2. துங்க சோழதேவற்கு யாண்டு இருபத்தெட்டாவது ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துச் செங்குன்-
3. ற நாட்டுத் திருக்கச்சூர்த் திருவாலக்கோயிலுடைய நாயனார்க்கு இம்மண்டலத்துச் செங்காட்டுக் கோட்டத்துக் கோனாதி நா-
4. ட்டு உறத்தூராயிலுழான் ஆளுடையான் காக்கு நாயக்கன் வைத்த சந்திவிளக்கு இரண்டுக்கும் இக்கோயில் காணியுடைய சிவப்பிரா-
5. மணர் வசம் விட்ட ஆடு இருபத்துநாலும் இத்திருக்கச்சூரிலிருக்கும் மன்றாடி மாடத்தான் மகன் சாமி கோனான் காக்கு நாயக்க-
6. கோனான் இவர்கள் பக்கல் நான் கைக்கொண்டு மாதம் ஒன்றுக்கு செல்வி ராசகேசரியாலே இருநாழி நெய் சந்-
7. திராதித்தவரை முட்டாமல் அளக்ககடவேநாகச் சம்மததித்துச் சிலாலேகை பண்ணிக்குடுத்தே-
8. ன் மன்றாடி மாடத்தான் சாமிக்கோனான் காக்குநாயக்க கோனேன் நான் முன்னாளில் இன்னாயனார் சீபண்டாரத்து ஸந்தி விளக்கு ஒ-
9. ன்றுக்குக் கைக்கொண்ட ஆடு பன்னிரண்டுக்கும் மாதம் ஒன்றுக்கு இன்னாழியால் அளக்கும் நெய் நாழியாக விளக்கு மூன்-
10. றும் சந்திராதித்தவரை செலுத்துவேனாகச் சிலாலேகை பண்ணிக்குடுத்தேன் இது பன்மாகேசுர ரக்ஷை உ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 165/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 21
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1199
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 286/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 26 (1)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் வடக்குச் சுவர்.		

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து புலியூர் கோட்டம் என்கிற குலோத்துங்கசோழ வளநாட்டு மாங்காட்டு நாட்டு கூத்தன்பாக்கம் ஊரின் திருவையார் கோயில் தேவகன்மி, மாகேசுவரர் கண்காணி, கோயில் காரியம் செய்வார்கள் ஆகியோருக்கு மன்னன் ஆணையினை தெரிவிக்கும் கல்வெட்டு ஆவணமாகும்.

இந்த ஆணை 'திருமந்திர ஓலை' மூவேந்த வேளான் என்னும் அதிகாரியால் தயார் செய்யப்பட்டு மன்னரின் பிற அதிகாரிகள் வழியாக வழங்கப்பட்டுள்ளது. மாங்காட்டு நாட்டிலுள்ள பாரிபாக்கம் ஊரில் 25 வேலி நிலமும், அரும்பாக்கம் ஊரில் 40 வேலி நிலமும், மாத்தூர் ஊரில் 10 வேலி நிலமும் ஆக மொத்தம் 75 வேலி நிலம் இக்கோயிலின் தினசரி வழிபாட்டுத்தேவைகளுக்குத் தேவதான இறையிலியாக வழங்கப்பட்டுள்ளது.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tami̱l - Chō̱la -Kulōttuṅga-III. r.y. 21 (1199 C.E.). It records a royal order drafted by *tirumandira-ōlai* Mī̱nava̱n-Mūvēndavē̱lā̱n and issued through his officers, to the *dēvaka̱nmi, śrīmāhēśvara kaṅgā̱ni* and *śrīkāryam* of the temple of Tiruvaiyār-uḍaiyār of Kūttaṉpākkam in Māṅgāḍu-nāḍu in Puliyūr-kōṭṭam alias Kulttuṅgaśō̱la-Vaḷanāḍu in Jayaṅkoṇḍaśō̱la-maṇḍalam granting the lands of 25 *vēli* from Pāripākkam, 40 *vēli* from Arumpākkam and 10 *vēli* from Māttūr, all belonging to the same nāḍu *ḍēvadā̱na-i̱raiyili* for the offerings to this god.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ *திரிபுவநசக்கரவத்தி* கோநேரின்மை கொண்டாந் ஜயங்கொண்ட சோழமண்டலத்து புலியூர் கோட்டமான
2. குலோத்துங்க சோழவளநாட்டு மாங்காட்டு நாட்டு கூத்தன் பாக்கத்து உடையார் திருவையார் உடையார் கோயிலில் தேவக-

3. ன்மிக்கும் ஸ்ரீமாஹேஸ்வர கங்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியஞ் செய்வானுக்கும் இத்தேவர்க்கு வேண்டு நிவன்தங்களுக்கு இறுப்ப-
4. தாக இந்நாட்டு பாரிபாக்கம் பொத்தகப்படி நிலம் இருபத்தைந் வேலியும் அரும்பாக்கம் நிலம் நாற்பதிற்று வேலியும் மாத்தூர் நிலம்
5. பதிற்றுவேலியும் இத்தேவற்க்கு தேவதாந இறையிலியாக இடக்கடவதாகப் பெறவேணுமென்று வற்சஸராயரும் நமக்குச் சொல்லிவரகா-
6. ட்டி இப்படி நமக்கு தொண்டைமாநும் நமக்குச் சொன்னவாறே இப்படி செய்யக்கடவதாக சொல்லி கணக்கினும் இட்டுக் கொள்ளக்கட-
7. வர்கள் வரிக்கூறு செய்வார்களுக்குச் சொன்நோம் இன்நிலம் இருபத்தொன்றாவதின் எதிராமாண்டு முதல் இத்தேவர்க்கு தேவதான இறையிலியாகக்-
8. கைக்கொண்டு நிவன்தஞ் செலுத்தப் பண்ணுக எழுதினான் திருமந்திர ஓலை மீனவன் மூவேந்தவேளான் யாண்டு இருபத்தொன்றாவது உ௰க றாவது நா-
9. ள் ஊரு ௸ இவை தொண்டைமான் எழுத்து இவை நிகரிலிசோழ பல்லவராயனெழுத்து இவை வில்லவராயன் எழுத்து இவைக் காலிங்கராயன் எழுத்து
10. இவை வரகுணராயன் எழுத்து இவை மூவேந்தராயனெழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 166/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 23
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1200-01
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 287/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 27 (4)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்த மண்டபம் வடக்குச் சுவர்.		

குறிப்புரை : திருக்கச்சூர் திருவாலக்கோயில் உடையார் கோயிலில் தலா ஒரு சந்தி விளக்கு எரிப்பதற்கு திருக்கச்சூர் கிரந்தை சேரிக்கூத்தன் மாலைப்பாகம் வைத்தான் என்பவரும் ஊற்றுக்காட்டுக் கோட்டத்துத் தமனூர் நாட்டு, வேலூர் குமரன் சாத்தன் வாரணங் காத்தான் திருச்சிற்றம்பலம் உடையான் என்பவரிடமிருந்து தலா இரண்டு பழங்காசுகளை இக்கோயிலில் காணியுடைய சிவப்பிராமணர்கள் பாரத்வாஜி காஞ்சிக்குறி ஸ்ரீகண்டபட்டன் உடையபிள்ளை ஆன நித்ய கல்யாண பட்டன் மற்றும் ஆழ்வான் தேவப்பிள்ளை ஆன நாற்பத்தெண்ணாயிர பட்டன் ஆகிய இருவரும் பெற்றுக்கொண்டு இந்த இரண்டு சந்தி விளக்குகளைத் தொடர்ந்து எரிப்பதாக சம்மதித்துக் கொடுத்த உடன்படிக்கை ஆவணம்.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Kulōttuṅga-III. r.y. 23 (1200-01C.E.). It records the donation of two twilight lamps *(sandhi)* to the Tiruvālakkōyil temple at Tirukkachchūr, one by a local resident, Kirandai Chērikkūttaṉ and the other by Kumaraṉ Sāttaṉ Vāraṇaṅkāttāṉ Tiruchiṟṟambalam-uḍaiyāṉ of Vēlūr in Damaṇūr nāḍu of Ūttukkāṭṭuk-kōṭṭam. Each donar contributed 2 *paḻaṅkāśū,* which were received by the sivabrahmanās Kāñjikkuṛi Śrikaṇḍa bhaṭṭaṉ Uḍaiyapiḷḷai alias Nityakalyāṇa bhaṭṭaṉ and Āḻvāṉ Dēvapiḷḷai alias Nāṟpetteṇṇāyira bhaṭṭaṉ who under took the responsibility of burning of the two twilight lamps.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவநச்சக்ரவத்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்கசோ-
2. ழதேவற்கு யாண்டு உ௰௩ஆவது திருக்கச்சூர் ஆளுடையார் திருவாலக் கோயிலுடையார்க்கு இவ்வூர் கிரந்தை சேரிக்கூத்தன்

3. மாலைப்பாகம் வைத்தாந் வைத்த சந்திவிளக்கு க ஒன்றுக்கு இக்கோயில் காணியுடைய சிவப்ராஹ்மண-

4. ன் பாரத்வாஜி கூாஞ்ஜிகுறி ஸ்ரீகண்டபட்டன் உடைய பிள்ளையான நித்யகல்யாண பட்டன் கைக்கொண்ட பழங்காசு உ ம் ஊற்றுகாட்-

5. டுக்கோட்டத்துத் தமனூர் நாட்டு வேலூர் குமரன் சாத்தன் வாரணங்காத்தான் திருச்சிற்றம்பலமுடையான் வைத்த சந்திவிளக்கு ஒ-

6. ன்றுக்கு இக்கோயிலில் காணியுடைய சிவப்ராஹ்மணன் பாரத்வாஜி ஆழ்வான் தேவப்பிள்ளையான நாற்பத்தெண்ணாயிர பட்டன் கைக்கொ-

7. காண்ட பழங்காசு உ ம் ஆக பழங்காசு ச இப்பழங்காசு நாலுங் கைக்கொண்டு சந்த்ராதித்யவரை இரண்டு சந்திவிளக்கு எரிக்க கடவோ-

8. மாக ஸம்மதித்து சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் இவ்விருவோம் இது பந்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 167/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 3
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1181
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 288/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 228 (37)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் கிழக்குச் சுவர்.		

குறிப்புரை : களத்தூர் கோட்டத்துக் களத்தூர் நாட்டு உழலூர் என்கிற இராஜராஜ நல்லூரில் வசிக்கும் புதுப்பாக்கம் ஊர்த் தலைவன் ஆதன் என்பவர் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடையார் கோயிலில் இரண்டு சந்திவிளக்குகள் எரிப்பதற்கு இக்கோயிலில் காணி உடைய சிவபிராமணன் நீறணிந்தான் ஆன தில்லைநாயக பட்டனிடம் 4 பழங்காசுகளை வழங்கினார். இக்காசுகளைப் பெற்றுக்கொண்டு இரண்டு சந்தி விளக்குகள் எரிப்பதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

Summary : The east wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōl̲a -Kulōttuṅga-III. r.y. 3 (1181 C.E.). It records a gift of two *sandhi* lamps to the temple of Tiruvālakkōyil at Tirukkchchūr by Puduppākkil̲ān-Ādan̲ of Ul̲alūr alias Rājarājanallūr in Kal̲attūr-kōṭṭam. It is stated that the donor entrusted 4 *pal̲aṅkāśu* to provide for the lamps with the *sivabrāhmanā* Nīr̲aṇindān̲ alias Tillaināyaka-bhaṭṭan̲ belonging to Kānar̲aikuḍi.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்ரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு மூன்றாவது ஆவணி மாஸப்பிறஷ மூன்றாந்திய[தி] நாள் ஜயங்கொ-
2. ண்டசோழ மண்டலத்து களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடையார்க்கு இக்கோட்டத்து களத்தூர் நாட்-
3. டு உழலூரான ராஜராஜ நல்லூரிலிருக்கும் புதுப்பாக்கிழாநாதநேந் வைத்த சந்திவிளக்கிரண்டுக்கு இட்ட பழங்காசு ச இக்காசு நாலும் இக்கோ-
4. யிற்காணி உடைய சிவப்ராஹ்மணந் காஸ்யப கோத்ரத்து காநறை குடி ஸூத்ரஸ்ரமுடையா நீறணிஞாநாந தில்லைநாயக பட்டநேந் இ-
5. ப்பழங்காசு நாலுங்கைக் கொண்டு இச்சந்திவிளக்கிரண்டும் சந்த்ராதித்தவற் செலுத்தக்கடவோமாக ஸம்மதித்தோம் நாநுமெந் வங்ஸத்தாரு-
6. ம் இது பந்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 168/2024**

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 5
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1183
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 289/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 29 (38)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் கிழக்குச் சுவர்.		

குறிப்புரை : திருக்கச்சூர் திருவாலக்கோயில் உடையார் கோயிலில் இரண்டு சந்திவிளக்குகள் எரிப்பதற்கு திருக்கச்சூர் ஊரில் இருந்த நொச்சிக்கிழான் திருவாலக் கோயிலுடையான் தில்லைக்கூத்தன் மற்றும் இவரது தம்பி திருவாவடுதுறைப் பெருமான் ஆகிய இவ்விருவரிடம் இருந்து இக்கோயில் சிவபிராமணர்கள் கௌதமன் திருவுடையான் ஆன தில்லை நாயகபட்டன் மற்றும் இவரது தம்பி சூரியதேவன் எனும் பன்மாகேசுவர பட்டன் ஆகிய இவ்விருவரும் 4 பழங்காசுகளைப் பெற்றுக்கொண்டு இரண்டு சந்தி விளக்குகள் எரிப்பதற்காக உறுதியளித்த உடன்படிக்கை.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̠ - Chōl̠a -Kulōttuṅga-III. r.y. 5 (1183C.E.). It records a gift of two *sandhi* lamps to the temple of Tirukkachchūr by two local persons named Nochchikkil̠ān̠ Tiruvālakkōyil-uḍaiyān̠ Tillaikkūttan̠ and his younger brother Tiruvāvaḍutur̠aip-perumān̠. It is stated that a sum of 4 *pal̠aṅkāśu* endowed by them to provide for the lamps, was received by two *sivabrāhmanās* in the temple, named Tiruvuḍaiyān̠ alias Tillaināyaka, bhaṭṭan̠ and his younger brother Sūryadēvan̠ alias Pan̠māhēśvara-bhaṭṭan̠, who had agreed to burn the lamp perpetually.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்ரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழதேவற்கு யாண்டு ரு ஆவது திருக்கச்சூர் ஆளுடையார் திருவாலக்கோ-
2. யிலுடையாற்கு இவ்வூர் நொச்சிக்கிழாந் திருவாலக்கோயிலுடையாந் தில்லைக்கூத்தனும் இவந் தம்பி திருவாவடுதுறைப் பெருமானும்
3. வைத்த சந்திவிளக்கு உ க்கு இக்கோயிலிற் காணியுடைய ஸிவப்ராஹ்மணந் மௌகஉந் திருவுடையானான தில்லைநாயகப்பட்டனும் இவந் த-

4. ம்பி சூரிய தேவனான பன்மாஹேஶ்வரபட்டனு மிவ்விருவோ மிவர்கள் பக்கல் கைக்கொண்ட பழங்காசு ச இப்பழங்காசு நாலுங் கைக்கெ-

5. காண்டு சஂத்ராதித்யவர் எரிக்கக்கடவோமாக ஸம்மதித்து சிலாலேகை பண்ணிக்குடுத்தோமிவ்விருவோம் இது பன்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 169/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 35
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1212-13
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 290/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 30 (11)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன் (திரிபுவன வீரதேவர்)		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் மேற்குச் சுவர்.		

குறிப்புரை : சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் நந்திபன்மன் என்ற அதிகாரியால் வழங்கப்பட்ட ஆணை. ஜெயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து வல்ல நாட்டு மடையார் புன்னியம் என்ற ஊரிலிருந்த அம்பர் கிழவனும் நெற்குன்றம் கிழவனும் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுக்குரிய தேவதான நிலங்கள் சுருங்கி வருகின்றன என்றும் ஆதலால் கோயிலில் நடைபெறும் பூசை, கோயில் திருப்பணிகள் ஆகியவை நடைபெறவில்லை என கோயில் நிர்வாகிகள் (தானத்தார்கள்) தெரிவித்ததாக முறையிட்டனர். மடையார் புன்னியம் ஊரில் உள்ள தேவதான நிலம் மற்றும் பள்ளிச்சந்தம் நிலம் ஆகியவற்றை நீக்கி மீதம் இருந்த 67 வேலி நிலமும் கொல்லை நிலமும் திருவாலக்கோயில் வழிபாட்டுத் தேவைகளுக்காக வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Kulōttuṅga-III. r.y. 35 (1212-13 C.E.).

It records an order of Nandipaṉmaṉ. Two persons Ambar-kiḻavaṉ and Neṟkuṉṟakkiḻāṉ owning lands in Maḍaiyār-punniyam in Valla-nāḍu in Kaḷattūr kōṭṭam, in Jayaṅkoṇḍaśōḻa-maṇḍalam represented that the *dēvadāna* of the temple of Tiruvālakkōyil-uḍaiyā-nāyaṉār of Tirukkachchūr in Seṅguṉṟa-nāḍu, were getting decreases and that the temple trustees *(tāṉattār)* were saying that the services in the temple and repairs to it were not conducted. To retrieve the situation excluding the *dēvadāna* and the *paḷḷichchanda* lands, the remaining 67 *vēli* in extent together garden with land in Maḍaiyār-puṉṉiyam, were granted to the temple for services.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநசக்கரவத்திகள் மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டி-

2. யன் முடித்தலையுங் கொண்டு வீரா அபிஷேகமும் விசைய அபிஷேகமும் பண்-
3. ணி அருளின ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவரான திரிபுவனவீரதேவர்க்கு யாண்-
4. டு ௩௰௫ ஆவது நந்திபன்மன் ஓலை ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்-
5. தூர்க் கோட்டத்து வல்லநாட்டு மடையார் புன்னியங்காணி உடைய அம்பர்கிழவனும்
6. நெற்குன்றங்கிழானும் கண்டு இக்கோட்டத்துச் செங்குன்றநாட்டுத் திருக்கச்சூர் உடைய-
7. ஙார் திருவாலக்கோயிலுடையார்க்குத் தேவதானஞ் சுருங்க இருக்கையாலே பூ-
8. சை தட்டுப்பட்டுச் செல்லாநின்றதென்றும் திருப்பணியுஞ் செல்லப்பெறுகு-
9. தில்லையென்று தானத்தார் சொல்லுகையாலே தங்களூர் உள்ளாத தேவதான-
10. ப்பள்ளிச்சந்தமான நிலங்கள் நீக்கி நின்ற நிலம் அறுபத்தெழுவேலியும் கொல்லை நில-
11. மும் இந்நாயனார்க்கு முப்பத்தஞ்சாவது நாள் இருநூற்று எண்பது முதல் வேண்டும் நிவ-
12. ந்தங்களுக்கு இறுப்பதாகத் தேவதானமாக இட்டது தாங்கள் இக்கோயிலிற் தானத்தாை-
13. ரக்கண்டு கடமையும் இறுத்துக் குடிமையுஞ் செய்யப் பண்ணுக இவை நந்திபன்ம-
14. ன் எழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 170/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 25
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: 1203
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 291/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 31 (9)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் வடமேற்கு குமுதம்.		

குறிப்புரை : கல்வெட்டு மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுகிறது. திருவாலக்கோயிலில் விளக்கெரிப்பதற்கு 3000 அன்றாடு புதுக்காசுகள் வழங்கப்பட்ட செய்தி.

Summary : The north and west wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Kulōttuṅga-III. r.y. 25 (1203 C.E.). The inscription is badly damaged. It appears to record a gift of three thousand *anṟāḍu naṟpudukkāśu* for burning a lamp in the Tiruvālakkōyil temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கேழ்வி முன்னாக த்ரிபுவனச்சக்கரவத்திகள் மதுரையுமீழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு உ௰௫ வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து களத்தூர் கோ-
2. ட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் நித்தவினோத நல்லூர் உடையார் திருவாலக்கோயில் . . . உடைய பிள்ளையான திருச்சிற்றம்பல பட்டனேன் இன்னாயநார் சீபண்டாரத்து நான் கைக்கொண்-
3. ட அன்றாடு நற்புதுக்காசு ௩ ௲ இப்புதுக்காசு மூவாயிரத்துக்கும் எரிப்பதான இந்நெய் உழக்கு சந்திராதித்தவரை விணாளட்டாமே அளக்க கடவேனாகச் சம்மதித்து சிலாலேகை பண்ணிக்குடுத்தேன் உடைய
4. பிள்ளையான திருச்சிற்றம்பல பட்டனேன் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 171/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 25
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1203
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 292/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 32
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முன்மண்டபத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : உடைய பிள்ளை என்கிற திருச்சிற்றம்பல பட்டன் என்பவர் இக்கோயில் பண்டாரத்திலிருந்து பெற்ற பொருளிலிருந்து தினசரி உழக்கு நெய் அளித்து விளக்கு எரிப்பதாக சம்மதித்துள்ள உடன்படிக்கை.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Kulōttuṅga-III. r.y. 25 (1203 C.E.). This fragmentary inscription appears to record a gift of some *sandhi* lamp. The endowed material (money or sheep) is stated to have been received from treasury of the temple by Uḍaiyapiḷḷai alias Tiruchchiṟṟambala-bhaṭṭaṉ who had agreed to measure one *uḻakku* of ghee.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு உ௰ரு வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க் கோ . . . .
2. . . . . ன உடைய பிள்ளையான திருச்சிற்றம்பல பட்டனேன் இன்னாயநார் சீபண்டாரத்து நான் கைக்கொண்-
3. . . . . .ருவ . . இந்நெய் உழக்கும் சந்திராதித்தவரை வி . . . . ட்டாமை அளக்க கடவேனாகச் சம்மதித்து சிலாலேகை பண்ணிக்குடுத்தேன் உடையா-

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 172/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: -
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 292A/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 33 (12 I, II)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்த மண்டபம் வடக்கு மற்றும் மேற்கு குமுதம்.		

குறிப்புரை : திருவாலக்கோயில் தேவரடியார் அரியபிள்ளை மகள் பொருதபிள்ளை என்கிற அபிமான பூஷண மாணிக்கம் என்பவர் இக்கோயிலில் விளக்கு ஒன்று எரிப்பதற்குத் தானம் அளித்துள்ளச் செய்தி.

Summary : The north and west wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōl̲a -Kulōttuṅga-III. Fragmentary. It records a gift of a lamp to the temple of Tiruvālakkōyiluḍaiyā-nāyan̲ār at Tirukkchchūr by Porudapiḷḷai alias Abhimān̲abhūshaṇa-māṇikkam, daughter of Ariyapiḷḷai, a *dēvaraḍiyāḷ* of the same temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ *த்ரிபுவநச்சக்ரவ*த்திகள் ஸ்ரீ *ராஜராஜ*தேவற்கு யாண்டு ஆறாவது திருக்கச்சூர் ஆளுடையார் திருவாலக்கோயிலுடைய நாயநார் கோயிலிற் தேவரடியாள் அரிய-
2. பிள்ளை மகள் பொருதபிள்ளையான அபிமான பூஷணமாணிக்கமேன் உடையார் திரு-
3. வாலக்கோயிலுடைய நாயனா . . . . விளக்கு ஒன்றுக்கு இக்கோயிற்காணி உடை-
4. ய *மாஹேச்வர*ாசி ஆழ்வான் தேவகள் சுந்தரநாந நாற்பத்தெண்ணாயிர பட்டனேன் கைக்கொ-
5. ண்ட பழங்காசு ௲ இப்பழங் . . . . . . கைக்கொண்டு சந்திராதித்-
6. தவரை இச்சந்தி விளக்கு . . . .சிலாலேகை பண்ணிக்குடுத்தேன்
7. தேவகள் சுந்தரநான நாற்பத்தெண்ணா
8. . . . பன்*மாஹேச்வர ரக்ஷை*

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 173/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	:-
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:-
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	:292B/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 34
அரசு	: சோழர்		
அரசன்	: -		

இடம் : கச்சபேசுவரர் கோயில் முன்மண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டின் இறுதிப்பகுதி மட்டும் உள்ளது. இக்கோயிலைச் சார்ந்த வினாயகபட்டன் என்பவர் தான் பெற்றுக் கொண்ட பொருளைக் கொண்டு சேவை செய்வதாக உறுதியளித்தச் செய்தி.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̠ - Chōl̠a -Kulōttuṅga-III. Only the last line of the inscription is all that is preserved. Mentions a certain Vin̠āyaka-bhaṭṭan̠ who was probably the receipient of the gift to the temple.

கல்வெட்டு :

1. . . . . .வணாகச் சிலாலேகை பண்ணிக்குடுத்தேன் வினாயகபட்டநேந் இது சீமாஹேஶ்வர ரக்ஷெ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 174/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 22
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1200
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 293/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 35 (10)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் வடமேற்கு ஜகதி.		

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் திருவாலக்கோயில் பண்டாரத்தின் கால்நடைகளில் 32 பசுக்களையும் ஒரு காளையையும் பெற்றுக்கொண்டு, இக்கோயிலில் திருநொந்த விளக்கு எரிப்பதற்கு நாளொன்றுக்கு உழக்கு நெய் அளப்பதாக இவ்வூரைச் சார்ந்த ஒருவர் உறுதியளித்தச் செய்தி இடம்பெற்றுள்ளது.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Kulōttuṅga-III. r.y. 22 (1200 C.E.). This incomplete inscription records that a certain person of the Tirukkachchūr had obtained 32 cows and a bull from the treasury of the temple of the god Tiruvālakkōyil-uḍaiyār and in lieu there of had agreed to burn a *nandā* (Perpetual) lamp in the temple by measuring one *uḻakku* of ghee perpetually.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழதேவற்கு யாண்டு உ௰உ ஆவது ஜயங்கொண்டசோழ மண்டலத்து களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் உடையார் திரு-
2. திருவாலக்கோயிலுடைய நாயநார் பண்டார சுரவி பசுவில் இவ்வூரில் இருக்கும் மன்றாடி பேராயிரக்கோனேன் இநாயநார்க்கு ஒரு திருநுந்தா விளக்கு சந்திராதித்தவரை செலுத்துவேநாக நான் கைக்கொண்ட நற்-
3. பசு ௩௰உம் இடபம் ௧ம் கைக்கொண்டு நாள் க க்கு செல்வி ராசகேசரியாலே அளக்கக் கடவேனான் நெய் உழக்கு இத்திருநுந்தாவிளக்கு ஒன்றுக்கும் சந்திராதித்தவரை நாள் ௧க்கு உழக்கு நெய்யும் அளக்கக் கடவே-

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 175/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	:-
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: 13- ஆம் நூற்.
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 293A/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 36
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராஜராஜன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முன்மண்டபத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. கல்வெட்டின் இறுதிப் பகுதி மட்டும் இடம்பெற்றுள்ளது. இக்கோயிலைச் சார்ந்த தேவகள் சுந்தரன் ஆன நாறப்பத் தெண்ணாயிர பட்டன் என்பவர் மூன்று பழங்காசுகளைப் பெற்றுக்கொண்டு ஒரு சந்தி விளக்கு எரிப்பதாக உடன்படிக்கை செய்து கொடுத்துள்ளச் செய்தி. தேவகள் சுந்தரன் ஆன நாறப்பத்தெண்ணாயிர பட்டன் என்பவர் தொடர் எண் 156-கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளார். அதன் அடிப்படையில் காலம் வரையறுக்கப்பட்டுள்ளது.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Rājarāja-III. This inscription too is extremely fragmentary, and contains only its last few lines. It appears to refer to the gift of 5 *paḻaṅkāśu* for *sandhi* lamp (other details lost). The person who accepted the endowment is stated to be Dēvagaḷ Sundaram alias Nāṟpatte[ṇṇāyira-bhaṭṭaṉ] (cf. no. 156 above.).

கல்வெட்டு :

1. ண்ட பழங்காசு ௫ இப்பழங் . . . .
2. கைக்கொண்டு சந்திராதித்தவரை இச்சந்திவிளக்கு . . . .
3. சிலாலேகை பண்ணிக்குடுத்தேன் தேவகள் சுந்தரநான நாறப்பத்தெ. . . . . .
4. . ன் மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 176/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 6
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1222
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 294/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 37
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராஜராஜன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முன்மண்டபத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : திருக்கச்சூர் திருவாலக்கோயில் இறைவனுக்குத் தேவையான வழிபாட்டுத் தேவைகளுக்காக மன்னன் நிலதானம் வழங்கிய செய்தி. இக்கல்வெட்டு மிகவும் சேதமடைந்துள்ளதால் முழுவிவரம் அறிய இயலவில்லை.

Summary : The north wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Rājarāja-III. r.y. 6 (1221-22 C.E.). This inscription is very much damaged. It appear to record a gift of land made by the king, to provide for all the services to the temple of Tiruvālakkōyil-uḍaiyār at Tirukkachchūr.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜதேவற்கு யாண்டு ஆறாவது திருக்கச்சூர் . . . .
2. திருமுகப்படி . . . . களத்தூர் கோட்டத்து செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடையாற்கு வேண்டும் நிமந்தத்துக்கு இறுப்பதாக இவ்வூர் பழம் . . . . . . .த்துயான இ. . . . .
3. . . . . நல்லூர் கமுகடிநிலம் களு . . . . . . இரு பூவி . . . . நிலம் ப . . . . . ஒரு பூ . . . . . . திப ஆக நிலம் . . . . ஈ புந்சை நிலம் . . . . ஆக நஞ்சை உள்பட்ட நிலம் . . . .
4. . . . . இருமா முக்காணி முந்திரிகைக் கீழரையே யிரண்டு மாவும் யாண்டு ஆறாவது முதலிலே . . . . இட்டோம் எழுதி தந்த திருமந்திரஓலை அனபாய மூவேந்த வேளான் எழுத்து புரவரி சீகரணநாயகம் இறையாங் -
5. . . . கிழவன் எழுத்து புரவரி சீகரணநாயகம் . . . . சி . . . . . . சீகரண . . . . குடையான் எழுத்து . . . . க்க . . . . . ராயன் எழுத்து . . . .
6. . . . . .எழுத்து . . . . .விளக்கரைக்காலுக்கு கைக்கொண்ட ஆடு . . . . லம் . . . . . ஊா விளக்கரைக்காலுக்கு கைக்கொண்ட

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 177/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 23
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1201
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 295/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 38 (34)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் கிழக்குச் சுவர்.		

குறிப்புரை : செங்குன்றங் கிழான் ஒற்றிக்கண்டன் தழுவக்குழைந்தான், அவரது தம்பி காராணைவிடங்கன், மேலும் அவருடைய இளைய தம்பி பெருமானம்பி மற்றும் தமனூர் நாட்டிலுள்ள வேலூரைச் சேர்ந்த குமரன் சாத்தன் வாரணங்காத்தான் அறமுடையான், அவரது தம்பி திருச்சிற்றம்பலமுடையான், அவரது இளைய தம்பி சேரிக்கூத்தன் மற்றும் அவருடைய இளைய தம்பி திருவேகம்பமுடையான் ஆகியோருக்கு காணியான நிலமாகவும் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுக்குத் தேவதானமாக விளங்கிடும் செங்குன்றம் ஊரின் புற ஊரான ஆம்பர்பாக்கம் எனும் இரந்திடு தியாகிநல்லூர் ஊருக்கு ஏரி இல்லை. திருவாலக்கோயில் பண்டாரத்திலிருந்து நெல் பெற்றுக்கொண்டு மேற்படி காணியாளர்களுக்கு காணியான வெண்சின்றியம்பாக்கத்தில் பெரியதேவப் புத்தேரியில் தூம்பு செய்து ஆம்பர்பாக்கம் எனும் இரந்திடு தியாகிநல்லூரில் 240 குழி நிலத்திற்குப் பாசன வசதி செய்துகொடுத்துள்ளனர். மேலும், இவ்விரு ஊரிலுள்ள நிலங்களின் விழுக்காடுகள் அடிப்படையில் நீர்ப்பாசனம் அமைய வேண்டும் என்றும் உடன்படிக்கைச் செய்துக் கொடுத்துள்ளனர்.

Summary : The east wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Kulōttuṅga-III. r.y. 23 (1200-01 C.E.). It records the provision of irrigation facility to the lands in Āmbaṟpākkam alias Irandiḍu-tiyāginallūr which was a hamlet of Seṅguṉṟam and *dēvadāna* of the temple of the god Tiruvālakkōyiluḍaiyā-nāyaṉār of Tirukkachchūr. It is stated that this dēvadāna hamlet was owned by some individuals such as Seṅguṉṟan-kiḻāṉ Oṟṟikaṇḍāṉ Taḻuvakkuḻaindāṉ of Seṅguṉṟam his younger brother Kārāṇaiviṭaṅkaṉ and the latter's younger brother Perumānambi, and Kumaraṉ Sāttaṉ Vāraṇaṅgāttāṉ-Aṟamuḍaiyāṉ of Vēlūr in Damaṉūr-nāḍu in Uṟṟkkāṭṭuk-kōṭṭam his younger brother Tiruchchiṟṟambalam-uḍaiyāṉ his younger brother Chērikkūttaṉ and his younger brother Thiruvēgambam-uḍaiyāṉ who with the help of paddy provided by the temple, permitted the

irrigation facility consisting of 240 *kuḻi* of land and *kalli tuṁbu* sluice through the tank called *Periyadēvapputtēri,* which irrigated their estate Veṇśinṟiyampakkam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் மதுரையும் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீகு-
2. லோத்துங்கசோழ தேவற்கு யாண்டு உ௰௩ ஆவது ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க்கோட்ட-
3. த்துச் செங்குன்றனாட்டு திருக்கச்சூர் ஆளுடையார் திருவாலக்கோயிலுடைய நாயநாற்கு செங்குன்றத்துச் செங்குன்றங்-
4. கிழான் ஒற்றிகொண்டான் தழுவக்குழைந்தானும் இவன் தம்பி காரணைவிடங்கனுமிவன் தம்பி பெருமாநம்பி-
5. யும் ஊற்றுக்காட்டுக்கோட்டத்துத் தமனூர் நாட்டு வேலூர்க் குமரன் சாத்தந் வாரணங்காத்தானறமுடையானு-
6. மிவந் தம்பி திருச்சிற்றம்பலமுடையானு மிவன் தம்பி சேரிக்கூத்தனு மிவன் தம்பி திருவேகம்பமுடையானு மிவ்வனை-
7. வோஞ் செங்குன்றப் பிடாகை எங்கள் காணியா மின்னாயனார் தேவதானம் ஆம்பற்பாக்கமான இரந்திடு தியாகிநல்-
8. லூர்க்கு ஏரி இல்லாமையில் எங்கள் காணியான வெண்சின்றியம்பாக்கத் தேரியான பெரியதேவப்புத்தேரியிலேய்
9. நாயனார் சீபண்டாரத்து நெல்லிட்டு இருநூற்றுநாற்பது குழியும் கல்லிதூம்பு மிட்டமையில் இவ்வேரியில் நீர் இவ்-
10. விரண்டுக்கும் சந்திராஷித்தவரை நிலவிழுக்காட்டிலே நீர் பாயக் கடவதாகச் சிலாலேகை பண்ணிக் குடுத்தோம் இவ்வ-
11. னைவோம் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 178/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 17
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1233
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 296/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 39 (35)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராஜராஜன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் கிழக்குச் சுவர்.		

குறிப்புரை : சோழமண்டலத்து உய்யகொண்ட வளநாட்டு மூலங்குடி ஊரைச் சார்ந்த பெரும்பேறுடையான் நம்பியாழ்வான் என்பவர் திருவாலக்கோயிலில் ஒரு சந்தி விளக்கெரிப்பதற்கு மூன்று பழங்காசுகளைக் கொடையாக வழங்கியுள்ளார்.

Summary : The east wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Rājarāja-III. r.y. 17 (1233 C.E.). It records a gift of a twilight lamp and a sum of 3 *paḻaṅkāśu* for it, to the Tiruvālakkōyil-uḍaiyār at Tirukkachchūr village by Perumpēṟuḍaiyāṉ Nambiyāḻvāṉ of Mūlaṅguḍi in Uyyakkoṇḍa-Vaḷanāḍu in Sōḻamaṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ *திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ இராஜராஜ*தேவற்கு யாண்டு ஆவது ஐயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூ-
2. ர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுடையாற்கு சோழமண்டலத்து உய்யக்கொண்ட வள-
3. நாட்டு மூலங்குடி காணியுடைய பெரும்பேறுடையான் நம்பியாழ்வான் வைத்த சந்திவிளக்கு க சந்திவிளக்கு ஒன்றுக்கு இக்கோ-
4. யிலில் காணியுடைய *ஶிவப்ராஹ்மணன் ஸாரஸ்வதி* தேவர்கள் சுந்தரநாந நாற்பத்தெண்ணாயிரபட்டன் கைக்கொண்ட பழங்காசு
5. ங இப்பழங்காசு மூன்றுங் கைக்கொண்டு இச்சந்திவிளக்கு ஒன்றும் சந்திராதித்தவரை எரிக்கக் கடவேநாக சிலாலேகை பண்ணிக்குடுத்தே-
6. ன் நாற்பத்தெண்ணாயிரபட்டனேன் உ இது பந்மாஹேஶ்வர *ரக்ஷை* உ

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 179/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 15
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1193
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 297/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 40 (36)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராஜராஜன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் கிழக்குச் சுவர்.		

குறிப்புரை : திருக்கச்சூர் ஊரில் நிலம் கொண்ட கரணத்தான் குலாவன் காக்கு நாயகன் என்பவர் திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் ஒரு சந்தி விளக்கு எரிக்க இரண்டு பழங்காசுகளை இக்கோயிலில் பூசை செய்வதற்கு நான்கில் ஒரு பாகம் உரிமை பெற்றிருந்த சிவபிராமணன் காஞ்சிக்குறி ஸ்ரீகண்ட பட்டன் உடைய பிள்ளை ஆன நித்யகல்யாண பட்டன் வசம் கொடுத்துள்ளார். இக்காசுகளைப் பெற்றுக் கொண்டு சந்திவிளக்கு தொடர்ந்து எரிப்பதாக சம்மதித்துள்ள செய்தி.

Summary : The east wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōl̲a -Kulōttuṅga-III. r.y. 15 (1193C.E.).

It records a gift of a twilight lamp to the Tiruvālakkōyil-uḍaiyār temple of Tirukkchchūr by Kulāvan̲ Kākkunāyakan̲ a *karaṇattān̲* and owner of property in the village. It further records that a sum of 3 *pal̲aṅkāśu* was endowed by him for this purpose, and this money was accepted by the *sivabrāhmanā* Kañchikkur̲i Srikaṇṭa-bhaṭṭan̲ Uḍaiyapil̲l̲ai alias Nityakalyāṇa-bhaṭṭan̲ who was the Sivachārya of the temple and who had ¼ share in the right of worship in the same temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்கேழ்வி முன்னாக த்ரிபுவநசக்ரவத்திகள் மதுரையும் பாண்டியனை முடித்தலையுங் கொண்டருளின ஸ்ரீகுலோத்து-
2. ங்கசோழதேவற்கு யாண்டு ௰௫ ஆவது திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுடையார்க்கு இவ்வூர்க்காணி உடைய கரணத்தான் குலாவன்
3. காக்குநாயகன் வைத்த சந்திவிளக்கு ஒன்றுக்கு இக்கோயிற் ஸைவாசார்யமும் இக்கோயிற்காணி நாலத்தொன்றும் உடைய ஶிவப்ராஹ்மணன்

4. பாரத்வாஜி காஞ்சிக்குறி ஸ்ரீ கண்டபட்டன் உடைய பிள்ளையான நித்யகல்யாண பட்டன் இவர் பக்கற் கைக்கொண்ட பழங்காசு உ இப்பழங்காசு இரண்டு-

5. ம் கைக்கொண்டு இச்சந்திவிளக்கு சந்த்ராதித்யவரை எரிக்கக் கடவேனாக ஸம்மதித்துச் சிலாலேகை பண்ணிக்குடுத்தேன் உடைய பிள்ளையான நி-

6. த்யகல்யாணபட்டனேன் இது பன்மாஹேஶ்வர ரக்ஷை உ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 180/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 33
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1210-11
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 298/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 41 (5)
அரசு	: சோழர்		
அரசன்	: திரிபுவனவீரதேவர் (மூன்றாம் குலோத்துங்கன்)		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் வடக்குச் சுவர்.		

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து குன்ற நாட்டு இணவூற் ஊரைச் சார்ந்த பல கண்ணன் வீதிவிடங்கன் வடுகநாதன் என்பவர் திருவாலக்கோயிலில் சந்தி விளக்கு ஒன்று வைப்பதற்கு மூன்று பழங்காசுகளை இக்கோயிலில் காணியுடைய சிவபிராமணன் ஆழ்வான் பட்டன் மகன் தேவப்பிள்ளை எனும் நாற்பத்தெண்ணாயிரபட்டன் என்பவரிடம் வழங்கியுள்ளார்.

Summary : The east wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamil̲ - Chōl̲a -Kulōttuṅga-III. r.y. 33 (1210-11 C.E.). This is incomplete inscription. It records a gift of three *pal̲aṅkāśu* for burning a *sandhi* lamp to the Tiruvālakkōyil-uḍaiya Nāyan̲ār at Tirukkachchūr by Palakaṇṇan̲ Vīdiviṭaṅkan̲ Vaḍugan̲āthan̲ of Iṇavūr in Kun̲r̲a-nāḍu in Ur̲r̲kkāṭṭuk-kōṭṭam in Jayaṅkoṇḍaśōl̲a-maṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங்கொண்டு வீராவ்வீஷேமமும் விசையா அபிஷ-
2. ஷேமமும் பண்ணியருளிய திரிபுவனவீரதேவற்கு யாண்டு ௩௰௩ முப்பது மூன்றாவது ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோ-
3. ட்டத்துச் செங்குன்ற னாட்டுத் திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனார்க்கு இம்மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்-
4. டத்துக் குன்றனாட்டு இணவூற் பல கண்ணந் வீதிவிடங்கன் வடுகனாதநேன் வைத்[த] சந்திவிளக்கு ஒன்றுக்கு இக்கோயில் காணி உடைய சிவப்ரா-
5. ஹ்மணந் பாரத்துவாசி ஆழ்வான் பட்டன் மகன் தேவப்பிள்ளையான நாற்பத்தெண்ணாயிரபட்டனேன் கைக்கொண்ட பழங்காசு ௩ இப்பழங்

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 181/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 29
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1207
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 299/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 42
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் அர்த்தமண்டபம் வடக்குச் சுவர்.		

குறிப்புரை : ஊற்றுக்காட்டுக் கோட்டத்துத் தமனூர் நாட்டு வேலூர் ஊரைச் சார்ந்த திருவேகம்பமுடையான் மகன் செந்தாமரைக் கண்ணன் என்பவர் திருக்கச்சூர் திருஆலக்கோயில் உடைய நாயனார் கோயிலில் இரண்டு சந்தி விளக்குகள் எரிப்பதற்காக இக்கோயிலில் காணியுடைய சிவபிராமணன் காஞ்சிக்குறி ஸ்ரீகண்ட பட்டன் தேவப்பிரியன் மகன் உடைய பிள்ளை ஆன நித்தகல்லியாண பட்டன் என்பவரிடம் நான்குப் பழங்காசுளை வழங்கியுள்ளார். இக்காசுகளைப் பெற்றுக்கொண்டு இரண்டு சந்தி விளக்குகளையும் எரிப்பதாக உறுதியளித்துள்ள உடன்படிக்கை.

Summary : The east wall of the maṇḍapa in front of the same shrine in the Kachchabēśvara temple. Tamiḻ - Chōḻa -Kulōttuṅga-III. r.y. 29 (1207 C.E.). The north wall of the manḍpa in the same temple.

It records a gift four *paḻaṅkāśu* for burning two *sandhi* lamps to the Tiruvālakkōyil-uḍaiyā-nāyaṉār temple in Tirukkchchūr by Sendāmaraikkaṇṇaṉ son of Kumāraṉ Sāttaṉ Thiruvēgambam-uḍaiyān of Vēlūr in Damaṉūr-nāḍu in Uttukkāṭṭuk-kōṭṭam. The money was accepted by the *sivabrāhmanā* Uḍaiyapiḷḷai alias Nityakalyāṇa-bhaṭṭaṉ alias son of Kañchikkuṟi Srikaṇta-bhaṭṭaṉ Dēvappiriyaṉ who had right of worship in the temple and who had agreed to carry out the burning of the lamps.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யா-
2. ண்டு இருபத்தொன்பதாவது தைம்மாஸ முதல் திருக்கச்சூர் திருஆலக்கோயில் உடைய நாயனார்க்குச் சந்திராதித்தவரை செல்வதாக ஊற்றுக்கா-

3. ட்டுக் கோட்டத்துத் தமனூர் நாட்டு வேலூர்க் குமாரன் சாத்தன் திருவேகம்பமுடையான் மகன் செந்தாமரைக்கண்ணன் வைத்த சந்திவிளக்கு ௨ இரண்-

4. டுக்கு இக்கோயிற் காணியுடைய சிவஸ்ராஹ்மணன் காஞ்சிக்குறி ஸ்ரீகண்ட பட்டன் தேவப்பிரியன் மகன் உடையப்பிள்ளையான நித்-

5. தகல்லியாண பட்டனேன் இவன் பக்கல் நான் கைக்கொண்ட பழங்காசு ச நாலுங் கைக்கொண்டு இச்சந்திவிளக்கு இரண்டும் சந்திராதித்தவரை எ-

6. ரிக்கக் கடவேனாகச் சம்மதித்துச் சிலாலேகை பண்ணிக்குடுத்தேன் உடைய பிள்ளையான நித்தகல்லியாண பட்டனேன் இது பான்மாஹேஸ்வர ரகெஷ ௳

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 182/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 13+1
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1289-90
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 300/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 43 (123)

அரசு : பாண்டியர்

அரசன் : சடையவர்மன் திரிபுவன சுந்தர பாண்டியன்

இடம் : கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று தெற்கு வெளிப்புறச் சுவர்.

குறிப்புரை : ஒவ்வொரு வியாபாரிக்கும், கைக்கோளர் தறி ஒன்றுக்கும், சாலியர் தறி ஒன்றுக்கும், எண்ணெய் வணிகர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு ஆறு பணம் வசூலிக்க வேண்டும். அவ்வாறு, வசூலிக்கப்படும் மொத்தத் தொகையில் பாதியினை இக்கோயில் பண்டாரத்துக்கு வழங்கிடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

Summary : The south wall of the outer prākārā in the same temple. Tamil̠ - Pāṇḍya - Sundara Pāṇḍya-II. r.y. 13+1 (1289-90 C.E.). It records each loom operated by *kaikōḷar,* each loom of the *sāliyar* and each oil-monker of Tirukkachchūr must pay an annual fee of six *paṇam* of the total income collected through these payments, half shall be allocated to the treasury *(srībhaṇḍāra)* of the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௰௩வ[து]க்கு எதிராமாண்டு முதல் திருக்க-
2. ச்சூர் ஆயம் புறக்கலனை கடமை கொள்ளுமிடத்து ஸ்ரீபண்டாரப்பாதி உள்பட வியாபாரிகள் பேர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்-
3. றுக்கு ஆறு பணம் கொள்ளவும் கயிக்கோளர் தறி ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆறு பணம் கொள்ளவும் சாலியர் தறி ஒன்றுக்கு ஆ-
4. ண்டு ஒன்றுக்கு ஆறு பணம் கொள்ளவும் வாணியர் பேர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆறுபணம் கொள்ளவும் இப்படி கடமை
5. கொள்ளக்கடவது இவை பொத்தப்பியராயன் எழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 183/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	:-
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்.
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 301/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 44 (119)
அரசு	: -		
அரசன்	: -		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று தெற்குச் சுவர்.		

குறிப்புரை : செங்காட்டுக் கோட்டத்து கோனாதி நாட்டுக் காவனூர் ஆன பொய்யாமொழி மங்கலம் என்ற ஊரில் அமைந்திருந்த கடிகையின் உறுப்பினரான (கற்றோர்களின் சபை) முத்தமிழ் ஆசாரியர் ஆன தமிழ்கரைகண்ட சாத்தனாருடைய பரம்பரையில் வந்த பெருநம்பிகள் என்பவர் பொய்யாமொழி மங்கலத்தை தனக்கு உரிமையாக பெற்றிருந்தார் என்று இக்கல்வெட்டுப் பகர்கிறது.

Summary : The south wall of the outer prākārā in the same temple. It states that a certain Perunambigaḷ belonging to the *santāna* (lineage or family) of certain Sāttaṉār who had the titles of *Muttamiḻ Āchāryar* and *Tamiḻ- karaikaṇḍa* and who was a member of the *Gaḍikai* of *Kāvaṉūr* alias Poyyāmoḻimaṅgalam in Kōṉāti-nāḍu in Seṅgāṭṭuk-kōṭṭam owned Poyyāmoḻimaṅgalam as his *kāṇi*.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ செங்காட்டுக் கோட்டத்து கோனாதி நாட்டுக் கா-
2. வனூரான பொய்யாமொழி மங்கலம் கடிகையாரில்
3. முத்தமிழ் ஆசாரியரான தமிழ்கரைகண்ட சாத்தனா-
4. ருடைய சந்தானத்தில் பெருநம்பிகள் காணி பொய்ய-
5. ாமொழிமங்கலம்

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 184/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 13+1
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1290
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 302/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 45 (124)
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சடையவர்மன் திரிபுவன சுந்தரபாண்டியன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று தெற்குச் சுவர்.		

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலில் ஜயங்கொண்டசோழ மண்டலத்துச் செம்பூர் கோட்டத்து மணநல்லூர் ஆன வீரசோழச் சதுர்வேதிமங்கலத்து கரணத்தான் சிற்றேரி உடையான் துலையாத செல்வன் என்கிற சித்திரமேழி வேளான் என்கிற அதிகாரி நந்தாவிளக்கு ஒன்றும் மற்றும் திருக்குத்துவிளக்கு ஒன்றும் எரிப்பதற்கு 30 பசுக்களையும் ஒரு காளையையும் கொடையாக அளித்துள்ளார்.

Summary : The south wall of the outer prākārā in the same temple. Tamiḻ - Pāṇḍya- Sundara Pāṇḍya-II. r.y. 13+1 (1290 C.E.). It records a gift of 30 cows and one ox for a *nandā* lamp and a standing lamp to the temple of the god Tiruvālakkōyil-uḍaiyā-nāyaṉār of Tirukkachchūr in Seṅguṉṟa-nāḍu in Kaḷattūr-koṭṭam, in Jayaṅkoṇḍaśōḻa-maṇḍalam by Siṟṟēṟi-uḍaiyāṉ Tulaiyāda selvaṉ alias Chittiramēḻi-vēḷāṉ, the *karaṇattāṉ* of Maṇanallūr alias Vīraśōḻach-chaturvēḍimaṅgalam in Sembūṟ-koṭṭam in the same Jayaṅkoṇḍaśōḻa-maṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீஉற் கீர்த்திக்கு மேல் கோச்சடபந்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௰௩ வதுக்கு எதிராமா-
2. ண்டு கற்கடக நாயற்று அபரபக்ஷத்து தெ௱மியும் திங்கள்க்கிழமையும் பெற்ற கார்த்திகை நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூற்-
3. கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனார்க்கு இம்மண்டலத்து செம்பூற் கோட்டத்து(ம)

4. மணநல்லூரான வீரசோழச் சறுவேதி மங்கலத்து கரணத்தான் சிற்றேரி உடையான் துலையாத செல்வனான சித்திரமேழி வேளான்
5. வைத்த திருநுந்தாவிளக்கு ஒன்றுக்கும் திருக்குத்து விளக்கு ஒன்றுக்கும் இத்திருநுந்தா விளக்கு ஒன்றுக்கு விட்ட பசு முப்பது இஷபம் ஒன்றும்
6. இக்கோயில் காணி உடைய சிவப்பிராமணரோம் கைக்கொண்டு இத்திருநுந்தாவிளக்கு ஒன்றும் சந்திராதித்தவரை எரிப்பதாக சிலாலே-
7. கை பண்ணிக்குடுத்தோம் இக்கோயில் காணி உடைய சிவப்பிராமணரோம் இது ஸ்ரீமாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 185/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 7
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1257
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 303/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 46
அரசு	: பாண்டியர்		
அரசன்	: திரிபுவன சுந்தரபாண்டியன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முன்மண்டப கிழக்குச் சுவர்.		

குறிப்புரை : பாண்டிய மன்னன் சுந்தரபாண்டிய தேவர் படைத்தளபதிகளில் விக்கிரமசோழ தேவர் ஆன இருங்கோளன் என்ற அதிகாரி களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் திருவாலக்கோயிலில் ஒரு சந்தி விளக்கெரிக்க ஓர் எருமையும், ஒரு கிடாரியும் இக்கோயிலில் 44 வட்டக் காணியுடைய சிவபிராமணர்களிடம் வழங்கியுள்ளார். இவர்கள் பெற்றுக்கொண்டு சந்தி விளக்கினைத் தொடர்ந்து எரிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

Summary : The east wall of the outer prākārā in the same temple. Tamiḻ - Pāṇḍya - Sundara Pāṇḍya-I. r.y. 7 (1257 C.E.). It records a gift of *sandhi* lamp to the Tiruvālakkōyil temple at Tirukkachchūr in Seṅguṉṟa-nāḍu of Kaḷattūr-kōṭṭam by Vikkirama-śōḻadēvar alias Iruṅkōḷaṉ a *mudali* of the king. The gift of a buffalo and a heifer to provide for this by the donor, was accepted by the *sivabrāhmanā* belonging to the 44 circles of the temple who had agreed to burn the lamp.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரி-
2. புவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டியதேவர்க்கு யாண்-
3. டு எ வது மீன நாயற்று பூறுவபக்ஷத்து தெஶமியும் நாயற்றுக்கிழ-
4. மையும் பெற்ற அத்தத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டல-
5. த்து களத்தூர்க் கோட்டத்து செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர்
6. உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனார்க்கு பெருமாள்
7. சுந்தரபாண்டிய தேவர் முதலிகளில் விக்கரமசோழ தேவர-
8. ஈன இ[ருங்கோளன்] வைத்த விளக்கு ஒன்றுக்கு விட்ட எருமை

9. ஒன்றும் கிடாரி ஒன்றுக்கும் இந்நாயனார் கோயில் நாற்பத்து நாலு
10. வட்டத்து காணி உடைய சிவப்பிராம்மணரோம் கைக்கொண்டு இச்-
11. சந்திவிளக்கு ஒன்றும் சந்திராதித்தவரை எரிக்க கடவோமாகச் சிலாலே-
12. கை பண்ணிக்குடுத்தோம் இவ்வனைவோம் இது ஸ்ரீமாகேசுர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 186/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 8
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1258
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 304/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 47 (121)

அரசு : பாண்டியர்

அரசன் : சடையவர்மன் திரிபுவன சுந்தரபாண்டியன்

இடம் : கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று தெற்குச் சுவர்.

குறிப்புரை : திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுக்குத் தேவதானமாக பாம்புரத்து ஊரில் நிலம் இருந்தது. இருப்பின் இந்நிலம் மணற்குடையான் தேவகதேவன் ஆன வயிராதராயனுக்கு உரிமையானதாகும். இந்நிலத்தினை பாம்புரத்து தேவராதிசுரமுடைய நாயனார் கோயில் இறைவனுக்குப் பூசைக்கும் அமுதுபடையலுக்கும் இந்நிலத்தினை திருக்கச்சூர் திருவாலக்கோயில் நிர்வாகிகள் தானமாக அளித்துள்ளனர்.

Summary : The south wall of the outer prākārā in the same temple. Tamil̲ - Pāṇḍya - Sundara pāṇḍya-I. r.y. 8 (1258 C.E.). The last three lines of the inscription is damaged. It records the gift of land, etc., in the village of Pāmpuram a *dēvadāṉa* of the temple of Tiruvālakkōyil-uḍaiyā-nāyaṉār of Tirukkachchūr but owned by Maṇaṟkuḍaiyāṉ Dēvagadēvaṉ alias Vayirādarāyaṉ for worship and offering to the deity Dēvar-Ādīśuramuḍaiya-nāyaṉār of Pāmpuram. The gift was made by the trustee *(tāṉattār)* of the temple of Tiruvālakkōyiluḍaiyā-nāyaṉār.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கேழ்வி முன்னாக கோற்சடபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டியதேவர்க்கு
2. யாண்டு அ வது திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனார் தேவதானம் மணற்குடையான் தேவக-
3. தேவனான வயிராதராயன் காணியான பாம்புரத்து உடையார் தேவராதிசுரமுடைய நாயனாற்கு பூசைக்கும் அமுதுபடிக்கும் தே-
4. . . . . ன்னாளில் தானக்கடைய . . . . . குடுத்து . . . வனமும் பண்ணின நில . . . . . . .ஒரு . . . . க்கும் நாங்கள்

5. . . . . ஆயமும் உள்ளிட்ட அனைத்தாயங்களும் உடையார் தேவராதிசுரமுடைய நாயனார்க்கே இறை இறுப்பதாக விட்டோ -

6. [திருவா]லக்கோயிலுடைய நாயனார் கோயிற் தானத்தோம் இது ஸ்ரீமாகேசுர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 187/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 8
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1258
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 305/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 48 (125)
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சடையவர்மன் திரிபுவன சுந்தரபாண்டியன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று தெற்குச் சுவர்.		

குறிப்புரை : திருக்கச்சூர் திருவாலக்கோயிலைச் சார்ந்த தேவரடியார் போகமாத்தார் மகள் உற்றாநாச்சி என்பவர் இக்கோயிலில் பெண் உருவிலான பித்தளை சிலையின் மேல் நந்தா விளக்கு ஒன்று வைத்துள்ளார். இவ்விளக்கு எரிப்பதற்கு கோயிலில் ஏற்கனவே அளித்த ஒரு பசு உட்பட மொத்தம் 30 முப்பது பசுக்களையும் ஒரு காளையையும் தானமாக அளித்துள்ளார். வடுககோனின் மகன் தாழி, இவரது தம்பி அத்தி மற்றும் புங்ககோனின் மகன் மணியன் இவரது தம்பி புங்கன் ஆகியோர் இப்பசுக்களைப் பெற்றுக் கொண்டு இராசகேசரி அளவையால் நாள்தோறும் உழக்கு நெய் அளப்பதாக உறுதியளித்துள்ளனர்.

Summary : The south wall of the outer prākārā in the same temple. Tamiḻ - Pāṇḍya - Sundara Pāṇḍya-I. r.y. 8 (1258 C.E.). It records a gift of a nanda lamp placed over a brass female figure (pāvai-viḷakku) to the Tiruvālakkōyil-uḍaiyā-nāyaṉār at Tirukkachchūr by Uṟṟnāchchi daughter of Bhōgamāttar, a *dēvaradiyār* of the temple. She gifted 30 cows and a bull, including a cow given earlier to maintain the lamp. The gift was accepted by two groups - one led by Tāḻi and Atti sons of Vadugakōṉ and the other by Maṇiyaṉ and Puṅgaṉ sons of Puṅgakōṉ. Both groups agreed to supply one *uḻakku* of ghee daily, measured by the *Irāśakēsari* measure forever.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கேழ்வி [முன்னாக] கோச்சடைபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்-
2. கு யாண்டு அ மிதுன நாயற்று அபரபக்ஷத்து திங்கள் கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாள் ஜயங்கொண்டசோழ மண்டல-

3. த்துக் களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனார்-
4. க்கு இன்னாயனார் கோயிற் தேவரடியாரில் பொகமாத்தார் மகள் உற்றாநாச்சி இட்ட பெண்ணுரூபமாக செய்த பித்த-
5. ளை பாவைமேல் வைத்த திருநுந்தாவிளக்கு ஒன்றுக்கு நான் முன்னாளில் விட்ட பசு உள்பட விட்ட பசு முப்பதும் இஷப-
6. ம் ஒன்றும் கைக்கொண்ட இவ்வூர் மன்றாடிகளில் வடுகக்கோன் மகன் தாழியும் இவன் தம்பி அத்தியும் கைக்கொ-
7. ண்ட விளக்கு அரையும் புங்கக்கோன் மகன் மணியனும் இவன் தம்பி புங்கனும் கைக்கொண்ட விளக்கு அ-
8. ரையும் ஆக திருநுந்தாவிளக்கு ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கும் அளக்கும் இராசகேசரியால் நெய் உழக்கு சந்திர-
9. ாதித்தவற் . . . . மாக சம்மதித்து சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் இந்நால்வரோம் இது ஶ்ரீ-
10. மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 188/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 2
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1277
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 306/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 49 (122)
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சுந்தரபாண்டியன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று தெற்குச் சுவர்.		

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூர் கோட்டத்துச் சுரத்தூர் நாட்டு தாம்புரத்து குளத்தூழான் துலையாத செல்வன் மாரியப்பிள்ளை ஆன சீனத்தரையர் என்பவருக்கு மூன்று பங்கும் அவருடைய தம்பி அறமாண்டை என்பவருக்கு ஒரு பங்கும் உரிமை கொண்ட ஒட்டைக்காடு மற்றும் சோறன் திருத்து ஆகிய இரு கிராமங்களையும் மாகனூர் நாட்டுப் பெரும்பேட்டு ஊராரிடமிருந்து வாங்கி, திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலுக்குத் தேவதானமாக அளித்துள்ளனர்.

இவ்வூரில் ஏற்கனவே தேவதானம், திருவிடையாட்டமாக இருந்த நிலங்கள் நீக்கி தேவதானமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வூரிலிருந்து பெறப்படும் வரிகள் கோயில் தானத்தாரிடம் வழங்க பஞ்சநதிவாணன் அருணகிரிப் பெருமாள் நீலகங்கரையன் உறுதிப்படுத்தியுள்ளார்.

Summary : The south wall of the outer prākārā in the same temple. Tamil̲ - Pāṇḍya - Sundara Pāṇḍya-II. r.y. 2 (1277 C.E.). This inscription records a gift of which ⅔ was made by Kuḷattuḻāṉ Tulaiyādaśelvaṉ Māriyappiḷḷai alias Siṉattaraiyar and ⅓ was made by his younger brother Aṟamāṇḍai, of two villages called Oṭṭaṅgāḍu and Sōṟaṉtiruttu, purchased by the above-mentioned persons from the ūr of Perumpēḍu in Māgaṇūr-nāḍu in Seṅgāṭṭk-koṭṭam. The gift-villages, from which the previously granted *dēvadāna* and *tiruviḍaiyāṭṭam* lands were excluded, were granted as *dēvadāna* to the temple of the god Tiruvālakkōyiluḍaiyā-nāyaṉār of Tirukkachchūr. It is stated that from the date of the inscription the incomes, etc., from these villages were to be given to the temple trustees and this was probably attested to by Pañchanadivāṇaṉ Aruṇagirip-perumal Nilagaṅgaraiyaṉ.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கேழ்வி முன்னாக திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ [சுந்தர பா]-

2. ண்டிய தேவற்கு யாண்டு உ மிதுன நாயற்று பூர்வ்வபக்ஷத்து த்ருதிகையும் நாயற்றுக் கிழமை-
3. பெற்ற பூசத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து புலியூர்க் கோட்டத்துச் சுரத்தூர்
4. நாட்டு தாம்புரத்து குளத்துழான் துலையாத செல்வன் மாரியப்பிள்ளையான சீனத்தரையர் மூ-
5. ன்று கூறிட்ட இருகூறும் இவர் தம்பி அறமாண்டை ஒரு கூறுமாக செங்காட்டுக் கோட்டத்து மா-
6. கணூர் நாட்டுப் பெரும்பேட்டு ஊரவர் பக்கல் விலைகொண்டுடைய ஒட்டங்காடு சோற-
7. ன்திருத்து உள்பட நாற்பாற்கெல்லைக்கு உள்பட்ட விளை நிலத்திலும் கொல்லை நிலத்திலும்
8. தூணி நிலத்தேவதானம் திருவிடையாட்டம் நிலம் நீக்கி எல்லாதரம் திருக்கச்சூர் உடை-
9. யார் திருவாலக்கோயிலுடைய நாயனார்க்குத் தேவதானமாக இட்டோம் ப-
10. ஞ்சநதிவாணன் அருணகிரிப் பெருமாள் நீலகங்கரையனேன் இன்னாள் முதல்
11. இக்கோயில் தானத்தார்க்கு ஏற்கடமை குடிமை போக்கறுப்பதே இப்படிக்கு இவை
12. நீலகங்கரயன் எழுத்து ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 189/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 1[1]
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1344
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 307/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 50 (112)
அரசு	: பாண்டியர்		
அரசன்	: மாறவர்மன் திரிபுவன வீரபாண்டியன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று மேற்குச் சுவர்.		

குறிப்புரை : இரண்டாயிர வேலிப் பற்றில் வசிக்கும் மன்றாடிகளிடம் மேய்ச்சல் நிலத்தில் கால்நடைகள் மேய்ப்பதற்கு ஆட்டிறைப்பாட்டம் என்ற வரியினை வசூலிக்க அரசால் முடிவெடுக்கப்பட்டது. ஆண்டு ஒன்றுக்கு 10 மாடுகளுக்கு ஒரு பணமும், 5 எருமைகளுக்கு ஒரு பணமும், 50 ஆடுகளுக்கு ஒரு பணமும் மேய்ச்சல் கட்டணமாக வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வசூலிக்கப்படும் மொத்த வரியும் மாதம் தவறாது வசூலிக்கப்பட வேண்டும். மேலும், இவ்வரியை செலுத்த ஒப்புக்கொண்டு குடியேறும் புதிய மன்றாடிக் குடும்பங்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Summary : The west wall of the outer prākārā in the same temple. Tamiḻ - Pāṇḍya - Māravarman Tribh. Vīrapāṇḍya. r.y. [1] 1 (1343 C.E.). This inscription records that on deciding to levy the tax of *āṭṭiṟaippāṭṭam* from the *maṉṟāḍis* of Iraṇḍāyiravēlippaṟṟu, it was fixed by the Government that they should pay the grazing charges at the rate of one *paṇam* for every 10 cows, one paṇam for every 5 buffaloes and one *paṇam* for every 50 sheep. It was also decided that the total tax amounts should be collected every month without fail, and that new families (of *maṉṟāḍis*) agreeing to pay this tax would be permitted.

கல்வெட்டு :

1. கோமாறபன்மர் திரிபுவனசசக்கரவத்திகள் ஸ்ரீவீரபாண்டியதேவர்க்கு யாண்டு [௰]உவது இரண்டாயிர வேலி
2. பற்றில் மன்றாடிகளை ஆட்டிறைப்பாட்டக்கடமை கொள்ள நிச்சயித்தபடி பயிர்கண்டு கடமைகொள்ளும் இட-
3. த்து வளைக்கன்றுங்குட்டியும் மேய ஆண்டு ஒன்றுக்கு பத்து மாட்டுக்கு ஒரு பணமும் அஞ்சு எருமைக்கு ஒரு பணமும்

4. ஐம்பது ஆட்டுக்கு ஒரு பணமும் ஆக வந்த பணம் மாதவிழுக்காட்டிலே கொள்ளக்கடவதாகவும் இப்படிக்கு புகுது-
5. ங் குடியும் புகுதவிடுவதாகச் சொன்னோம் இவை சுந்தரபாண்டிய கண்டியதேவன் எழுத்து இது உலக்கின இ-
6. வன் கெங்கைக் கரைக்குராற் பசுக்கொன்றான் பாவங் கொள்வான்

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 190/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 17
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1268
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 308/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 51 (113)

அரசு : பாண்டியர்

அரசன் : சடையவர்மன் திரிபுவன. முதலாம் சுந்தரபாண்டியன்

இடம் : கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று மேற்குச் சுவர்.

குறிப்புரை : மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து புவனமுழுதுப் பெருந்தெருவில் வசிக்கும் வியாபாரி காடுவெட்டி நாற்பத்தெண்ணாயிர சிலை [செட்டி] வெண்வாயிலுடையான் திருக்கச்சூர் திருவாலக்கோயில் ஒரு சந்தி விளக்க எரிப்பதற்கு மூன்றுப் பசுக்களை கொடையாக வழங்கியுள்ளார்.

Summary : The west wall of the outer prākārā in the same temple. Tami̱l - Pāṇḍya - Sundara Pāṇḍya-I. r.y. 17 (1268 C.E.). The beginning of this inscription seems to be built in. It records a gift of 3 cows for a *sandhi* lamp to the temple of the god Tirukkchchūr by the merchant Kāḍuvēṭṭi Nāṟ[pat]teṇṇāyirachchilai [chetti] Veṇvāyiluḍaiyāṉ, resident of the street of *Bhuvaṉamuḻupperunderu* in Sri-Madurāntakach chaturuvēdimaṅgalam.

கல்வெட்டு :

1. . . . திருவாய்கேழ்வி முன்னாக கோசடபன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டியதேவர்க்கு யாண்டு ௰எ வது ஸிங்கநாயற்று ௨௰வ௨ வக்ஷத்து
2. . . . மியும் திங்கள்கிழமையும் பெற்ற உத்திராடத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் உடையா-
3. . . . . லக்கோயிலுடைய நாயனார்க்கு ஸ்ரீமதுராந்தகச் சதுறுவேதிமங்கலத்து புவனமுழுதுபெருந்தெருவில் வியாபாரி காடுவெட்டி நாற்பத்தெண்ணாயிரச்சிலைய் செ-
4. . . . . வெண்வாயிலுடையான் வைத்த சந்திவிளக்கு ஒன்றுக்கு விட்ட பசு மூன்றுக்கு இன்னாயனாற்கோயில் காணி உடைய சிவப்பிராமணன் பாரத்துவாசி முதலியான் திருநட்டப் பட்டன்

5. . . . . . கொண்ட பசு ஒன்றரையும் அகத்தியன் திருவாலக்கோயிலுடையானான திருவகத்திபட்டன் கைக்கொண்ட பசு ஒன்றரையும் ஆக பசு மூன்றும் கைக்கொண்டு

6. . . . தி விளக்கு ஒன்றும் சந்திராதித்தவரை எரிப்பதாகச் சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் இவ்விருவோம் இது ஸ்ரீமாஹேசுர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 191/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 19
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1234-35
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 309/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 52 (111)
அரசு	: பாண்டியர்		
அரசன்	: முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று மேற்குச் சுவர்.		
குறிப்புரை	: இரண்டாயிரவேலிப் பற்றில் இடம்பெற்றுள்ள நரியன்பாக்கம் என்ற ஊரினை இப்பற்றின் நாட்டார் (நாட்டு நிர்வாகிகள்) மடப்புற இறையிலியாக முதலியார் பெருமாள் தாதர் என்பவருக்குக் கொடையாக அளித்துள்ளனர். இந்த ஆணையில் சித்திரமேழி வேளான் கையொப்பமிட்டுள்ளார்.		

Summary : The west wall of the outer prākārā in the same temple. Tamiḻ - Pāṇḍya - Sundara pāṇḍya-I (?). r.y. 19 (1234-35 (?) C.E.). It states that the gift of the village Nariyaṉpākkam belonging to Iraṇḍāyiravēlip-paṟṟu by the *nāḍu* (inhabitans) of the *paṟṟu* as Maḍappuṟaiṟaiyili to Mudaliyār Perumāḷ-Tādar.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மர் திரிபுவனச்சக்கரவத்திகள் சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௰௯வது இரண்டாயிரவேலிப் பற்றில்
2. நரியன் பாக்கம் முதலியார் பெருமாள் தாதர்க்கு மடப்புற இறை இலியாகக் குடுத்தோம் இவ்வூர்க்கு வரும் கடமை பொன்வரி நாட்டுவரி
3. பழவரி புதுவரி மற்றும் எப்பேற்பட்ட உபாதிகளும் இழந்து மடப்புற இறை இலியாகக் குடுத்தோம் இரண்டாயிரவேலிப் பற்றில்
4. நாட்டவரோம் இந்த இறையிலிக்கு இலங்கணஞ் சொன்நார் உண்டாகில் கெங்கைக்கரையில் குரான்பசுக் கொன்-
5. றான் பாவங்கொள்வான் இப்படிக்கு இவை பணியால் சித்திரமேழி வேளான் எழுத்து
6. இவூரில் ஏறும்புறக்கலனைத் தறி இறை தட்டார்ப்பாட்டம் மாவடை மரவடை ஏரிமீன் பாட்டம் வெட்டி அரிமுக்கைத் துண்டம் ஆயம் இவையும் இழந்து மடப்புற இறை இலி-
7. யாகச் சந்திராதித்தவரை செல்வதாகக் குடுத்தோம் இவை பணியால் சித்திரமேழி வேளான் எழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 192/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 9+1
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1260-61
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 310/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 53 (114)
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சடையவர்மன் சுந்தரபாண்டியன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று மேற்குச் சுவர்.		

குறிப்புரை : காஞ்சிபுரம் திருவேகம்பமுடையார் கோயிலில் பூசை செய்யும் நம்பிமாரில் காஞ்சை அநவரத சுந்தரபட்டன் நல்லனாயன் மற்றும் காஞ்சிக்குறி ஸ்ரீகண்டன் பெருமாள்க்கள திருச்சிற்றம்பலமுடையார் ஆகிய இருவருக்கும் திருக்கச்சூர் ஊருக்கு வடக்கில் இரண்டாயிர வேலிப்பற்றில் குறும்பன் மேட்டில் இருந்த இடத்தில் 2 வேலி நிலத்தினை பட்டவிருத்தி அகரமாக இவ்விருவருக்கும் மன்னனால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விருவருக்கும் வீட்டு மனை ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

Summary : The west wall of the outer prākārā in the same temple. Tamiḻ - Pāṇḍya - Sundara pāṇḍya. r.y. 9+1 (1260-61 C.E.). This inscription records a gift, made by the king of two *vēli* of land in the *nañjai* land of Kuṟumbaṉmēḍu in Iraṇḍāyiravēlippaṟṟu to the north of Tirukkachchūr to two priests in the temple of the diety Thiruvēgambamūḍaiyānāyaṉār at Kāñchīpuram viz., Kāñchai Anavaratasundara-bhaṭṭaṉ Nallanāyaṉ of Kāśyapa-[gōtra] and Kāñchikkuṟi Srikaṇṭa-bhaṭṭaṉ Perumāḷakkaḷ Tiruchchiṟṟambala-bhaṭṭaṉ. Besides the land, it is stated that the donees were given each a house-site in the residential area.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கேழ்வி முன்னாக கோற்ச்சடைபன்மரான த்ரிபுவன சக்ரவத்திகள் ஸ்ரீ ஸுந்தரபாண்ட்யதேவற்கு யாண்டு ௯
2. க்கு எதிராமாண்டை ஆடி மாதம் திருமுகப்படி காஞ்சீபுரத்து உடையார் திருவேகம்பமுடைய நாயனாரைப் பூஜிக்கும்
3. நம்பிமாரில் காஞ்சை காஸ்யபன் அநவரஸுந்தரபட்டன் நல்லனாயனுக்கும் காஞ்சிக்குறி பாரத்வாஜி ஸ்ரீகண்ட பட்டன் பெ-
4. ருமாளக்கள திருச்சிற்றம்பலமுடையார்க்கும் வடக்கிலிரண்டாயிர வேலிப்பற்றில் குறும்பன் மேட்டில் நஞ்-

5. சை நிலத்திலே இரண்டு வேலி நிலம் ஸட்ட வூத்தி ஸுகூ௱மாக குடுத்தோம் இன்னாள் முதல் ௫ௗ உ வேலியால் வ-
6. ந்த கடமை ஆயம் பொன்வரி நாட்டுவரி காசு கடமை பட்டி குற்றம் காத்திகை பச்சை மற்றும் எப்பேர்பட்ட இறை-
7. களும் இழிந்து ஸட்ட வூத்தி ஸுகூ௱மாக குடுத்தோம் இநிலத்துக்கு புன்னியமுடையானிட்ட தடி உழவரிப்படிக்கு காலுமான கண்ணாற்றி-
8. ல் விட்ட சத்தியபாவை ஞீம் ௫ாஎயம் களங்குண்டில் ஞீ எய கவம் விளாமட்டம் ஞீாஉயம் களங் கீழ்குண்டில் ஞீஊாயக ஜ கோத-
9. ண்டன் கண்ணாற்றில் மைந்தன் குண்டில் உழப்பட ஞீ௩ாயகூம் ஆலைப்பாக்கிழான் ஞீாஅயம் பனஞ்செறுக் கண்ணாற்றில் செல்-
10. னி செறு ஞீ௫ாஉயரும் காக்குநாயக்கன் ஞீசா௫யம் சித்திரமேழி மட்டம் ஞீ-ாகூயரும் பயற்றம்புலம் ஞீ௩ா௩யம் தோட்ட மட்டம் ஞீ-
11. ா௫யம் தேரிமட்டம் ஞீா௫யம் மெய்யே எங்கள் பெருமான் ஞீாசயஉ௩ம் புறகாலில் காலுக்கு கீழை முருக்கன் ஞீ௩ாஉயஉ௩ம் வ-
12. ரதன் மட்டம் ஞீாகூயரும் இதன் வடகீழை பருத்திப்புலம் தெற்கடைய ஞீ-ாஎயம் ஆக ஞீசகூத்தினால் ௫ௗஉ [வே]லிம் நத்தத்திலே மனை
13. இரண்டுக்கு ஞீஊாம் இவர்களுக்கு பட்டவிருத்தி அகரமாக சந்திராதித்தவரை செல்வதாக சிலாலேகை பண்ணக்குடுத்தோம் இ-
14. ப்படி செய்வதே இவை முனையதரையன் எழுத்து இது ஸ்ரீ௨ாஹேஶ்வ௱ ௱க்ஷெ ௨

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 193/2024**

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 28
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1279
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 311/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 54 (115)
அரசு	: தெலுங்குச் சோழர்		
அரசன்	: விஜயகண்டகோபாலன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் பிரகார முதல் திருச்சுற்று வடக்குச் சுவர்.		

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழமண்டலத்து செங்காட்டுக்கோட்டத்து மாகணூர்நாட்டுப் பெரும்பேட்டு ஊரவர் பெரும்பேட்டு ஊரின் புற ஊர்களான ஒட்டங்காடு, சோறன் திருத்து, ஆசாரியன் திருத்து ஆகிய ஊர்களை சுரத்தூர் நாட்டுத் தாம்புரம் ஊரைச் சார்ந்த குளத்தூழான் மாரிப்பிள்ளை ஆன சீனத்தரையர் மற்றும் அறம் வளர்த்தான் ஆகிய இருவருக்கு விற்றுக்கொடுத்துள்ளனர்.

Summary : The north wall of the outer prākārā in the same temple. Tamiḻ - Vijayagaṇḍagōpāladēva. r.y. 28 (1279 C.E.). This inscription is built in at the beginning, so a few letters at the beginning of each line are not available. It records the sale of the village comprising the blocks of Oḍḍaṅgāḍu, Sōṟaṉtiruttu and Āchāriyaṉtiruttu and forming a hamlet of Peruṁbēḍu in Māgaṇūr-nāḍu in Seṅgāṭṭuk-kōṭṭam in Jayaṅkoṇḍaśōḻa-maṇḍalam, by the *ūr* of the same place, to two persons, one named Kuḷattūḻāṉ Mārippiḷḷai alias Sīṉattaraiyar of Dharmapuram in Surattūr-nāḍu and the other named Aṟamaḷattār (Aṟamvaḷattār ?) of the same place.

கல்வெட்டு :

1. . . . . னச்சக்கரவத்திகள் ஸ்ரீவிசையகண்ட கோபால தேவர்க்கு யாண்டு உ௰அ வது மிதுன நாயற்று அபரவக்ஷத்து பஞ்சமியும் புத
2. . . . . ஜயங்கொண்டசோழ மண்டலத்துச் செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டுப் பெரும்பேட்டு ஊரவரோம்
3. . . . . த்து சுரத்தூர் நாட்டுத் தாம்புரத்து குளத்துழான் மாரிப்பிள்ளையான சீனத்தரயர்க்கும் அறமளத்தார்க்கும் நாங்க-
4. . . . . .ளுக்கு விற்றுக்குடுத்த எங்களூர் பிடாகை ஒட்டங்காடு சோறன் திருத்து ஆசாரியான் திருத்து உட்பட நிலங்களுக்கு எல்லை

5. . . . . சாவது நாங்கள் இவர்களுக்கு விற்றுக்குடுத்த இவ்வூர்க்கு எல்லையாவது கீழ்பாற்கெல்லை புளியந்தாங்கல் கரை-
6. . . . . ல்லை உற்ற வரம்புக்கும் இத்தாங்கல் கரைக்கு நாவிசன்குழிக் கீழ்கரைக்கும் இதுக்கு தெற்கு கடப்பங் குழிக்கு பு-
7. . . . . .நோக்கிப்போன பெருவரம்புக்கும் ஆக இவ்வெல்லைகளுக்கு மேற்கும் தென்பாற் எல்லை அகரத்தேரி இதற்குற
8. . . . . மேற்கும் வண்ணான் குழி தென்கரைக்கும் இதுக்கு மேற்கு சடைதாங்கல் நீர்கோளுக்கும் இதுக்கு மேற்கு உ
9. . . . . ல நீர் கோளுக்கும் இதன் மேற்கு ஏரி எதிர்வாய்க்கும் ஆக இவ்எல்லைகளுக்கு வடக்கும் மேல்பாற் எல்லை முருக-
10. . . . . .ளபாக்கத்தான் குழிக்கும் இவ்வெல்லைகளுக்கு கிழக்கும் வடபாற் எல்லை இக்குழிக்கு கிழக்கு நோக்கிப்போய் கடப்ப-
11. . . . . முக்கு வடக்கு நோக்கிப் போய் நீர் குன்றங்காரணைக்கு நீர் பாய்கிற பெருங்காலில் உற்ற எல்லை துடங்கி இப்பே-
12. . . . . . . தெற்கும் ஆக இப்படிக் கொண்டு இவ்வூர்க்கு நாற்பாற் எல்லைக்கும் எல்லைச் சாதனம் பண்ணிக்குடுத்தோம் பெரும்பேட்டு ஊரவ-
13. . . . . பாக்கிழான் ஆநஜபொதன் சிங்களராயன் எழுத்து இப்படிக்கு இவை வளைகிழான் விழிசுரமுடையான் பஞ்[ச*]நெதிவாணன்
14. . . . . ணன் திருச்சிற்றம்பலமுடையான் புற்றிடங்கொண்டான் எழுத்து இப்படிக்க இவை குறுங்குடி அமாண்டை எழுத்து
15. . . . . க்கிழான் தே(ா)வாண்டை பொயநாயன் எழுத்து இப்படி அறிவேன் உடைக்காடன் தோவாண்டையேன் இப்படி இவை
16. . . . . தேவனேன் இப்படி அறிவேன் உடைக்காடன் தென்னவராயன் பொன்னாண்டையேன் இப்படி அறிவேன்
17. . . . . க் இப்படிக்கு இவை வளைகிழான் பஞ்சநெதிவாணன் விழிசுரமுடையான் எழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 194/2024**

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	:---
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1442
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 312/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 55 (110)
அரசு	: விஜயநகரர்		
அரசன்	: விருப்பண்ண உடையார்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று வடக்குச் சுவர்.		

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலுக்கு இரண்டாயிரவேலிப் பற்றைச் சார்ந்த மன்றாடிகள் 'திருநுந்தாவிளக்குச் சாவாமூவாக்குடி' ஆக நியமிக்கப்பட்டிருந்தனர். அழகன் ஆன நாற்பத்தெண்ணாயிரக்கோன் மற்றும் இவரது தம்பி கண்ணாளன் ஆகிய இவ்விருவரையும் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுக்கு திருநுந்தாவிளக்கு குடி ஆக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உணவு மற்றும் கோயிலிலிருந்து மன்றாடிகள் பெரும் வரிகளைப் பெற்றுக்கொள்ளவும் இரண்டாயிரப்பற்று மன்றாடிகளும் சமைய கணக்கன் வண்டுவராபதி ஆகியோர் அனுமதி அளித்துள்ளனர்.

Summary : The north wall of the outer prākārā in the same temple. Tamiḻ - Vijayanagar-Uḍaiyār - Viruppaṉṉauḍaiyār. (1442 C.E.). This inscription records the gift of food and all other *upādhis* (taxes) due to them from the temple, made by the *maṉṟāḍis* and *Samaiyak-kaṇakkaṉ* of Iraṇḍāyiravēlipparṟu, as *sarvamānya-iṟaiyili* to two familes, one headed by Aḻagaṉ alias Nāṟpatteṇṇāyirak-kōṉ and the other headed by his younger brother Kaṇṇāḷaṉ employed as *tirunundā-viḷakku kuḍi* in the temple of the deity Tiruvālakkōyiluḍaiyā-nāyaṉār of Tirukkachchūr in Seṅguṉṟa-nāḍu in Kaḷattūr kōṭṭam, in Jayaṅkoṇḍachōḻa-maṇḍalam. These two families were enjoined to look after the service of *tirunandā-viḷakku* kuḍi in the temple heriditarily. The signatory was Vaṇḍuvarāpati, who was the Samaiyakkaṇakkaṉ.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அரியண உடையார் குமார ஸ்ரீ விருப்பண உடையார்க்குச் செல்லா நின்ற துந்துபி வருஷத்து ஸிங்கநாயற்று வ௳வ௨வக்ஷத்து பஞ்சமியும் சோதியும்

2. பெற்ற புதன்கிழமை நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து களத்தூர் கோட்டத்து செங்குன்ற நாட்டு திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுடைய
3. நாயனார்க்கு திருநுந்தாவிளக்குச் சாவாமூவாக்குடி ஆக இரண்டாயிரவேலிப்பற்று மன்றாடிகளும் சமையக் கணக்கனும் இந்த வருஷம் முதல் நாங்கள் குடுத்த அழகன் ஆன
4. நாற்பத்தெண்ணாயிரக்கோனும் இவந்தம்பி கண்ணாளனையும் திருநுந்தாவிளக்குகுடி ஆக யிந்த வருஷம் முதல் சாதம் மற்றும் நாங்கள் கொள்ளும் உபாதிகள் உட்பட சறுவமா-
5. னிய இறையிலி ஆக குடுத்தோம் இப்படி சந்திராதித்தவரையும் நடத்த குடுத்தோம் இப்படிக்கு இவை நாடில் மன்றாடிகள் எழுத்து இவை வண்டுவராபதிச் சமை-
6. யக்கணக்கன் எழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 195/2024**

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1445
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 313/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 56 (109)
அரசு	: விஜயநகரர்		
அரசன்	: விருப்பண்ண உடையார்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று வடக்குச் சுவர்.		

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழ மண்லத்துக் களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலுக்குத் திருநுந்தாவிளக்கு வைப்பதற்கும் சீபாதம் தாங்கவும் (இறைவன் திருமேனியைத் தூக்குவதற்கும்) கோபத்தராயன் மகன் கம்பன் மற்றும் ஆளப்பிறந்தான் கோன் மகன் பெரிய முதலி ஆகிய இவ்விருவரையும் 'திருநந்தாவிளக்கு சாவாமூவாக்குடி' ஆக இரண்டாயிரப்பற்று மன்றாடிகள் நாட்டுச் சார்பாக நியமித்துள்ளனர். இவர்களுக்கு உணவும் மன்றாடிகள் பெறும் வரிகளையும் பெற்றுக்கொள்ள உரிமை வழங்கியுள்ளனர். தொடர் எண் 191-இல் குறிப்பிடப்பட்டுள்ள சமயக் கணக்கன் வண்டுவராபதி கையொப்பமிட்டுள்ளார்.

Summary : The north wall of the outer prākārā in the same temple. Tamil̲ - Vijayanagara-Uḍaiyār - Viruppaṇauḍaiyār. (1445 C.E.). The inscription records a gift of food and the *upādhis* (taxes) due to them from the temple, as the gift of the *nāḍu* made by the *man̲rāḍis* of the nāḍu of Iraṇḍāyiravēlippar̲r̲u, to two families one headed by Kamban̲ son of Kōbattarāyan̲ and the other headed by Periyamudali, son of Āḷappir̲andān̲-kōn̲, who were employed to attend to the service connected with the *nanḍā lamps* and that connected with the taking out in procession the image of the deity of the temple in the same Tirukkachūr. These families should render these services heriditarily. The same Vaṇḍuvarāpati, the Samaiyakkaṇakkan̲ who figures in No. 191 above also figures here as the signatory.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மஹாமண்டலிசுர ஸ்ரீவிருப்பண உடையர்க்கு செல்லாநின்ற இரத்தாக்ஷி வருஷ௱ மீன நாயற்று வ௵-
2. பக்ஷத்து வெள்ளிக்கிழமை ஷஷ்டியும் பெற்ற அனுழத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து-

3. ச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனார்க்கு இரண்டாயிர வேலிப்பற்றில் நாட்டு
4. மன்றாடிகளோம் நாட்டு உபையம் ஆகத் திருநுந்தாவிளக்குக்கும் சீபாதம் தாங்கவும் சா(கா)[வா]மூவாக்குடி ஆக நாங்கள் விஜய-
5. கோபத்தராயன் மகன் கம்பணையும் ஆளப்பிறந்தான் கோன் மகன் பெரிய முதலியையும் இவருஷம்
6. முதல் சாதமும் நாங்கள் கொள்ளும் உபாதிகளும் உட்படச் சறுவமானிய இறையிலியாகத் தாரைவாத்துக் குடுத்தோம் இப்படிக்குச் சந்திராதித்தவரையும் ந-
7. டக்க குடுத்தோம் இப்படிக்கு இவை வண்டுவராபதிச் சமையக்கணக்கன் எழுத்து ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 196/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 15
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1265-66
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 314/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 57 (116)
அரசு	: பாண்டியர்		
அரசன்	: முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியதேவன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று வடக்குச் சுவர்.		

குறிப்புரை : இந்தக் கல்வெட்டு மிக முக்கியமான கல்வெட்டாக பார்க்கப்படுகிறது. ஏனெனில் முந்தைய அரசர்களின் ஆட்சிக்காலங்களில் வழங்கப்பட்ட கொடைகளைச் சுட்டிக்காட்டி விளக்கு எரிப்பதற்கு செய்து கொண்ட உடன்படிக்கை .

சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்க சோழதேவரின் 20-ஆம் ஆட்சியாண்டில்(பொ.ஆ.1178) திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலில் நந்தா விளக்கு எரிப்பதற்கு கிரந்தை அமர்கணாயகன் காக்குநாயகன் மற்றும் அவருடைய தம்பி திருவாலக்கோயிலுடையான் ஆகிய இவ்விருவரும் 525 குழி நிலமும் கிணறு ஒன்றையும் தானமாக வழங்கியுள்ளனர். (இக்கல்வெட்டினை இத்தொகுதியில் தொடர் எண்.155-இல் பார்க்கலாம்). பின்னர், இந்த நிலமும் கிணறும் அந்தத் தானம் செய்தவரின் மகன்களில் ஒருவரான கிரந்தை அறுமணிநாயகர் என்பவரிடம் பல்வேறு காலங்களில் வழங்கிய 12 பழங்காசு, 1260 நற்காசு மற்றும் 32 பணம் ஆகிய மொத்த தொகைக்குக் சிவபிராமணர்களால் விற்றுக்கொடுக்கப்பட்டது.

மூன்றாம் குலோத்துங்கனின் சிறப்பு பெயர்கொண்ட திரிபுவனவீரதேவரின் 38ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில்(பொ.ஆ.1196) இக்கோயிலைச்சார்ந்த தில்லைக்கூத்த பட்டன் என்பவர் கால் விளக்கு எரிப்பதற்கு 5 பழங்காசுகள் பெற்றுக்கொண்டுள்ளார்.

மூன்றாம் இராசராசதேவரின் 15-ஆம் ஆட்சியாண்டில் (பொ.ஆ. 1233) ஸ்ரீகண்ட பட்டன் முதலியோர் இக்கோயிலில் கால் விளக்கு எரிப்பதற்கு 7 பழங்காசுகள் பெற்றுக்கொண்டுள்ளனர். இதே மன்னனின் 27-ஆவது ஆட்சியாண்டில் (பொ.ஆ. 1245) தேவர்கள் சுந்தரன் ஆன நாற்பத்தெண்ணாயிர பட்டன் என்பவர் இக்கோயிலில் கால் விளக்கு எரிக்க 1260 நற்காசுகள் பெற்றுக்கொண்டுள்ளார்.

பாண்டிய மன்னன் [சடையவர்மன்] சுந்தரபாண்டியனின் 7-ஆம் ஆட்சியாண்டில்(பொ.ஆ.1258) சுந்தர பட்டன், மாதேவ பட்டன் உள்ளிட்டோர் 15 பணம் பெற்றுக்கொண்டுள்ளனர். மேலும், திருச்சிற்றம்பல பட்டன் பீமன் ஆன பன்மாகேசுர பட்டன் என்பவர் 11 பணம் பெற்றுக்கொண்டு ஓர் அரையே

அரைக்காணி முந்திரிகை விளக்கு எரிக்க சம்மதித்துள்ளார். திருவகத்தி பட்டன் அரை விளக்கு எரிப்பதற்கு 3 பணம் பெற்றுக்கொண்டுள்ளார். நாற்பத்தெண்ணாயிர பட்டன் முதலியோர் காணி அரைக்காணி முந்திரிகை விளக்குக்காக 3 பணம் பெற்றுள்ளனர். சதாசிவ பட்டன் உள்ளிட்டோர் காணி அரைக்காணி விளக்கு எரிப்பதற்கு 3 பணம் பெற்றுக்கொண்டுள்ளனர்.

மேற்கூறப்பட்டுள்ள பல்வேறு காலக்கட்டங்களில் இக்கோயில் சிவபிராமணர்கள் பெற்றுக்கொண்ட 12 பழங்காசு, 1260 நற்காசுகள், 32 பணம் ஆகியவற்றின் மூலம் கிரந்தை அறுமணிநாயகருக்கு இந்நிலத்தை விற்றுக்கொடுத்துள்ளனர். மேலும், அனைத்து சிவபிராமணர்களும் நந்தா விளக்கை தொடர்ந்து ஏற்றுவதற்கும் ஒப்புக்கொண்டனர் என்று இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல், குலோத்துங்கசோழ தேவரின் 20-ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டு மண்டபத்தின் வடக்கு பக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த மண்டபம் "பாகல் மண்டபம்" என அழைக்கப்படுகிறது. அதாவது பெரிய நன்கு செதுக்கப்பட்ட கற்களால் கட்டப்பட்ட மண்டபம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் (பொ.ஆ. 1178) வழங்கப்பட்ட நிலதானம் 88 ஆண்டுகளுக்குப் பிறகு பாண்டிய மன்னன் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் (பொ.ஆ.1266) தானமளித்தவரின் மகனுக்கு மீண்டும் அந்நிலத்தை விற்றுக்கொடுத்துள்ளனர் என்பதை அறிகிறோம்.

Summary : The north wall of the outer prākārā in the same temple. Tamiḻ - Pāṇḍya - Sundara Pāṇḍya-I. r.y. 15 (1265-66 C.E.). This inscription is interesting as it refers to the gift of lamp made during the regin-periods of three earlier kings. It states that an extent of 525 *kuḻi* of land and a well which were granted formely for burning a *nandā* lamp in the temple of Tiruvālakkōyiluḍaiyā-nāyaṉār of Tirukkachchūr by a certain Kirandai Amarkaṇāyakaṉ Kākkunāyakar and his younger brother Tiruvālakkōyiluḍaiyān in the 20th year of the reign of Kulōttuṅgaśōḷadēva (see No. 155 above), were sold back to Kirandai Arumaṇināyakar, one of the sons of the above-mentioned donor, for a sum of 12 *paḷaṅkāśu* 1260 *naṟkāśu* and 32 *paṇam* by the following *sivabrāhmanās* in the manner detailed below. Tillaikkūtta-bhaṭṭaṉ received 5 *paḷaṅkāśu* in the 38th year of Tribhuvaṉavīrdēva for lamp, Srikaṇṭa-bhaṭṭaṉ and others received 7 *paḷaṅkāśu* in the 15th year of Irāśarāśadēva for lamp, Dēvargal Dēvaṉ Sundaraṉ alias Nāṟpatteṇṇāyira-bhaṭṭaṉ received 1260 *naṟkāśu* in the 27th year of Irāśarāśadēva for lamp, Sundarapāṇḍyadēvar for a lamp, Tiruchchiṟṟambala-bhaṭṭaṉ Bhīmaṉ alias Panmākēśura-bhaṭṭaṉ received 11 *paṇam,* for 1 *mā araiyē-araikkāṇi mundirigai* lamp, Tiruvagatti-bhaṭṭaṉ received 3 paṇam for lamp Nāṟpatteṇṇāyira-bhaṭṭaṉ and others received 3 *paṇam* for *kāṇi-araikkāṇi mundrigai* lamp, and Sādāśiva-bhaṭṭaṉ and others received 3 *paṇam* for *kāṇiaraikkāṇi* lamp. It is stated that all these *Sivabrāhmanās* had agreed to burn the nandā lamp accordingly.

It is interesting to note that the record of the 20th year of Kulōttuṅgaśōḻadēva containing the original grant of land is stated to be engraved on the northern side of the maṇḍapa which it described as *pā-kal maṇḍapa* (i.e. one built of larger dressed stone slabs).

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடபன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௰௫ வது திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுடைய
2. நாயனார்க்கு முன்னாளில் குலோத்துங்கசோழ தேவர்க்கு ௨௰ வது நாளில் இவ்வூர் கிரந்தை அமர்கணாயகன் காக்குநாயகரும் இவர் தம்பி திருவாலக்கோயிலுடையாரும் இந்-
3. நாயனார்க்கு சந்திராதித்தவரை செல்வதாக வைத்த திருநுந்தாவிளக்கு ஒன்றுக்கு பாகல் மண்டபத்தில் வடபாரிஷத்தில் கல்வெட்டுப்படி இவர்கள் காணியில் வி . . . . . .
4. ப்புலம் தடி இரண்டினால் குழி ஙா ௫௰௨ம் வண்ணக்கன் குண்டில் குழி ா ௨௰ வடகழனியில் செட்டிக்குன்றக் குண்டில் குழி ௫௰ஙம் ஆ குழி பதினாறு சாண்கோலால்
5. ௫ா ௨௰ரும் பட்டிப்புலத்தில் கீழ்தலையில் கிணறு ஒன்று இக்கோயில் காணி உடைய சிவப்ராஹ்மணர் இவர்கள் பிள்ளைகளில் கிரந்தை அருமணி நாயகருக்கு வி-
6. ற்றுக்குடுத்து சந்திராதித்தவரையும் உபையமாக கைக்கொண்ட திரிபுவனவீரதேவர்க்கு முப்பத்தெட்டாவது நாளில் தில்லைக் கூத்தபட்டன் கைக்கொண்ட பழங்-
7. காசு ௫க்கு கைக்கொண்ட விளக்கு காலும் இராசஇராசதேவர்கு பதினைஞ்சாவது நாளில் ஸ்ரீகண்டபட்டன் உள்ளிட்டார் கைக்கொண்ட பழங்காசு ஏழுக்குக் கைக்-
8. கொண்ட விளக்கு காலும் இராசஇராச தேவர்க்கு இருபத்தேழாவது நாளில் தேவர்கள் சுந்தரனான நாற்பத்தெண்ணாயிரபட்டன் கைக்கொண்ட நற்காசு ஆயிரத்-
9. து இருநூற்று அறுபதுக்கு கைக்கொண்ட விளக்கு காலும் . . . . . சுந்தரபாண்டிய தேவர்க்கு ஏழாவது நாளில் . . . . . . சுந்தரபட்டன் மாதேவபட்டன்
10. உள்ளிட்டார் பணம் ௰௫க்கு கைக்கொண்ட விளக்கு இ . . . . திருச்சிற்றம்பலபட்டன் வீமனான பன்மாகேசுர பட்டன் பணம் ௰கக்குக் கைக்கொண்ட விளக்கு ஒரு அரையே அரைக்கா-
11. ணி முந்திரிகையும் திருவகத்தி பட்டன் பணம் ஙக்குக் கைக்கொண்ட விளக்கு அரையும் நாற்பத்தெண்ணாயிரபட்டன் உள்ளிட்டார் பணம் ஙக்குக் கைக்கொண்ட விளக்கு காணி அரை-

12. க்காணி முந்திரிகையும் சதாசிவபட்டன் உள்ளிட்டார் பணம் நக்குக் கைக்கொண்ட விளக்கு காணி அரைக்காணியும் ஆகப் பழங்காசு ௰உக்கும் நற்காசு கதூ உா கூ௰-

13. க்கும் பணம் ந௰உக்கும் இக்குழி ரூா உ௰ரும் கிணறும் இவர்க்கு விலைக்குற விற்றுப் பொருளறக் கைக்கொண்டு காணியும் விற்றுக் குடுத்து திருமலையிலே சிலாலேகை பண்ணி-

14. க்குடுப்போமாக நாங்கள் பண்ணிக்குடுத்த சாதனப்படிக்கு எங்கள் பெயரிலே திரிவு இட்டுக்கொண்டு திருநுந்தாவிளக்கு ஒன்றும் சந்திராதித்தவரைக்குங் கொள்வதாக உபை-

15. யமாக கைக்கொண்டு சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் சிவப்பிராமணர் இவ்வனைவோம் இது ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை உ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 197/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 13
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1263
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 315/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 58 (107)
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சடையவர்மன் சுந்தரபாண்டியதேவன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் திருச்சுற்று வடக்குச் சுவர்.		

குறிப்புரை : பாண்டிய மன்னன் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 13-ஆம் ஆட்சியாண்டில்(கி.பி. 1263) ஆமூர் கோட்டத்து இரண்டாயிரவேலிப் பற்று தாமுழான் நாட்டிலுள்ள உத்திப்பக்கம் என்கிற ஆதிநாயக்கச் சதுர்வேதிமங்கலத்தைச் சேர்ந்த ஆவணச்சேட்டு ஐயன் என்பவரின் மகன்களான ஆட்கொண்டவில்லி, பாம்பணையான், சகஸ்ரகிரன், வரதன், செல்வன் ஆகிய பிராமணர்கள், பிரமணர்களை வெட்டியும், செவிகளைஅறுத்தும், பிராமணப் பெண்களைத் துன்புறுத்தியும், களவு செய்தும், போன்ற அநியாயங்களை செய்த அக்குற்றவாளிகளுக்கு அந்த நாட்டினைச் சேர்ந்த அகர பிரம்மதேசம், வேளான் ஊர்கள் மற்றும் நகர் மக்கள் வேண்டுகோளின் பேரில் விதிக்கப்பட்ட தண்டனைகளைப் பற்றி விவரிக்கிறது.

முன்பு நாட்டு நிர்வாகம் செய்த அதிகாரி விக்கிரமசோழதேவர் இருங்கோளன், தனியன் வாணராயர், திருமலைதந்தார்ஆன முனையதரையர் உள்ளிட்ட அதிகாரிகளால் இக்குற்றவாளிகளை அடக்கமுடியவில்லை. பின்னர், பிள்ளை பொத்தப்பிராயர் என்றஅதிகாரி, குற்றவாளிகளைப் பிடித்து சிறையில் அடைத்தார். மேலும், இவர்களுக்கு கீழின மக்களைத் தண்டிக்கும் முறையிலே தண்டனைகளை வழங்கி, அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்து, அவற்றைக் கோயில்களுக்கு விற்பனை செய்ய உத்தரவிட்டார்.

உத்திப்பக்கத்தில் இருந்த அவர்களது சொத்துக்கள், திருவகத்தீஸ்வர மூடைய நாயனார் மற்றும் ஸ்ரீகயிலாமூடைய நாயனார் கோயில்களுக்கு 200 பணம் மதிப்பில் விற்பனை செய்யப்பட்டது. அந்தப் பணம் திருக்கச்சியூரில் உள்ள கோயிலில் வைப்பு செய்யப்பட்டது.

இந்த விற்பனை ஆவணம் அகரம், வேளான் ஊர் மற்றும் நகர் மக்கள் சார்பில் மேற்கொள்ளப்பட்டது. அவர்களது பிரதிநிதிகள் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ளனர்.

Summary : The west wall of the outer prākārā in the same temple. Tamiḻ - Pāṇḍya - Sundara pāṇḍya-I. r.y. 13 (1263 C.E.). This inscription refers to the atrocities committed by certain Brāhmaṇar of Uttipākkam alias

Ādinạ̄yaka-chchaturvēdimaṅgalam in Tāmuḷā-nāḍu in Āmūr kōṭṭam Iraṇḍāyiravēlip-paṟṟu and to the punishment meted out to them on the request of the residents of the Agara-brahmadēśa, the Vēlān-ūrs and the Nagaras of the same *paṟṟu*. It is stated that the rebellious people could not be controlled by Vikramaśōḷadēva Iruṅgōḷāśaniyaṉ alias Vāṇarāyar the previous district authority, and others and that this could be achieved only by another officer named Piḷḷai Pottappirāyar, who after arresting the criminals and puttin them to jail, after punishing them in the manner employed for lower caste people ordered the confiscation of their properties and selling them to temples, etc. Their property in Uttipākkam was thus sold as *tirunāmttukkāṇi* of the temples of the place Tiruvagattīśvaramūḍaiya nāyaṉār and Srīkayilāmūḍaiya-nāyaṉār for 200 *paṇam* and this money was deposited in the temple at Tirukkachchiūr. The sale was effected by the residents of Agaram, Vēḷān ūr and Nagaras mentioned above, whose representatives figure as signatories.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமற்கீற்திக்கு மேல் ஸ்ரீகோச்சடபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுன்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௰௩ பதின்மூன்றாவது கூமூவ நாயற்று வூவெபுவக்ஷத்து வஷூியும் பு-
2. தந் கிழமையும் பெற்ற அஸ்வதிநாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து இரண்டாயிர வேலிப்பற்றில் அகர ஸ்ஹதேயங்களில் உள்ளாரும் வேளான் ஊர்களில் உள்ளாரும் நகர-
3. ங்களில் உள்ளாரும் இன்னாட்டு ஆமூற் கோட்டத்து தமுழானாட்டு உத்திபாக்கம் ஆன ஆதினாயக்கச் சதுர்வேதிமங்கலத்து உடையார் திருவகத்திசுரமுடைய னாயனார் கோயில் தானத்தாற்கு
4. உடையார் ஸ்ரீகையிலாயமுடைய னாயனார்கோயில் தாநத்தாற்க்கும் வ்ரயாணம் பண்ணிக் குடு[த்]த பரிசாவது இன்த உத்திபாக்கத்தில் ஸ்ராஹ்மணரில் ஆவணிச்செட்டு ஐயன் மக்களில் ஆட்கொண்டவில்-
5. லியும் பாம்பணையானும் ஸஹஸ்ரகிணரும் வரதனும் செல்வநும் ஸ்ராஹ்மணரும் வேளாளரும் வத்திக்கும் முறைமைகள் ஒழிய கீழ்சாதிகள் செய்யும் முறைமைகளிலே ஆயிதங்கள் கட்டியும் ஸ்ரா-
6. ஹ்மணரை வெட்டியும் செவி அறுத்தும் ஸ்ராஹ்மணிகளைத் தூஷித்தும் களவு கண்டும் கன்றுகால்களை அழித்து விற்றும் செய்து போன்தபடிகளாலே முன்பு னாடு செய்த விக்கிரமசோழ தேவராந இரு-
7. ங்கோளர் தநியன் வாணராயர் திருமலைதந்தார் ஆன முனையதரைய[ர்] உள்ளிட்ட முதலிகள் பலரும் இவர்களைப் பிணைத்தும் அடித்தும் தெண்டங்கொண்டும் வீடுகள் இடித்தும் வண்ணார்ப சிறை இட்டும்

8. செய்த இடத்தும் இவர்களை அறச்செய்து விடாதபடியாலும் பின்பும் இவர்கள் குணகநங்கள் ...... ாதபடியாலும் பிள்ளை பொத்தப்பியராயரா . . ஒடுக்கக்கடவதாய் எழுந்திருப்பானத அளவிலே இன்-
9. னாட்டில் அகர ஜனங்களும் நாட்டவரும் இவர்கள் செய்திகளும் விண்ணபஞ் செய்து இதனைச் சாதித்து தரவேணுமென்று விண்ணப்பஞ் செய்த அளவிலே பிள்ளைபொத்தப்பியராயரும் இவர்களைக் கட்டிக்கொண்-
10. டு வருவதாக வள்ளுவ நாடாள்வாந் இருங்கோளரும் அடைப்பல் விடை இட்ட மலையாளரைப் போகவிட்ட அளவில் போனவர்களை வெட்டியும் குத்தியும் அம்பிட்டெய்தும் ஆய்தம் பறித்தும் மலையிலே ஏறிநவன் . . லே பின்-
11. பிடித்து ஆட்கொண்ட வில்லியையும் பாம்பநணையாநையும் கைக்கொண்டு வந்து திருக்கச்சூர் தண்டலிலே புணைத்து வைத்து இவர்களையும் காட்டிலே பல சிறைகளையும் கண்ணத்தூராற் உலகுடைய பெருமாள் சீபாத-
12. (த)த் தேற்க்கொண்டு போகச்செய்தே வடபிடாகையில் சானூர் அரசபாக்கத்தில் காட்டிலே இவர்கள் தம்பிமார் ஆய்த்தப்பின் மூவரும் மனித்தரைக் கூட்டிக்கொண்டு வந்து இவர்களையும் இவர்கள்
13. உடன் போகிற பல சிறைகளையும் வெட்டிவிடுவித்துக்கொண்டு போனபடியாலே இவர்கள் செய்தி தவிர உலகுடைய பெருமாள் ஸ்ரீபாதத்திலே விண்ணப்பஞ்செய்து இவர்கள் இருந்த இடங்களிலே கைக்கொண்டு
14. கீழ்சாதிகளைத் தெண்டிக்கும் முறைமைகளிலே தெண்டிப்பித்துக் கொள்ளக்கடவோமாகவும் இவர்களுக்கு இன்னாட்டில் மனைகளையும் காணியும் உள்ளவை திருக்கோயில்களுக்கும் திருமுற்றங்களுக்கும் திருநாமத்துக்காணி-
15. யாக விற்று விற்ற பணம் இவர்களைத் தெண்டமாகக் கருவுலகத்தே ஒடுக்குவதாகவும் அறுதி இடுகையில் இவர்கள் காணியாய் உடையார் திருவக்திமுடைய நாயனார்க்கும் உடையார் ஸ்ரீகயி-
16. லாயமுடைய நாயனார்க்கும் திருநாமத்துக்காணியாக விற்ற உத்திபாகத்தில் இவர்கள் ஒபாதி பங்கு நத்தமும் புதுக்குளம் நான்கு எல்லைக்குட்பட்ட விளைநிலமும் கொல்லையும் நத்தமு உட்ப்படக்கொண்டு இவர்-
17. கட்டிந நற்பணம் ஊ இருநூறு இப்பணம் இருநூறும் திருக்கச்சி ஊர்க்கருவூகலத்தே ஒடுக்குவித்துக் கொள்கையில் இவர்களுக்கு உத்தி பாகத்தில் உள்ள ஸ்ராவஹி ஆன எல்லைகளிலும் புதுக்-

18. குளம் ஊர் ஒன்றான நான்கு எல்லைகளிலும் திருச்சூலஸ்தாபனமும் திருக்கோயில்களிலே சிலாலேகையும் பண்ணிக்கொண்டு சந்திராதித்த வரையும் திருநாமத்துக்காணியாக அனுபவித்துக்கொள்ளக்-

19. கடவதாக ஸ்ரமாணம் பண்ணிக்குடுத்தோம் இரண்டாயிரம் வேலிப்பற்றில் அகர ஸ்ரஹூஷேசங்களிளாரும் வே(ள)ளான் ஊர்களிலாரும் நகரங்களிலாரும் இவ்வனைவோம் இப்படிக்கு இவை குத்த நல்லூழான்

20. ஆதித்தேவன் எழுத்து இவை நன்திமங்கலங்கிழான் எழுத்து இளன்தேவ நெழுத்து செங்கழுநீர் பிள்ளை எழுத்து புடோலி பிள்ளை எழுத்து வயிராதராயனெழுத்து வீரன் எழுத்து இவை

21. தரிகைக்காத்துழாநெழுத்து பணிக்க புறத் அருளாள ஹட்டஸு அருளாள ஹட்டஸு மண்டலபுருஷ ஹட்டஸு இராயந் ஷேவறாஜஹட்டஸு அருளா[ப]ட்டஸு விநாயக ஹட்டஸு தியாநஹட்டஸு பாண்டவ தூதஹட்டஸு காலகாலஹட்டஸு

22. நாராயண ஹாரஜிந மலைகிநிய நின்றான் ஹட்டஸு சிந்தை உடையாந் ஹட்டந் எழுத்து உலகங்காத்தாநெழுத்து உக்கிரக்கண்ணந் எழுத்து களப்பாளன் எழுத்து கீரன் கைஎழுத்து இது ஸ்ரீ ஊாஹேஸ்வர ரக்ஷெ உ

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 198/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: -
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்.
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 316/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 59
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : கச்சபேசுவரர் கோயிலில் அஞ்சனாக்சி அம்மன் சன்னதிக்கு எதிரே உள்ள மண்டபத்தின் தெற்குச் சுவரில் உள்ள கல்.

குறிப்புரை : இந்தக் கல்வெட்டு ஒரு முழுமையற்ற (பகுதியளவு சேதமடைந்த) கல்வெட்டாகும். ஜெயங்கொண்டசோழ மண்டலத்தைச் சார்ந்த ராஜராஜச் சதுர்வேதிமங்கலத்தில் உள்ள பிரமீசுரமுடைய நாயனார் கோயிலில் திருப்பதியம் ஓதுபவரான மருதிடங்கொண்டார் மகன் பிரம்மன் என்கிற சித்திரமேழி என்பவர் செங்குன்ற நாட்டின் களத்தூர் கோட்டத்திற்குட்பட்ட திருக்கச்சூர் என்கிற நித்தவினோத நல்லூர் என்ற ஊரில் அமைந்துள்ள திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலில் சைவ நாயன்மார் திருநாவுக்கரசர் (அப்பர்) சிலையை நிறுவியுள்ளார்.

Summary : The west wall of the outer prākārā in the same temple. Tamiḻ - Chōḻa - Kulōttuṅga-III. This inscription is fragmentary. It records the setting up of an image of the Saiva saint Tirunāvukkaraśu (i.e., Appar) in the temple of Tiruvālakkōyiluḍaiyā-nāyaṉār of Tirukkachchūr alias Nittavinōdanallūr in Seṅguṉṟa-nāḍu in Kaḷattūr kōṭṭam, in Jayaṅkoṇḍachōḻa-maṇḍalam, by Biramaṉ alias Chittiramēḻi, son of Marudiḍaṅgoṇḍār, a reciter of the sacred hymns *(Tiruppadiyam)* in the temple of the deity Biramīśuramūḍaiya-nāyaṉār of a [Rājarājach] chaturvēdimaṅgalam in the same *Maṇḍalam.*

கல்வெட்டு :

1. .... முன்னாக திரிபுவனச்சவத்திகள் மதுரையுமீழமும் கருவூரும் பாண்டியன்
2. .... ஷேகமும் விசைய அபிஷேகமும் பண்ணியருளின திரிபுவன சோழதேவற்கு யா-
3. .... மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டு திருக்கச்சூரான நித்தவினோத நல்லூர்

4. .... யநார் கோயிலுக்கு திருநாவுக்சரசு தேவரை எழுந்தருளிவித்தான் இம்மண்டலத்து
5. ....ஜச் சதுப்பேதி மங்கலத்து உடையார் பிரமீசுரமுடைய நாயநார் கோயிலில் பலப-
6. ....பதியம் விண்ணப்பஞ் செய்வார் மருதிடங்கொண்டார் மகன் பிரமனான சித்திரமே-
7. .... வித்தான் உ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 199/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: ---
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்.
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 317/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 60
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சுந்தரபாண்டியதேவன்		

இடம் : கச்சபேசுவரர் கோயிலில் அஞ்சனாக்சி அம்மன் சன்னதிக்கு எதிரே உள்ள மண்டபத்தின் தெற்குச் சுவரில் உள்ள மற்றொரு கல்.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. 'எம்மண்டலமும் கொண்டருளிய' சுந்தரபாண்டிய தேவர் என்ற குறிப்பு மட்டும் உள்ளது.

Summary : The another detached stone built in the west wall of the outer prākārā in the same temple. Tami̱l - Pāṇḍya - Sundara Pāṇḍya-I. (13th century). This inscription is extremely fragmentary. It refers to the king as one 'who was pleased to take every country'.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ எம்மண்டலமுங் கொண்டரு . . . .
2. சுந்தரபாண்டிய தேவர் முதலிகள் . . . .
3. ம சோழதேவரா . . . .
4. ருவாங்கு செட்டி த . . . .
5. னான இது ஸ்ரீமாஹே . . . .

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 200/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: சகம் 1406
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1484
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 318/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 61
அரசு	: விஜயநகரர்		
அரசன்	: நரசிங்கராயர்		
இடம்	: மருந்தீஸ்வரர் கோயில் தெற்கு மற்றும் கிழக்குச் சுவர்.		

குறிப்புரை : விஜயநகர அரசர் நரசிங்கராயரின் முதன்மைச் சேவகர் (முதப்பாவாடை) நாகமநாயக்கர் அவர்களின் நலன் வேண்டி நாகமநாயக்கரின் பிரதிநிதி சோட திம்மநாயக்கர் மற்றும் கரணக்கர் சிலுமரசர் ஆகியோர் திருக்கச்சூரில் உள்ள மலைமேல் மருந்துக்குனாதயபுரம் என்ற புதிய கிராமத்தினை உருவாக்கியுள்ளார்.

அந்த ஊரில் பல பட்டடை குடிகளை குடியமர்த்தி அக்குடும்பங்களுக்கு வீட்டுமனைகள் பகிர்ந்து அளிக்கப்பட்டன. பொ.ஆ. 1484-ஆம் ஆண்டு சௌமிய வருடம் ஆடி மாதம் முதல் ஆறு மாதங்கள் வரை வரிவலக்கு அளிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு முதல் கைக்கோளர், பல பட்டடை மற்றும் சாவகக்குடிகள் ஆகியோருக்கு மாதம் ஒன்றிற்கு கால் பணம் வரிநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், மற்ற மதத்தைச் சேர்ந்தவர்கள் அந்த ஊரில் குடியேறக் கூடாது என்றுக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல், பள்ளர் குடும்பங்கள், வாசல் பணம் என்ற வரியைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

Summary : The west wall of the outer prākārā in the same temple. Tamil̲ - Narasiṅgarāya. Sakā 1406 (1484 C.E.). This inscription records the foundation of a new village called Marundukkun̲ādayapuram on the hill at Tirukkachchūr for the merit of the king and his foremost servant *(mutappāvāḍai)* N̲āgamanāyakkar. This was arranged by the latter's agent Chōḍa-Timanāyakkar, and the *karaṇakkar* Silumaraśar. It is stated that the house-sites in the place were allotted to various categories of families on condition that from the month oa Āḍi in the year quoted above, for six months, they could enjoy the sites as *sarvamānya* (tax-free) and from the next year onwards each of the *Kaikkōḷar* (weaver) and other families should pay paṇam as tax. It is stated that people of other religions should not occupy the place. It further states that the *Paḷḷa* families are exempted from the payment of the tax called *vāśal-paṇam.*

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமந்மஹாமண்டலெஸ்வர மேதினி மீஸரகண்ட கட்டாரி ஸாளுவ சாளுவ னரசிங்கராயற்கு செல்லா நின்ற ஶகாப்தம் ரூசாக மேல் செல்லா நின்ற ஸௌம்ய வருஷம் இஷஹ நாயற்று பூர்வ்வபக்ஷத்து பூணையும் வியாழக்கிழமை னால்
2. நரஸிம்ஹராயர் முதப்பாவாடை னாகம நாயக்கர் கார்யத்துக்கு கடவர் சோடத்திம்மு னாயக்கரும் கரணக்கர் சிலுமரசரும் நரஸிம்ஹராயர்க்கும் நாகமனாயக்கர்க்கும் தன்மமாகத் திருக்கச்சூர் மலைமேல்
3. மருந்தற்க்கு னாகயபுரமாக புதுசாக வாஸ்து இட்டு பலபட்டடையாந குடிகளுக்கு இசெலாலேகை பண்ணிக்குடுத்தபடி இது இவ்வருஷம் ஆடி மாதம் முதல் ஆரு மாதவரைக்கும் ஸர்வ்வமானியம் இதுக்கு எதிராம்
4. வருஷம் முதலாக மாதம் ஒன்றுக்கு கைக்கோள[ரு]க்கும் பல பட்டடைக்குடிகள் சாவகத்துக் குடிக்கும் கால்(ப்)பணம் கொள்ளக்கடவோம் ஆகவும் இம்மதத்தார் ஒழிய அன்னியர் மடம் பண்ணிக்கொள்ள
5. கடவோம் அல்ல கொண்டவர்கள் கெங்கை கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போகக்கடவர்களாகவும் இந்த தன்மத்துக்கு இராசதரம் நடக்கும் பேர் தாநத்தாரும் மற்றும் ச . . விக்கிரப்பெரும்
6. . . . . கொண்டால் சிவத்துரோகி ஆக கடவர்கள் வந்து ஏறிந பள்ளக் குடிக்கு வாசல் பணம் ஸர்வ்வமாநியம் ஆகவும்

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 201/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 8
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1258
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 319/1909
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 62
அரசு	: -		
அரசன்	: முதலாம் சுந்தரபாண்டியதேவர்		
இடம்	: விக்னேஸ்வரர் சன்னதி வடக்குச் சுவர் அருகிலுள்ள தொட்டி.		

குறிப்புரை : ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பிரம்மகுளத்தூரான வேட்டைக்காரன் குளத்தூரில் உள்ளூர் தேவதானம் ஒரு வேலி, திருவிடையாட்டம் ஒரு வேலி, பிடாரி பட்டி கால் வேலி, திருவாலக்கோயில் நாயனார் தேவதான விளக்குப்பட்டி நான்கரை வேலி ஆகியவற்றை நீக்கி மீதமுள்ள நிலங்களில் பஞ்சநதிவாண நீலகங்கரையர் அளித்த 5 வேலி நிலம், நல்லநாயனார் நீலகங்கரையர் அளித்த 8 வேலி நிலம், அருணகிரி பெருமாள் நீலகங்கரையர் அளித்த 10 வேலி நிலம் ஆக இம்மூவரும் அளித்த 23 வேலி நிலத்தினை திருக்கச்சூர் பெருமாள் நாற்பத்தெண்ணாயிர விண்ணகர் எம்பெருமான் கோயிலுக்குத் திருவிடையாட்டமாக வழங்கப்பட்டுள்ளது. இச் சாசனத்தில் திருமலைத்தந்தான் முனையதரையன் என்பவர் கையொப்பமிட்டுள்ளார்.

Summary : The north wall of the Vignēśvara shrine near the tank, in the same village. Tami̱l - Pāṇḍya - Sundara Pāṇḍya-I. r.y. 8 (1258 C.E.). It records a gift of 23 *vēli* of land by three persons, viz., Pañchanadivāṇa Nīlagaṅgaraiyar (5 *vēli*), Nallanāyaṉār Nīlagaṅgaraiyar (8 vēli) and Aruṇagiri Perumāḷ Nīlagaṅgaraiyar (10 vēli) as *iṟaiyili tiruviḍaiyāṭṭam* land in Brahmakuḷattūr alias Vēṭṭaikkāraṉ Kuḷattūr to the temple of the god Perumāḷ Nāṟpatteṇṇāyira-viṇṇagar Emberumāṉ of Tirukkachchūr. A certain Tirumalaitaṉtāṉ Muṉaiyadaraiyaṉ figures as the signatory.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடபன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு அ ஆவது ஜஷ -
2. ஐ நாயற்று வூவ்ஹு வக்ஷத்து தூஷியையும் வியாழக்கிழமையும் பெற்ற பூசத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து களத்தூர்க் கோட்டத்து செங்குன்ற நாட்டு திரு-

3. க்கச்சூர் பெருமான் நாற்பத்தெண்ணாயிர விண்ணகர் எம்பெருமானுக்கு ஊற்றுக்காட்டு கோட்டத்து ஸ்ரீ குளத்தூரான வேட்டைக்காறன் குளற்த்தூர் நீர் நிலத்தில் பன்னிரடி கோ-
4. லால் உள்ளூர் தேவதான நில ஒரு வேலியும் திருவிடையாட்ட நிலம் ஒரு வேலியும் பிடாரிபட்டி காலும் உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனார் தேவதான விளக்கு பட்டி உள்பட நாலரைவேலியும் நீக்கி
5. உள்ள நிலத்தில் பஞ்சநெதிவான நீலகங்கரையன் விட்ட நில ஐஞ்சு வேலியும் நல்ல நாயனார் நீலங்கரையர் விட்ட நில எட்டுவேலியும் அருணகிரி பெருமாள் நீலகங்கரையர் விட்ட நில பத்-
6. து வேலியும் இவூரு பிடாகைகளும் நால்பாற்கெல்லைக்க . . . . மும் கொல்லை நிலமுமான குழி . . . . . . மும் கடமை ஆயம் பொன்வரி நாட்டு வரி காசு கடமைபட்டி . . .. வெட்டி அரிமுக்கை காத்திகை பச்சை ஏரிமீ-
7. ன் பாட்டம் புறகிலனை ஆசுவிகள் பேற கடமை அனைத்தாயமும் நாம் இறையிலி திருவிடையாட்டமாக விட்டோம் இக்கோயில் தானத்தாற் கேற போக்கறுப்பதே திருமலை தன்தா-
8. ன் முனையதரையன் எழுத்து இது சீமாஹேஸ்வர ரக்ஷை உ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 202/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 18
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1234
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 42/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 63 (42)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராசராசன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் திருச்சுற்று மேற்கு புறச்சுவர்.		

குறிப்புரை : குலோத்துங்கசோழ கண்ணப்பன் தூசி நீலகங்கரையன் ஆதிநாதன் உள்ளாரில் நல்லான் என்பவர் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலுக்கு 270 பலம் எடை கொண்ட வெண்கலத்தினாலான திருப்பரிகலம், பித்தளையில் ஆன வட்டணைக்கால், வெண்கலத்தினாலான வட்டில், வெள்ளி வட்டில் ஆகியவை தானமளித்துள்ளார். பெரும்பற்றப்புலியூர் (சிதம்பரம்) மேற்கு வாயிலிலும், காஞ்சிபுரம் கங்கைகொண்டான் மண்டபத்திலும் இவரது வருகையை அறிவிக்க வெள்ளி காளம் ஒன்றினையும் வழங்கியுள்ளார்.

Summary : On the west wall of the verandah round the central shrine of the Kachchabēśvara temple. Tamil̠ - Chōl̠a -Rājarāja-III r.y. 18 (1234 C.E.). Registers the gift of same bronze brass and silver utensils to the temple of Tiruvālakkōyiluḍaiyā-nāyan̠ār at Tirukkachchūr by Kulōttuṅgachōl̠a-Kaṇṇappan̠ Dūśi Nīlagaṅgaraiyan̠ Ādināthan̠ Uḷḷāril-nallān̠, along with a silver trumpet to announce his arrival (as at) the western gate of Perumpaṟṟappuliyūr (Chidambaram) and at the Gaṅgaikoṇḍān̠ maṇḍapa in Kāñchi.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு ய௮ வது மிதுன நாயற்று திருக்கச்சூர் உடையார் திரு-
2. வாலக் கோயிலுடைய நாயனார்க்குக் குலோத்துங்கசோழக் கண்ணப்பன் தூசி நீலகங்கரையன் ஆதிநாதன் உள்ளாரில் நல்லான்
3. குடுத்த திருப்பரிகலம் ஒன்றிநால் வெண்கல எடை இருநூற்று எழுபதின் பலம் திருவட்டணைக் கால் ஒன்றிநால் பித்தளை எடை ஆயிரத்து இ-
4. ரு நூற்று அறுபலம் தண்ணீர் அமுது வட்டில் ஒன்றிநால் வெண்கல எடை இருபதின் கழஞ்சு தண்ணீர் அமுது வட்டில் ஒன்றிநால் வெள்ளி எடை முப்பதிந் க-

5. ழைஞ்சும் பெரும்பற்றப்புலியூர் மேலைத் தலை வாசலில் நின்றும் சீகாஞ்சியில் கங்கை கொண்டான் திருமண்டபத்தில் நின்றும் சீமாகேசுரர் சந்தி-
6. ராதித்தவரை உள்ளாரில் நல்லான் தம்பிரான் வந்தான் என்று திருச்சின்னம் பணிமாறுவதென்று இந்த நியோகப்படி திருச்சின்னம் மாறுகிற காள-
7. த்துக்கு இவந் இட்ட வெள்ளிக்காளம் ஒன்றி நாலு வெள்ளி எடை ஐம்பதின் கழஞ்சு இவை சீமாகேசுரர் இரக்ஷை ௨

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 203/2024**

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 28
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1244
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 43/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 64 (41)
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராசராசன்		

இடம் : கச்சபேசுவரர் கோயில் திருச்சுற்று மேற்குச் சுவர்.

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலில் காவல் காணி உடைய கண்ணப்பன் விசையாலப்பரையன், துளாயன் வேங்கையான வன்னெஞ்சிப் பறையன் ஆகியோர் இக்கோயிலில் ஒரு சந்தி விளக்கெரிக்க இக்கோயில் பிராமணர்களிடம் 5 பசுக்களைத் தானமளித்துள்ளனர்.

Summary : On the west wall of the verandha round the central shrine of the Kachchbēśvara temple. Tamiḻ - Chōḻa -Rājarāja-III r.y. 28 (1244 C.E.). Registers the gift of 5 cows for a twlight lamp in the temple of Tiruvālakkōyil-uḍaiyā Nāyaṉār in Tirukkachchūr of Seṅguṉra-nāḍu in Kaḷattūr kōṭṭam, a sub division of Jayaṅkoṇḍachōḻa-maṇḍalam by Kaṇṇappaṉ Vijayālayapparaiyaṉ and Tuḷāyaṉ vēṅgaiyaṉavaṉ Vaṉneñchipparayaṉ the temple watchman.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு உ௰அ வது
2. செயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூ-
3. ருடையார் திருவாலக்கோயிலுடைய நாயனார்க்கு இக்கோயில் காவல் காணி உடைய இரந்தி தே-
4. வர்கி கண்ணப்பன் விசையாலப்பரையன் துளாயன் வேங்கையான வன்னெஞ்சிப்ப-
5. ரையன் வைத்த சந்திவிளக்கு ௱க்கு பசு ஐ[ஞ்]சுக்கு இக்கோயில் காணியுடைய சிவப்ராஹ்மணன்

6. காஞ்சிகுறி உக்ஷணாமூத்தி ஹட்டநும் நாற்பத்தெண்ணாயிரபட்டன் பொன்னம்பலக் கூத்தரும்
7. திருச்சிற்றம்பலஹட்டன் மாதேவரும் சதாசிவஹட்டன் பிச்சரும் கைக்கொண்ட பசு ஐஞ்சு
8. இப்பசு ஐஞ்சும் கைக்கொண்டு சந்திவிளக்கு ஒன்றும் சந்திராதித்தவரை எரிப்பதாக
9. சிலாலேகைப் பண்ணிக்குடுத்தோம் இவ்வனைவோம் இது ஸ்ரீமாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 204/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 4
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1067
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 44/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 65 (40)
அரசு	: சோழர்		
அரசன்	: வீரராஜேந்திரன்		

இடம் : கச்சபேசுவரர் கோயில் திருச்சுற்று மேற்குச் சுவர்.

குறிப்புரை : செங்காட்டுக் கோட்டம் மாகனூர் நாட்டுப் பிரிவிலுள்ள பேரும்பேடு ஊர்த் தலைவர் கங்கைகொண்டான் என்பவர் களத்தூர்க் கோட்டத்து திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலில் ஒரு சந்தி விளக்க எரிக்க இக்கோயில் சிவபிராமணர்களிடம் 3 மூன்று பழங்காசுகள் கொடுத்துள்ளார். இக்கோயில் பிராமணர்கள் இந்த மூன்று பழங்காசுகளைப் பெற்றுக்கொண்டு சந்தி விளக்கு எரிப்பதாகச் சம்மதித்துள்ளனர்.

Summary : On the west wall of the verandha of the central shrine of the Kachchbēśvara temple. Tamiḻ - Chōḻa -Vīrarājēndra r.y. 4 (1067 C.E.). Registers the gift of 3 *paḻaṅkāśu* for burning a twilight lamp infront of the main deity of Tiruvālakkōyil-uḍaiyā Nāyaṉār temple in Tirukkachchūr of Seṅguṉra-nāḍu in Kaḷattūr kōṭṭam, a sub division of Jayaṅkoṇḍachōḻa-maṇḍalam by Gaṅgaikoṇḍāṉ the headman of Perumbēḍu in Māgaṉūr-nāḍu a sub division of Seṅgāṭṭuk-kōṭṭam Sivabrahmanan of this temple were received the 3 *paḻaṅkāśu* and accept to maintain the lamp.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்த்ரதெவற்கு யாண்டு ௪ ஜயங்-
2. கொண்ட சோழ மண்டலத்து களத்தூர் கோட்டத்து செங்குன்ற நாட்டு திருக்க-
3. ச்சூரு உடையார் திருவாலக்கோயிலுடைய நாயினார்க்கு செங்காட்டுக் கோ-
4. ட்டத்து மாகனூர் நாட்டு பெரும்பேட்டு வளைகிழான் கங்கைகொண்டான்
5. வைத்த சந்திவிளக்கு ௲ இச்சந்தி விளக்கு ஒன்றுக்கு இக்கோயிலில் காணியு-

6. டைய ஶிவப்ராஹ்மணரில் காஞ்சை காஶ்யபன் அனவரத ஸுஜர பட்டன் ஆட்-
7. கொண்ட பிள்ளையான ஈஶாநஶிவ பட்டனும் ஆரப்பிள்ளையான ஶிவக்கொ-
8. ழுந்து பட்டனும் திருப்பிள்ளையும் செம்பொன்னும் நாயனும் இவ்வனைவோம்
9. கைக்கொண்ட பழங்காசு ௩ இப்பழ[ங்காசு]* மூன்றுங் கைக்கொண்டு இச்சந்தி விளக்கு
10. ஒன்றும் சந்திராதித்தவரை திருமுன்பே எரிக்ககடவோமாகச் சம்மதித்து
11. சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் இவ்வனைவோம் இது சீஈாகேசுவர ரக்ஷை

* இருவரிகளுக்கிடையே பொறிக்கப்பட்டுள்ளது.

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 205/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 6
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1067
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 45/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 66 (39)
அரசு	: சோழர்		
அரசன்	: வீரராஜேந்திரன்		

இடம் : கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று உட்புற வடக்குச் சுவர்.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு திருமாகறல் ஊரைச் சார்ந்த அயண்டம்பாக்கத்து ஊர்த்தலைவர் திருவாண்டான் காமன் என்பவர் திருக்கச்சூர் திருவாலக்கோயில் இறைவன் முன் சந்தி விளக்கெரிக்க 4½ பழங்காசுகளை இக்கோயில் சிவப்பிராமணர்களிடம் அளித்துள்ளார். இக்கோயில் சிவபிராமணர்கள் இக்காசுகளைப் பெற்றுக்கொண்டு சந்தி விளக்கு எரிப்பதாக சம்மதித்துள்ளனர்.

Summary : On the north wall of the same verandha Tamiḻ - Chōḻa -Vīrarājēndra Chōḻa dēva r.y. 6 (1067 C.E.). Registers a gift of 4½ *paḻaṅkāśu* for burning a twilight to the temple of Tiruvālakkōyil-uḍaiyā-nāyaṉār in Tirukkachchūr by Tiruvāṇḍāṉ kāmaṉ, the head man of Ayaṇḍam-pākkam in Tirumāgaral of Māgaral nāḍu in Eyiṟ kōṭṭam of Jayaṅkoṇḍachōḻa-maṇḍalam. The Sivabrahmanas of the temple were received 4½ *paḻaṅkāśu* from him and agreed to maintain the lamps.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்ரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்த்ரதெவற்கு யாண்டு ஆறாவது கற்கடக நாயற்று ஜயங்கொண்ட சோழ மண்டலத்து
2. களத்தூர் கோட்டத்து செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனாற்க்கு இம்மண்டலத்து எயிற்கோட்ட-
3. த்து மாகறல் நாட்டுத் திருமாகறலில் அயண்டம்பாக்கிழான் திருவாண்டான் காமன் வைத்த சந்தி விளக்கு ஒன்று இச்சந்தி விளக்கு ஒன்றுக்கும் இக்கோ-
4. யில் காணி உடைய சிவப்ராஹ்மணன் காஶ்யபன் காஜ்ஜை அநவரத ஸுஹ்ர-ஸட்டன் முதலிப் பிள்ளையும் இவன் தம்பி காரிப் பிள்ளையும் கைக்கொண்ட பழங்-

5. காசு ச௨ இப்பழங்காசு நாலரையும் கைக்கொண்டு சந்திராதித்தவரை திருமுன் எரிக்கும் சந்திவிளக்கு ஒன்றும் எரிக்க கடவோமாக சம்மதித்து சிலாலேகை பண்-

6. ணிக்குடுத்தோம் முதலிப்பிள்ளையும் காரிப்பிள்ளையும் இவ்விருவோம் இது பன்மாஹேஶ்வர ரக்ஷை ௨

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 206/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	:-
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:-
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	:47/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 67 (96)
அரசு	: சம்புவராயர்		
அரசன்	: வென்று மண்கொண்ட சம்புவராயர்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் திருச்சுற்று கிழக்குச் சுவர்.		

குறிப்புரை : துணி நெய்யும் சாலியர்களுக்கு இக்கோயிலில் பரிவட்டம், ஒடுக்கு ஆகிய சலுகைகள் அளித்த செய்தி.

Summary : On the right entrance into the first prakara in the same temple. Tamiḻ - Sambuvarāya- Veṇṟu maṇkoṇḍa - Fragmantary Inscription. Records that the conferment of certain temple honours like *parivaṭṭam* and *oḍukku* on a weaver *(sāliyar).*

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலலோகச் சக்கரவத்திகள் ஸ்ரீ வென்று மண்கொண். .
2. றாவது பூறுவ பக்ஷத்து நவமியும் திங்கள் கிழமையும் . . .
3. காண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துச் . . .
4. . . . . . உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனா . . .
5. எழுந்தருளப்பண்ணினான் சாலியர் . . .
6. பரிவட்டமும் ஒடுக்கும் இடக்கடவேனாகவும் . . .
7. எழுந்தருளக்கடவராகவும் உடையார் எழுந்தரும்போது ஸவ. . . .

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 207/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: -
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 48/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 68 (88)
அரசு	: பாண்டியர்		
அரசன்	: திரிபுவன. குலசேகரதேவர்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் திருச்சுற்று தெற்குச் சுவர்.		

குறிப்புரை : துண்டுக்கல்வெட்டு. திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலில் ஒரு நந்தாவிளக்கு எரிக்க 32 பசுக்கள் கொடுத்தச் செய்தி.

Summary : On the north wall of the first prakara in the same temple. Tami̱l - Fragmantary Inscription -Pāṇḍya - Tribhu. Kulasēkhara dēva. Registers a gift of 32 cows for a perpetual lamp in the temple of Tiruvālakkōyil.

கல்வெட்டு :

1. ச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலசேகர தேவர்க்கு
2. ரோசணி நாள் ஜயங்கொண்டசோழ
3. யார் திருவாலக்கோயிலுடைய நாயனார்
4. நுந்தா விளக்கு ஒன்றுக்கு விட்ட பசு முப்பத்திர
5. உடைய சிவப்பிராமணரோம் கைக்கொ-
6. கச் சிலாலேகை பண்ணிக்குடுத்தோம்

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 208/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 29
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1279
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 49/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 69 (129)
அரசு	: தெலுங்குச் சோழர்		
அரசன்	: விஜையகண்ட கோபாலன்		

இடம் : கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்று தெற்குச் சுவர்.

குறிப்புரை : தாளிமங்கலத்து ஊர் கணக்கனுக்கு நீலகங்கரையன் என்னும் அதிகாரி அளித்த ஆணை. திருக்கச்சூர் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலுக்குத் தனது பெயரில் 'நீலகங்கரையன் நந்தவனம்' என்ற நந்தவனத்தினை ஏற்படுத்தி, இதனைப் பராமரிப்பதற்கு தாளிமங்கலம் ஊரில் பெறப்படும் வரிகளைப் பயன்படுத்திக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ளச் செய்தி.

Summary : On the south wall of the first prakara in the same temple. Tami̱l - Telugu Chōḻa - Vijaya Gandagopala r.y. 24 (1279 C.E.). Registers the order of Nīlagaṅgaraiyan̲ issued to the accountant of Tāḷimaṅgalam, remitting with effect from the month of *Āḍi* in the 29th year the taxes on the village granted by him for the maintenance of a flower garden named after him.

கல்வெட்டு :

1. திருவாய்க்கேழ்வி முன்னாக திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விசைய கண்டகோபால தேவர்க்கு
2. யாண்டு உ௰௯ வது நீலகங்கரையன் ஓலை தாளமங்கலத்து ஊர் கணக்கன் கண்டு விடை
3. தாளமங்கலம் இருபத்தொன்பதாவது ஆடி மாத முதல் நாற்பாற்கெல்லைக்கு உள்பட்ட கொல்லை
4. நிலமும் விளைநிலமும் ஏரிவாய் நத்தமும் உள்பட திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலு-
5. டைய நாயனார்க்கு திருநந்தவனம் செய்யும் ஆண்டார் தோன்றாத்துணை ஆண்டார்க்கு திருநந்-
6. தவனப்புறமாக இட்டோம் நீலகங்கரையன் திருநந்தவனத்துக்கு இன்நிலத்துக்கு அரிப்பா-

7. டி காவல் ஊர்காவல் பேர்கொள்ளும் ஒபாதிக் கொண்டு . ஆ . . . கடமையும் ஆய-
8. மும் பட்டி குற்றமும் காத்திகைப்பச்சை (சிமெண்ட பூசப்பட்டுள்ளது) ஆசுவிகள் பே-
9. ரால் கடமையும் பொன்வரி நாட்டு வரியும் உள்பட்ட அனைத்தாயங்களும் இழிந்தோம் இந்நா-
10. ள் முதல் இப்படி செய்வதே இப்படிக்கு திருமலையிலே சிலாலேகையும் பண்ணுவதாகவும்
11. சொன்னோம் இப்படி செய்வதே இவை

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 2
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1292
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 50/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 70
அரசு	: தெலுங்குச் சோழர்		
அரசன்	: வீரகண்டகோபாலன்		

இடம் : கச்சபேசுவரர் கோயில் திருச்சுற்று வடக்குச் சுவர்.

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து புலியூர் கோட்டத்து தாம்புரம் ஊரைச் சார்ந்த துலையாத செல்வன் மாரிபிள்ளை என்னும் சீனத்தரையர் மற்றும் இவரது தம்பி அறமாண்டை ஆகிய இருவரிடமிருந்து ஒட்டங்காடு ஊரிலிருந்த நிலங்களை வாங்கி பஞ்சநதிவாணன் அருணகிரிப் பெருமாள் நீலகங்கரையன் என்பவர் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுக்குத் தேவதானமாக வழங்கியுள்ளார்.

Summary : On the south wall of the first prakara in the Kachchabēśvara temple. Tamil̲ - Telugu Chōl̲a - Vīragaṇḍgōpāla. r.y. 2 (1292 C.E.). Registers a gift of land in Oṭṭaṅkāḍu as *dēvadāna* by Pañchanadivāṇan̲ Aruṇagirip-perumāl̲ after purchasing it from Tulaiyātha Selvan̲ Mārippil̲l̲ai alias Sīn̲attaraiyan̲ and his brother Aṛamāṇḍai of Tāmpuram in Surattūr-nāḍu, a sub-division of Puliyūr-kōṭṭam in Jayaṅkoṇḍachōl̲a-maṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கேழ்வி முன்னாக திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரகண்ட கோ-
2. பால தேவற்கு யாண்டு உ வது மிதுன நாயற்று பூவ௨பக்ஷத்து த்ரிதிகையும் நாயற்றுக் கிழமை-
3. யும் பெற்ற பூசத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து புலியூர் கோட்டத்துச் சுரத்தூர்
4. நாட்டு தாம்புரத்து குளத்துழான் துலையாத செல்வன் மாரி பிள்ளையான சீனத்தரையர் மூ-
5. ன்று கூறிட்ட இக்கூறும் இவர் தம்பி அறமாண்டை ஒரு கூறுமாகச் செங்காட்டுக் கோட்டத்து மா-

6. கணூர் நாட்டுப் பெரும்பேட்டு ஊர் ஊர் பக்கல் விலைகொண்டுடைய ஒட்டடங்காடு சோற-
7. ன் திருத்து உள்பட நாற்பாற்கெல்லைக்கு உள்பட்ட விளை நிலத்திலும் கொல்லை நிலத்திலும்
8. துணநலத் தேவதானம் திருவிடையாட்டம் நிலம் நீக்கி அல்லாத நிலம் திருக்கச்சூர் உடை-
9. யார் திருவாலக்கோயில் உடைய நாயனார்க்குத் தேவதானமாக இட்டோம் ப-
10. ஞ்ச நதிவாணன் அருணகிரிப் பெருமாள் நீலகங்கரையனேன் இன்னாள் முதல்
11. இக்கோயில் தானத்தார்க்கு ஏற கடமை குடிமை போக்கறுப்பதே இப்படிக்கு இவை
12. நீலகங்கரையன் எழுத்து ஸ்ரீ மாஹேச்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 210/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 8
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 51/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 71
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சுந்தரபாண்டியன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் திருச்சுற்று தெற்குச் சுவர்.		

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதி மட்டும் உள்ளது. சுவர்ப் பகுதியில் மறைந்துள்ளது. செங்காட்டுக் கோட்டத்து கோனாதி நாட்டுக் கடிகையார் திருநாமத்துக்காணியாக நிலதானம் வழங்கியச் செய்தி.

Summary : On the south wall of the first prāhara of the same temple. - Pāṇḍya. Saḍāyavarmaṉ Sundara Pāṇḍya- r.y. 8. Built in the middle of the inscription. It states that the gift of land *tirunāmattukkāṇi* to the temple by the *ghaṭikaiyār* of Kāvaṉūr in Kōnādi-nāḍu of Seṅkāṭṭuk-kōṭṭam.

கல்வெட்டு :

1. கள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு அவது கா. . .
2. டலத்து செங்காட்டுக் கோட்டத்துக் கோனாதி . . .
3. காணி உடைய கடிகையர்ரோம் திருக்கச்சூர் உடை . . .
4. துக் காணியாக இவ்வூரில் நாங்கள் விட்ட மூ . . .
5. ஞ்ஞூறும் மூன்றாந் தரத்துக்குக் குழி ஐஞ்ஞூறும் நால . . .
6. க் காணியாக விட்டோம் இவ்வூர் எங்களுக்கு இ . . .
7. இவ்வூர் காணி உடைய கடிகையர் இராம இலத் . . .
8. மாளும் மேற்படி உடைய பிள்ளையும் பெரி . . .
9. டையான் அழகிய பெருமாளும் காவனூர் கிழான் . . .
10. ளயும் காவனுழான் கன்றேரனும் பெரிய . . .
11. சந்திரசேகரனும் இவ்வனைவோம் . . .

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 211/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: -
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 52/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 72 (118)
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சடையவர்மன் திரிபுவன.		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்றுத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : திருக்கச்சூர் திருவாலக்கோயில் திருமடை விளாகத்தில் அமைந்திருந்த தியாகவிநோதன் திருமடத்தைச் சார்ந்த புஷ்பகிரி மாணிக்க கூத்தன் என்பவர் இக்கோயிலில் இரண்டு நொந்தா விளக்குகள் எரிப்பதற்கு அன்றாடு நற்காசுகள் இக்கோயில் சிவபிராமணர்களிடம் அளித்துள்ளார். கல்வெட்டின் மையப்பகுதி கட்டடப் பகுதிக்குள் மறைந்துள்ளது.

Summary : On the south wall of the first prākāra in the same temple. Pāṇḍya - Sadayavarmaṉ Tribh. r.y.11. Built in the middle portion of the inscription. Records a gift money for two perpetual lamps by Pushpagiri Māṇikka-kūttaṉ of the *Tiyagavinōdaṉ tiurmaḍam* situated in the *Tirumadaiviḷāgam* of Tiruvālakkōyil at Tirukkachchūr.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்கேழ்வி முன்னாக கோற்சடபன்மரான திரிபு . . . . தேவர்க்கு யாண்டு ௰௧வது இஷப நாயற்று அபரவக்ஷத்து தெஸமியும் நாயற்றுக்கி-
2. ழமையும் பெற்ற திருவோணத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டல . . . . . ட்டுத் திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனார்க்கு இந்நாயனார் திரும-
3. டை விளாகத்து தியாகவினோதன் திருமடத்து புஷகிரி மாணிக்க கூத்த . . . . ந்தா விளக்கு இரண்டுக்கு இக்கோயில் நாற்பத்து நாலு வட்டத்துக்காணி உடைய சிவ-
4. பிராமணரோம் கைக்கொண்ட திருநுந்தா விளக்கு ஒன்றே காலும் . . . திருநுந்தாவிளக்கு காலும் இவ்வூர் கரணத்தான்
5. கோயிற் கணக்கு பொன்மலை உடையானான நாற்பத்தெண்ணாயிர . . . யும் கைக்கொண்ட திருநுந்தா விளக்கு அரையு-

6. ம் ஆக திருநுந்தாவிளக்கு இரண்டுக்கு கைக்கொண்ட அன்றாடு ந . . . நாற்பத்தெண்ணாயிர பட்டன் திருவேகம்பமுடை-
7. யான் கைக்கொண்ட சந்திவிளக்கு முக்காலும் சதா . . . .லும் திருநுந்தாவிளக்கு இரண்டும் சந்திராதித்தவ-
8. ரை எரிக்க கடவோமாகச் சிலாலேகை பண்ணிக்குடுத்தோ. .

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 212/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 8
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 53/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 73 (84)
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சடையவர்மன் சுந்தரபாண்டியன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்றுத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயில் உடைய நாயனார் இறைவனுக்கு நீராட்டலுக்கும் உணவு படைப்பதற்கும் இவ்வூர் தேவரடியார் போகமாத்தாள் என்பவரின் மகள் உற்றா நாச்சியார் என்பவர் தானமளித்துள்ளார். கல்வெட்டு முழுமையடையாமல் உள்ளதால் தானத்தின் விவரம் அறிய இயலவில்லை.

Summary : On the south wall of the first prakāra in the same temple. Pāṇḍya - Saḍaiyavarmaṉ Sundarapāṇḍya- r.y. 8 ( ). Incomplete inscription. Register an endownment made for offering and sacred bath to the god of Tiruvālakkōyil in the temple of Tirukkachchūr by Uṟṟā-nāchchiyār daughter of Pōgamāttāl, a *dēvaraḍiyār* of the village.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோற்சடை[ய]பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய
2. தேவற்க்கு (யா)யாண்டு எட்டாவது ஆடி மாதம் திருக்கச்சூர் உடையார் திருவா-
3. லக் கோயிலுடைய நாயனாற்க்கு இவ்வூர் தேவரடியார் போகமாத்தாள்
4. மகள் உற்றா நாச்சியார் உடையார்க்கு ஆடி அருளவும் அமுது செய்தருளவும் விட்ட

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 213/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 25
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1275
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 54/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 74 (87)
அரசு	: தெலுங்குச் சோழர்		
அரசன்	: விஜயகண்ட கோபாலன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்றுத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : திருக்கச்சூர் எனும் நித்தவினோத நல்லூர் ஊரைச் சார்ந்த செம்பங்குடையான் சோறன் அவையாண்டை என்பவர் திருக்கச்சூர் திருவாலக்கோயிலுக்காகத் 'திருஞானசம்பந்தன் திருநந்தவனம்' என்கிற பெயரில் நந்தவனம் அமைப்பதற்கு 382 குழி நிலம் வாங்கித் தானமளித்துள்ளார். மேலும், திருவாலக்கோயில் இறைவனுக்குப் பொன்னால் பிரபை (திருச்சுடர் வளையம்) செய்வதற்கு 45 பணம் தானம் செய்ததையும் இக்கல்வெட்டுப் பதிவு செய்கிறது.

Summary : On the south wall of the first prākāra in the same temple. Telugu Chōḻa -Vijayagaṇḍa gōpālaṉ. r.y. 25 (1275 C.E.). It states that the gift of land by purchase made by Sembaṅkudaiyāṉ Śōraṉ Avaiyāṇḍai of Tirukkachūr alias Nittavinōda-nallūr, for a flower garden called *Tirujñānasambandaṉ-tirunandavaṉam* for the temple and also gift of money made by him for the *tiruvāsigai* of the god.

கல்வெட்டு :

1. திருவாய்க்கேழ்வி முன்னாகத் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவிசைய கண்டகோபால தேவர்க்கு யாண்டு
2. உ௫ வது செயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூரான நித்தவினோத நல்-
3. லூர் உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனார்க்குத் திருநந்தவனஞ் செய்வித்தான் இவ்வூர்ச் செம்பங்குடையான் சோறன்
4. அவையாண்டையேன் நான் செய்வித்தப் பொது கிறயாகநில திருவீதியில் மேற்கடையத் திருஞானசம்பந்தன் திருநந்-
5. தவனஞ் செய்கிறவர்களுக்கு சிவ செஷமாக நான் விலைகொண்டுடைய வடகழனியில் நாவல் கட்டை பழம்படி குழி

6. ௱௪௰ ம் பாளட்டி செறு பழம்படி குழி உ௱௪௰உம் பதிநறுசாண்கோலால் மிகுதிக்குறைவுட்பட குழி ௲அ௰உ இக்குழி
7. முன்னூற்றெண்பத்திரண்டும் இன்னாயனார் கோயில் தானத்தார் பக்கல் நாயனார்க்குத் திருவாசிகை செய்யப் பொன் கொள்ள
8. இன்னிலத்தால் வந்த கடமையும் ஆயமும் அரிமுக்கைத் துண்டமும் நெல்லில் கழித்து கொள்ளும் வெட்டியும்
9. உட்பட இழந்து இறையிழிச்சிக் குடுத்த பணம் ௪௰ரு இப்பணம் நாற்பத்து ஐஞ்சும் குடுத்து இன்னாயனார்
10. க்கு நான் செய்கிற திருநந்தவனம் செய்வார்களுக்கு சிவெக்ஷமாக இக்குழி முன்னூற்றெண்பத்திரண்டும்
11. காணியாக குடுத்த இன்னிலத்தால் வந்த கடமையும் ஆயமும் அரிமுக்கைத் துண்டமும் நெல்லில் கழி-
12. த்துக் கொள்ளும் வெட்டியும் இழந்துத் தானத்தார் பக்கல் இறையிழிச்சிக் குடுத்தேன் சந்திராதித்தவரை செல்வதா-
13. க சிலாலேகை பண்ணிக்குடுத்தேன் செம்பங்குடையான் சோறன் அவையாண்டையேன் இது ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 214/2024*

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	: 13+1=14
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	: 55/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 75 (83)
அரசு	: பாண்டியர்		
அரசன்	: திரிபுவன சடையவர்மன் சுந்தரபாண்டியன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்றுத் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : களத்தூர் கோட்டத்து புலிப்பாக்கம் என்கிற சோழச்சிகாமணிச் சதுர்வேதிமங்கலத்து ஊர் நிர்வாகத்தினர் புன்னியம் என்கிற கிராமத்தினை 600 காசுகள் பெற்றுக்கொண்டு திருநாமத்துக்காணியாக விற்றுக் கொடுத்தச் செய்தியைக் இக்கல்வெட்டுப் பதிவு செய்கிறது.

Summary : On the south wall of the first prākāra in the same temple. Pāṇḍya. Saḍaiyavarmaṉ Sundara Pāṇḍya r.y. 14 ( ). Registers the sale for 600 *kāśu* to the village Puṉṉiyam, by the assembly and Pulippākkam alias Sōḻasikhāmaṇich-chaturvēdimaṅgalam in Kaḷattūr kōṭṭam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கேழ்வி முன்னாக கோற்சடபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௰௩ வதுக்கு எதிராமாண்டு கற்கடக நாயற்று அமர வ–
2. சஷத்து ஸத்தமியும் வெள்ளிக்கிழமையும் ரேவதி நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து களத்தூர்க் கோட்டத்து புலிப்பாக்கமான சோழசிகாமணி சதுறுவேதி மங்கலத்து ஊஹா–
3. ஸஹையோம் இக்கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயில் ஆதி சண்டேசுர தேவர்கன்மி கோயிற் . . . . . விலை ஸ்ரமா-
4. ணம் . . . . . . வது எங்களூர்க்கு வடபிடாகையான ஊர்களில் புன்னியம் நாற்பாற்கு எல்லைக்கு உட்பட்ட விளைநிலம் கொல்லை நிலம் வ . . . .
5. . . . . . விடையாட்டம் நத்தம் திருவிடையாட்ட மனைகளும் துற்கை இறையிலி பிடாரி இறையிலியும் புலிப்பாக்கத்து உடையார் பொன் . . .. ன்ர் தேவதா

6. . . . . மத்துக் காணிகளும் செட்டலூர் பிரான் பட்டன் பட்ட விறுத்தியும் முன்னாள் மருதுழான் உள்ளிட்டார்க்கு . . . . ணியும் ஊர்
7. . . . . . நாற்பாற்கு எல்லைக்கு உள்பட்ட நிலம் திருநாமத்துக்காணியாக விற்றுக்குடுத்துக் கொள்வதான எம்மிலிசைந்த வி . . . . ணம் சா இப்பணம்
8. கைச் செலவறக் கைக்கொண்டு விற்று விலை ப்ரமாணம் பண்ணிக் குடுத்தோம் . . . திருநாமத்துக்காணியாக . . . .

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 215/2024***

மாவட்டம்	: செங்கல்பட்டு	ஆட்சியாண்டு	:-
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:-
ஊர்	: திருக்கச்சூர்	இ.க.ஆ.அறிக்கை	:56/1932-33
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 76 (81)
அரசு	: பாண்டியர்		
அரசன்	: சடையவர்மன் சுந்தரபாண்டியன்		
இடம்	: கச்சபேசுவரர் கோயில் முதல் திருச்சுற்றுத் தெற்குச் சுவர்.		

